விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + XVI
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk


கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 புரட்டாதி 19 ஞாயிற்றுக்கிழமை (06.10.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 291

### கதிரைச் சின்னத்தில் களமிறங்க

# பொதுஜன பெரமுனவுடன் சுதந்திரக் கட்சி கூட்டணி?

### அரசியல் வட்டாரத்தில் பரபரப்பு

(கொழும்பு)

பொதுஜன பெரமுன - சிறிலங்கா சுதந்திரக் கட்சி கூட்டணி பேச்சுவார்த்தை வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதாகவும் கதிரைச் சின்னத்தில் புதிய கூட்டணி அமையப் பெறவுள்ளதாகவும் அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் கதிரைச் சின்னத்தில் இரு கட்சிகளும் புதிய கூட்டணியில் போட்டியிடவுள்ளதாகக் கூறப்படுகின்றது. (15ஆம் பக்கம் பார்க்க)

## செஞ்சோலை பிள்ளைகளை

### வெளியேற உத்தரவு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மலையாளபுரம் கிராமத்தில் உள்ள செஞ்சோலை காணியில் குடியிருக்கும் செஞ் சோலைப் பிள்ளைகளை வரும் 15ஆம் திகதிக்கு முன் காணியை விட்டு வெளியேறுமாறு கரைச்சி பிரதேச செயலகம் அறிவித்துள் ளது.

இது தொடர்பில் 15

## அத்துரலிய ரத்ன தேரர்

### கோத்தாவுக்கு ஆதரவு

(கொழும்பு)

பாராளுமன்றில் சுயாதீனமாக இயங்கும் பாராளுமன்ற உறுப் பினர் அத்துரலிய ரத்ன தேரர், ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு ஆதரவளித்துள் ளார்.

ஐக்கிய தேசிய முன் னணி சார்பில் பாராளு 15

### அடுத்த வாரமே

## புலமைப்பரிசில் பெறுபேறுகள்

(கொழும்பு)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் தொடர்பாக பரீட்சை கள் ஆணையாளர் நாயகத்தினால் முக்கிய தகவலொன்று வெளி யிடப்பட்டுள்ளது.

அதற்கமைய 2019 15

## பிரபாகரனே தமிழ் மொழியையும் இனத்தையும் உலகம் அறிந்து கொள்ள பெருமைப்படுத்தினார்

### யாழில் இயக்குநர் பாரதிராஜா



(யாழ்ப்பாணம்)

தலைவர் பிரபாகரனே தமிழ் மொழியையும் தமிழ் இனத்தை யும் உலகம் அறிந்து கொள்ளும் அளவிற்குப் பெருமைப்படுத்தினார் என தென் இந்திய இயக்குநர் இம யம் பாரதிராஜா யாழில் புகழாரம் சூட்டினார்.

நேற்றையதினம் யாழ். பொது நூலகக் கேட்டோர் கூடத்தில் இடம் பெற்ற வடக்கின் தங்கக்குரல் தெரி வுக்கான போட்டி நிகழ்ச்சியில் பிர தம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற் றும்போதே அவர் இவ் 15

## பெரும்பான்மை வாக்காளர்களின் கருத்து ஜனநாயக கருத்தல்ல

### மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்த லில் பெரும்பான்மையான வாக் காளர்களின் கருத்துக்கள் ஜன நாயக கருத்துக்களாக அமையாது எனத் தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள் ளார்.

தேர்தல்கள்ஆணைக் 15

### ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு

## தேர்தல் ஆணைக்குழுவில் முன்னிலையாக அழைப்பு

(கொழும்பு)

இம்முறை ஜனாதிபதித் தேர் தலுக்காக கட்டுப்பணம் செலுத்தி யுள்ள அனைத்து வேட்பாளர்களும் இன்று தேர்தல் ஆணைக் குழு விற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இன்று பிற்பகல் 2.30 க்கு குறித்த வேட்பாளர் 15

### பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள

## 3 ஆயிரம் சேவையாளர்களை நீக்குவதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

பணிப்புறக்கணிப்பில் ஈடுபட் டுள்ள மூவாயிரம் சேவையாளர் களை சேவையிலிருந்து நீக்குவதற் கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக 15

### ஜனாதிபதித் தேர்தலுக்கான

## கட்டுப்பணம் ஏற்பு இன்று நண்பகலுடன் நிறைவு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கான கட்டுப்பணம் ஏற்றுக் கொள்ளும் நடவடிக்கை 15

## முதற்தடவையாக ஒரே மேடையில்

### ஜனாதிபதி வேட்பாளர்கள்

(கொழும்பு)

இலங்கையின் அரசியல் வரலாற்றில் முதற் தடவையாக ஜனாதிபதி 15

### - ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் -

## தமிழ் அரசியல் கட்சிப் பிரதிநிதிகளை அழைத்து யாழ்.பல்கலை மாணவர் ஒன்றியம் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், தமிழ் கட்சிகளுடன் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

ஜனாதிபதி தேர்தலில் 15

## யுத்தத்தில் தமிழர்களை நாங்கள் கொல்லவில்லை

### ஜனாதிபதி வேட்பாளர் கோத்தா

(கொழும்பு)

யுத்தத்தில் தமிழர்களை தாங் கள் கொன்றதாக கூறப் படுவது தவறான கருத்து 15

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**தென்னம்பிள்ளை விற்பனைக்கு**

கிருஸ்ணபுரம் கிளிநொச்சி எமது விவசாய பண்ணையில் நன்கு தேர்வு செய்து பயிரிட்ட நல் இன தென்னம் பிள்ளைகள் விற்பனைக்கு உண்டு. தாய் மரங்களையும் பார்த்து பெற்றுக்கொள்ளலாம்.

விலை - 100 /- மொத்த விற்பனை 90 /- (C-7792)

தொடர்புகளுக்கு : 077 330 1798

**வீடு வாடகைக்கு உண்டு**

மாம்பழம் சந்திக்கு அருகாமையில் உள்ள கனகரத்தினம் வீதிச் சந்திக்கு அருகில் உள்ள ஒழுங்கையில் வீடு வாடகைக்கு உண்டு. (555)

தொடர்பு : 021 222 6179

**காணி விற்பனைக்கு**

யாழ் A9 பாதையில் 14 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். தரகர் தேவை இல்லை. (549)

Tel : 077 607 8888

**காணி விற்பனைக்கு**

யாழ் நல்லூர் Cross Road இல் 11 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தரகர் தேவை இல்லை. (549)

தொடர்புகளுக்கு : 077 801 5156


# மரண அறிவித்தல்கள்

## கனகரத்தினம் நவரத்தினம்

பிறப்பு 02 ● 12 ● 1937



இறப்பு 03 ● 10 ● 2019

பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் பட்டினசபை வீதி மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் நவரத்தினம் கடந்த *(03.10.2019)* வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினம் - கண்ணகை தம்பதிகளின் அன்பு மகனும், நல்லம்மாவின் (பேபி) பாசமிகு கணவரும், சரவணை - குண்டுமணி தம்பதியினரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று *(06.10.2019)* ஞாயிற்றுக் கிழமை முற்பகல் *11.00* மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (545)

**பட்டினசபை வீதி, மானிப்பாய்.** **தகவல் : குடும்பத்தினர்**

## கணபதி திருநாவுக்கரசு

மலர்வு 28 ● 07 ● 1932



உதிர்வு 04 ● 10 ● 2019

வேலணை முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த கணபதி திருநாவுக்கரசு நேற்று முன்தினம் *(04.10.2019)* வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி - பாக்கியலெட்சுமி தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களான சபாபதி - அன்னமுத்து தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற அன்னலெட்சுமியின் அன்புக் கணவரும், நிமலன் (லண்டன்), கமலினி (யாழ். ப.நோ.கூ சங்கம்), கேதீஸ்வரி (ஆசிரியை - சென்.சாள்ஸ் மகாவித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சியாமினி, சதா - வேல்மாறன் (மிருதங்க வித்துவான்), ஶ்ரீகாந்தன் (சர்வோதயம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சாருமதி,சாரங்கி, சாம்பவி, சதுர்சன், தீபிகா, சங்கவி, அமிர்தினி ஆகியோரின் பாசமிகு பேரனாரும், காலஞ்சென்ற நல்லையா மற்றும் நவரத்தினம் (ஓய்வு நிலை தபாலதிபர்) ஆகியோரின் அருமைச் சகோதரனும், காலஞ்சென்ற அருளாம்பிகை மற்றும் கலாவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், இராஜ இராஜேஸ்வரியின் அன்புச் சித்தப்பாவும் அமரர் வசந்தன் மற்றும் ஜெயந்தன், முகுந்தன் ஆகியோரின் பெரிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 82/4, கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் நாளை *(07.10.2019)* திங்கட்கிழமை காலை *9.00* மணிக்கு நடைபெற்று பூதவுடல் வேலணை சாட்டி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**82/4, கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம்.**
**021 221 7735 (மகள்), 011 574 7793 (சகோதரன்)**
**077 917 3947 (மருமகன்)**

**தகவல் : குடும்பத்தினர்**


**மருதாணி அணிவிக்கப்படும்**

திருமண வைபவங்களுக்கு மற்றும் அனைத்து சுபகாரியங்களுக்கும் வீடுகளுக்கு வந்து மருதாணி அணிவிக்கப்படும். (556)

தொடர்புகளுக்கு
077 674 5452 / 077 693 0010

**பணிநிலை வேண்டுகை**

கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் நாறோ நிறுவனத்தில் செயற்றிட்டமுகாமையாளராக பணியாற்றுவதற்கு அதாவது புதிய செயற்றிட்டங்களை ஆங்கிலத்தில் வரையும் ஆற்றல் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வேதனம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
**விண்ணப்ப முடிவுத் திகதி 15.10.2019**
**தொலைபேசி இல : 021 228 3659,**
**மின்னஞ்சல் முகவரி** - nahrongo@gmail.com (C-7743)

**விஜயதசமியை முன்னிட்டு**
CIMA கற்கை நெறிக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்
செவ்வாய் - 08.10.2019 10.35 A.M
**பதிவுகளுக்கு :** 077 628 4845 / 021 221 6400
**EP Academy**
**286 1/1 பலாலி வீதி, கந்தர்மடம்,**
**யாழ்ப்பாணம்.**
CIMA Registered Centre (C-7799)

EP Academy
Every Little Success

**உடல் எடை குறைய வேண்டுமா?**

- எடை கூடுகிறதா?
- வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
- உடல் எடை குறைகிறதேயில்லை என்கிற கவலையா?

**பால்மா குளிசை**
15 நாட்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்

**தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?**

தலைமுடி வளர வேண்டுமா? பேன் பொடுகு தொல்லையா? முடி கொட்டுகிறதா? இளநரையா? தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா? புதிதாக முடி முளைக்க வேண்டுமா?
பொன்னாங்காணி, கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக் காய்ச்சிய எண்ணெய் குளிசை
இந்த எண்ணெயைப் பாவித்து பயனடைய (551)

**077 210 6155** **221, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

**காரைநகர் கிழவன்காடு கலாமன்றம்**
**யாழ்கிளை**

**புதிய அனுமதியும் நாள் வகுப்பும்**

கிழவன்காடு கலாமன்றத்தின் யாழ் கிளையில் எதிர்வரும் 08.10.2019 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (விஜயதசமி அன்று) பி.ப 5.00 மணிக்கு புதிய அனுமதியும் நாள் வகுப்பும் நடைபெறவுள்ளதால் சகல மாணவர்களும் புதிதாக இணைய விரும்புபவர்களும் அதில் இணைந்து கொள்ளவும்.

**பதிவாளர் : இல , 428,**
**கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.**
**(வண்ணை சிவன் கோவில் அருகாமை)**
**077 578 6638** (C-7798)


## எனது ஆட்சியில் நீதிக்கு முன்னுரிமை – சஜித்

(கொழும்பு)

சட்டத்தின் ஆதிக்கத்தையும், மனித வுரிமைகளையும், நாட்டின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் நோக்குடன் நாங்கள் மேற்கொள்ள வேண்டிய பல முக்கியமான காரியங்கள் இருக்கின்றன என ஜனாதிபதி வேட்பாளர் அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

முதலாவதாக இந்த மூன்று விடயங்களையும் செயற்படுத்தும் நிறுவனங்களின் வியூகங்கள் முழுவதையும் அரசியலுக்கு அப்பால் செயற்படுத்த வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர் வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களிடம் ஒரே மேடையில் உறுதிமொழி பெறும் நிகழ்ச்சியான மக்கள் மேடை நிகழ்ச்சி நேற்று சனிக்கிழமை சுகததாச உள்ளக அரங்கில் இடம் பெற்றது. இந்த நிகழ்வை தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பப்ரல் அமைப்பு நடத்தியது. இதில் கலந்துகொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், விசேடமாக நீதியின் ஆதிக்கத்தை பாதுகாக்க முற்படும் போதும் சில இடையூறுகள் ஏற்படுவதாக குறிப்பிட்டுள்ள அவர், ஒரு சிலர் இதனை பிழையான நோக்கத்துடன் கையாள்வதாக அறியமுடிகின்றது எனவும் குறிப்பிட்டார்.

அத்துடன், எங்கள் மீது அழுத்தங்களையும் பிரயோகிக்கின்றார்கள். அதேபோன்று மனிதவுரிமைகளை பாதுகாத்தல் மற்றும் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முயற்சிகளின் போதும் கடந்த பல தசாப்த காலமாக இந்த பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியேற்பட்டது. எனவே, விசேடமாக இந்த துறைகளில் அரசியல்சார்பு இல்லாமல் சுயாதீனமாக செயற்படக் கூடிய வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் சஜித் பிரேமதாச குறிப்பிட்டுள்ளார். (ஞா)

# நீதிமன்றக் கட்டளை வெற்றுக் காகிதமா?

# மதவெறி பிடித்த ஞானசாரதேரரைக் கைது செய்!

## யாழில் கண்டனப் போராட்டம்









(யாழ்ப்பாணம்)

**முல்லைத்தீவில் நீதிமன்றக் கட்டளையை மதிக்காது செயற்பட்ட மதவெறி பிடித்த ஞானசார தேரரைக் கைது செய்யக் கோரி நேற்றுக் காலை யாழ்.மத்திய பேருந்து நிலையத்துக்கு முன்பாக கண்டனப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

கடந்த மாதம் முல்லைத்தீவு பழைய செம்மலை நீராவியடி பிள்ளையார் ஆலயச் சூழலில் பௌத்த பிக்குவின் உடலை நீதிமன்றக் கட்டளையை மீறி ஞானசார தேரர் உள்ளிட்ட பௌத்த பிக்குகள் தகனம் செய்தனர்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் இனங்களுக்கிடையில் வன்முறையைத் தோற்றுவிக்க கங்கணம் கட்டும் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரைக் கைது செய்யுமாறு கோரியும் குறித்த கண்டனப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இப் போராட்டத்தில் பேதமின்றி அனைத்துத் தரப்பினரும் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. (இ-10-101)

# காவி உடையை கழற்றி விட்டு சண்டித்தனத்தைக் காட்டினால் நாங்களும் பதிலடி கொடுப்போம்

## ஞானசார தேரருக்கு அடைக்கலநாதன் எச்சரிக்கை






(யாழ்ப்பாணம்)

நீதிமன்றத்தை அவமதித்த ஞானசார தேரர் காவி உடையை கழற்றிவிட்டு சண்டித்தனத்தைக் காட்ட வேண்டும். காவி உடையை கழற்றிவிட்டு சண்டித்தனத்தைக் காட்டினால், நாங்களும் அதற்கான பதிலைக் கொடுப்போம் என தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு நீதிமன்றத்தின் கட்டளையை அவமதித்து, தேரரின் உடலை இந்து ஆலய வளாகத்தில் தகனம் செய்த ஞானசார தேரரை கைது செய்ய வலியுறுத்தி நேற்று யாழ்.நகரில் கண்டனப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்தப் போராட்டத்தின் நிறைவில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஞானசார தேரர் நீதிமன்றத்தை அவமதித்தது மாத்திரமன்றி, எமது பாரம்பரியமான இந்து ஆலயத்திற்கு அருகாமையில் சவாலுடன் நின்று உடலை தகனம் செய்ததைக் கண்டித்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

எம்மைப் பொறுத்தமட்டில் காவி உடை புனிதமானது, காவி உடையைக் கழற்றிவிட்டு ஞானசார தேரர் சண்டித்தனத்தைக் காட்ட வேண்டும். ஒரு சில பௌத்த பிக்குகள் காவி உடை அணிந்து கொண்டு, தமிழினத்தை மிக மோசமாக நடத்த எத்தனித்துக்கொண்டிருக்கின்றார்கள்.

ஆயுதப் போராட்டம் மௌனித்த பின்னர், தமிழ் மக்கள் அனைவரும் அநாதரவாக நிற்பார்கள் என சிங்கள பௌத்த பிக்குகள் எண்ணுகின்றார்கள் போல் உள்ளது.

அகிம்சை போராட்டம் என்பது தமிழ் மக்கள் இலங்கைக்கு சொல்லித்தந்த வரலாறு அல்ல. ஆயுதப் போராட்டத்தின் மூலம் எமது மக்கள் தென்னிலங்கையை வாய் திறக்காதவண்ணம் வைத்திருந்தார்கள்.

ஆயுதப் போராட்டம் முடிவடைந்த பின்பு தமிழ் மக்களை எந்தவகையிலும் வழிநடத்தலாம் என சிங்கள பௌத்த பிக்குகள் கருதுகின்றார்கள்.

ஆகவே, மக்கள் போராட்டம் நிச்சயமாக வெடிக்கும். எனவே, நீதிமன்றம் ஞானசார தேரருக்கு தண்டனை வழங்க வேண்டும். நீதிமன்றால், பிணையில் விடுவிக்கப்பட்ட நபர் ஒருவர் காணாமல் போய்விட்டால், அந்த நபருக்கு பிணை நின்றவரை 15 நாட்கள் காவலில் வைக்கின்றார்கள். நீதிமன்றத்தை சாதாரண ஒரு குடிமகன் அவமதித்தால், கடும் தண்டனைகள் வழங்கப்படும் சந்தர்ப்பங்கள் உள்ளன.

எனவே, நீதிமன்றம் மௌனமாக இருக்கக்கூடாதென்பது என்னுடைய கோரிக்கை.

ஞானசார தேரர் தனது காவி உடையை கழற்றிவிட்டு சண்டித்தனத்திற்கு தயாரானால், நாங்களும், சண்டித்தனத்திற்கான பதிலைச் சொல்ல தயாராக உள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10-101)

## சமஷ்டிக்கு எதிரானவர்கள் நாட்டில் அதிகம்



## கோத்தபாயவுக்கு 95 வீதமானவர்கள் ஆதரவு - பிரசன்ன

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் வெளிப்படுத்துகின்ற கருத்துக்கள் கோத்தபாயவை ஆதரிப்பதை உறுதி செய்வதாக மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

கம்பஹாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"தற்போதைய சூழ்நிலையில் பார்க்கின்றபோது 95 வீதமானவர்கள் கோத்தபாயவிற்கு ஆதரவளிப்பது உறுதியாகியுள்ளது.

ஐ.தே.கவின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸவுக்கு முன் வைத்துள்ள நிபந்தனைகள் தற்போது ஒவ்வொன்றாக வெளிவர ஆரம்பித்துள்ளன. மேலும் சம்டிக்கு எதிரானவர்களே நாட்டில் அதிகம் உள்ளனர்.

இதேவேளை ஐக்கிய தேசியக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ, தற்போது இறுக்கமான சூழலில் அகப்பட்டுள்ளார்" என பிரசன்ன மேலும் தெரிவித்தார். (இ-7)

# கர்ச்சித்த இலங்கை சிங்கங்கள் பாகிஸ்தானுக்கு நேற்று மரண அடி



இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான முதல் ரி-20 போட்டியில் இலங்கை அணி 64 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றுள்ளது.

இரு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடர் முடிவடைந்துள்ள நிலையில், ரி-20 தொடரின் முதல் போட்டி நேற்று லாகூரில் இடம்பெற்றது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த இலங்கை அணி சார்பில் ஆரம்ப வீரர்களாக களமிறங்கிய தனுஷ்க குணதிலக்க மற்றும் அவிஷ்க பெர்னாண்டோ நல்ல ஆரம்பத்தை பெற்றுக் கொடுத்தனர்.

இதனால் இலங்கை அணி 5 ஓவர்களில் 50 ஓட்டங்களை பெற, அதிரடியாக துடுப்பெடுத்தாடி வந்த தனுஷ்க குணதிலக்க 7.5 ஆவது ஓவரில் ஆறு ஓட்டம் விளாசி அரைச் சதம் கடந்தார்.

தொடர்ந்தும் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்திய அவர் 9.4 ஆவது ஓவரில் சடப் கானின் பந்து வீச்சில் மொத்தமாக 38 பந்துகளை எதிர்கொண்டு ஒரு ஆறு ஓட்டம் 8 நான்கு ஓட்டம் அடங்கலாக 57 ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார்.

இலங்கை அணி 10 ஓவர்கள் முடிவில் ஒரு விக்கெட்டினை இழந்து 84 ஓட்டங்களை குவித்தது. பின்னர் 12 ஆவது ஓவரில் 100 ஓட்டங்களைப் பெற்றது.

இதன் பின்னர் 14.4 ஆவது ஓவரில் அவிஷ்க பெர்ணான்டோ மொத்தமாக 33 ஓட்டத்துடன் ரன்அவுட் முறையில் ஆட்டமிழக்க இலங்கை அணி 15 ஓவர்கள் முடிவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 126 ஓட்டங்களை குவித்தது. இறுதியாக இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 165 ஓட்டங்களைப் பெற்றது.

இந்நிலையில், 166 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணிக்கு இலங்கை அணியின் பந்துவீச்சாளர்கள் கடும் நெருக்கடியை கொடுத்தனர்.

அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்த பாகிஸ்தான் அணி 17.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 101 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக்கொண்டது. இதனால் இலங்கை அணி 64 ஓட்டங்களால் வெற்றியை சுவீகரித்தது.

பாகிஸ்தான் அணி சார்பாக இப்திகார் அஹமட் 25 ஓட்டங்களையும், அணித்தலைவர் சர்பராஸ் அஹமட் 24 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக்கொண்டனர். ஏனைய வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக, நுவான் பிரதீப் மற்றும் இசுரு உதான ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளை கைப்பற்றினர். அத்துடன் வனிந்து ஹசரங்க 2 விக்கெட்டுகளையும், குசுன் ராஜித ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இந்த வெற்றியுடன் இலங்கை அணி ரி-20 போட்டியில் 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.




## பணியாளர்கள்தேவை

நெல்லியடியிலுள்ள எமது நிலையங்களுக்கு தகுதியான பெண் பணியாளர்கள் தேவை

1. பொதுப்பணியாளர் -2 (பகுதி நேரம்)
   A/L பயின்றவர்கள், வேலை முன் அனுபவம் பொதுஅறிவு, அவதானிப்புத் திறன்
2. அழகு நிலையப் பணியாளர் -2 (முழுநேரம்)
   அழகுக்கலை தொடர்பான அறிவு, அனுபவம்.
3. சுத்திகரிப்பு பணியாளர்-1 (பகுதி நேரம்)

★ வேலை தொடர்பான விபரிப்புக்கள் நேரில் மட்டுமே வழங்கப்படும்

6ம் 7ம் திகதிகளில் (ஞாயிறு, திங்கள்) காலை 10 முதல் நேரடியாக வருகை தரவும்

தூரிகை
மத்திய கல்லூரி வீதி
நெல்லியடி

★ அலுவலகத் தொடர்பு 0779143171

(C-7801)



## வீடு விற்பனைக்கு

சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு மிக அண்மையில் (200M இற்கு உட்பட்ட தூரத்தில் சாரதா வீதியில்) 1 1/2 பரப்புக் காணியில் அமைந்த நவீன பாணியிலான வீடு உடன் விற்பனைக் குண்டு.

(559) தொடர்பு:- 0779581741


## இறுதிப்போட்டிக்கு முன்னேற்றம்



ஜப்பான் பகிரங்க டென்னிஸ் தொடரின் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு அரையிறுதிப் போட்டியொன்றில், அவுஸ்ரேலியாவின் ஜோன் மில்மேன் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

நேற்று (சனிக்கிழமை) நடைபெற்ற இன்னொரு அரையிறுதிப் போட்டியில், அமெரிக்காவின் ரெய்லி ஓபெல்காவும், அவுஸ்ரேலியாவின் ஜோன் மில்மேனும் மோதிக் கொண்டனர்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட் டியில், 6-3, 7-6 என்ற நேர் செட் கணக்குகளில் ஜோன் மில்மேன் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

இன்று நடைபெறும் இறுதிப் போட்டியில், ஜோன் மில்மேன், செர்பியாவின் முன்னணி வீரரான நோவக்ஜோகோவிச்சை எதிர்கொள்ளவுள்ளார்.

## மரண அறிவித்தல்

திருமதி
### பேரம்பலம் சிவகாமசுந்தரி



பிறப்பு:— 02.17.1939
இறப்பு:—04.10.2019

காரைநகர் களபூமி தன்னை (பொன்னாவளை)யைப் பிறப்பிடமாகவும் வவுனியா புகையிரத நிலைய வீதியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி பேரம்பலம் சிவகாமசுந்தரி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நள்ளிரவு 04.10.2019 இயற்கை எய்தி இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி ஆறுமுகம்-தெய்வானை தம்பதிகளின் மகளும் திரு. திருமதி வேலுப்பிள்ளை-கதிராசிப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும் சிங்கப்பூரில் பிறந்த திரு. பேரம்பலம் அவர்களின் அன்பு மனைவியும் சாந்தி (பிரான்ஸ்), சிவசுந்தரம் (பிரித்தானியா) வசந்தி (வெள்ளவத்தை), சுகந்தி (பிரான்ஸ்) உதயரூபினி, காலஞ்சென்ற ஜெயமாலினி ஆகியோரின் அன்புத் தாயாரும் தம்பி தம்பிராசா (தலைவர்- அடக்குமுறைகளுக்கு எதிரான ஜனநாயக அமைப்பு, உப தலைவர் - தமிழ்த் தேசியப் பணிக்குழு - கொழும்பு), காலஞ்சென்ற ரஞ்சித் குமாரசிறி, ஜெயகௌரி (பிரித்தானியா), சாந்தகோபாலன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், நடராசா, சிதம்பரம் ஆகியோரின் சகோதரியும் குந்தவை, திருவளவன், அபிமன் தம்பி (Engineering student - UCL - London) விஜயதர்சினி, விஜயடயானா ஆகியோரின் அம்மம்மாவும் நஞ்சிகாவின் அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.10.2019) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தச்சநாதன்குளம் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும் என்பதை அறியத் தருகின்றோம். இதனை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- தம்பி தம்பிராசா
தொலைபேசி : 0777301961

(557)

## மரண அறிவித்தல்

அமரர்
### சண்முகராஜா விஜேந்திரா



யாழ்ப்பாணம் கில்னர் லேனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகராஜா- விஜேந்திரா அவர்கள் நேற்று (05.10.2019) சனிக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற சண்முகராஜா - கைலாசபதி தம்பதியினரின் அன்பு மகனும் கமலாதேவி, ஜெகதீஸ்வரராஜா, இந்திரகுமார் (உமா ஸ்ரோஸ்), வாலாம்பிகை, காலஞ்சென்ற ஆனந்தவேல், கைலாசநாதன், உமாதேவி ஆகியோரின் அன்புச்சகோதரனும் காலஞ்சென்ற இராமானந்தம் பிள்ளை, நிர்மலாதேவி, செல்வராணி, இதயகுமார், சசிரேகா காலஞ்சென்ற திருச்செல்வம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜனகன்- கஸ்தூரி, ஜனார்த்தனன்- வீஜினி, நிஷாந்தினி - அரவிந்தன், கார்த்திகேயன் - தனுஜா, கபிலேஸ்வரன், ஜெயகௌரி- மகேஷன், கௌசல்யா-திபாகரன், கௌதமி-சதேசன்னா, கேசினி - அல்நாத், ஆனந், விஜித் ஆகியோரின் சித்தப்பாவும், பெரியப்பாவும் ஹரீந்திரா, கஸ்தூரி, கோபிநாத், அசோக்நாத், நவீனன் ஆகியோரின் மாமனாரும் சிறிகரிணி, அனுஸ்ரீ, ஹரீஸ்வரன், லக்ஷனா, தீபிகா, தன்யஸ்ரீ, விஸ்மாயா, கைலாஷிகா ஆத்விகா அனீஷன் அக்ஷரா, துஷாரா ஆகியோரின் அன்புப்பேரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (06.10.2019) ஞாயிற்றுக்கிழமை பி.ப.3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்,

187/8 கில்னர்லேன்,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம். 0212227482

தகவல்: குடும்பத்தினர்

(554)

## காலி முகத்திடலில்

# இதுவரை மக்கள் கண்டிராத ஐ.தே.கவின் பாரிய பேரணி



(கொழும்பு)

இலங்கையில் இதுவரை காலமும் காணாத பாரிய மக்கள் பேரணி 10 ஆம் திகதி வியாழக்கிழமை காலி முகத்திடலில் இடம் பெறவுள்ளது.

சுமார் 3 இலட்சம் மக்களை உள்ளடக்கிய இந்தப் பேரணி ஐ.தே.கவின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் ஆதரவாளர்களின் நம்பிக்கையையும் அவரது வெற்றியை உறுதி செய்யும் பேரணியாகவும் அமையும் என்று விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் 10 ஆம் திகதி கொழும்பு - காலி முகத்திடலில் பாரிய மக்கள் பேரணி இடம்பெறவுள்ளது. காலி முகத்திடலில் அதிகபட்சம் ஒன்றரை இலட்சம் மக்கள் மாத்திரமே ஒன்றிணைய முடியும். எனினும் எமது பேரணியில் சுமார் 3 இலட்சம் மக்கள் பங்குபற்றவுள்ளனர்.

எனவே காலி முகத்திடலுடன் அந்தப் பகுதியிலுள்ள பிரதான வீதியையும் பயன்படுத்த எதிர்பார்த்துள்ளோம். இது தொடர்பில் பொலிஸ் தலைமையகத்துக்கு அறிவித்துள்ளோம்.


பிற்பகல் 2 மணியளவில் கூட்டம் ஆரம்பமாகவுள்ளதால் நண்பகல் 12 மணி முதல் காலி முகத்திடலை அண்மித்த வீதிகள் மூடப்படலாம்.

இதனால் அங்கு கடும் வாகன நெரிசல் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது என்பதால் மக்கள் தமது போக்குவரத்துக்களை ஒழுங்கு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். இது தொடர்பில் பொலிஸ் தலைமையகத்தால் விசேட அறிவித்தல் விடுக்கப்படும்.

சஜித் மீதான மக்களின் நம்பிக்கையையும், அவரது வெற்றியையும் உறுதி செய்யும் இந்தப் பேரணியால் கொழும்பிலுள்ள மக்கள் போக்குவரத்து உள்ளிட்ட பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க நேரிடும் என்பதால் எமது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தமிழ் மக்களின் கோரிக்கைகளுக்கு உத்தரவாதமளிப்பவருக்கே ஆதரவு

## துரைராசசிங்கம் கூறுகிறார்



(திருகோணமலை)

தமிழ் மக்களின் கோரிக்கைகளுக்கு உத்தரவாதம் அளிக்கும் ஒருவருக்கே ஆதரவு வழங்குவோமென இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கி.துரைராசசிங்கம் தெரிவித்தார்.

திருகோணமலையிலுள்ள தமிழ் அரசுக் கட்சியின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"இலங்கையில் புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது.

பல வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தி விட்டார்கள்.

எமது கட்சியைப் பொறுத்தவரையில் நாங்கள் எல்லாத் தேர்தல்களிலும் வலியுறுத்துகின்ற எமது இனப்பிரச்சினை தொடர்பான தீர்வு என்கின்ற விடயமே பிரதானமானது.

இந்த ஜனாதிபதித் தேர்தலிலும் இதுவே எமது பிரதான கோரிக்கையாக இருக்கும்.

அதேவேளை முக்கிய கட்சிகளின் வேட்பாளர்களின் தேர்தல் அறிக்கைகள் எவ்வாறு இருக்கின்றன என்பது தொடர்பாக கூடுதல் அக்கறை கொள்வோம்.

வடக்கு- கிழக்கில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது குறித்து பேச்சுவார்த்தைகள் இடம் பெற்று வருவதாக அறிகின்றோம்.

எமது தலைவரையும் இது தொடர்பாக அணுகியிருப்பதாக அறிகின்றோம்.

ஆனால் எங்களிடம் அவ்வாறான அபிப்பிராயம் இல்லை" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

20 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர். பசுபதி தங்கமயில் (ராசு)

(சிற்பக்கலைஞர்)

திதி:- அட்டமி (06.10.2019)

தோற்றம் 26 . 08 . 1946

மறைவு 17 . 10 . 1999



(C-7788)

ஆண்டுகள் இருபது மறைந்தாலும்
என்றும் உங்கள்
நினைவுகளைச் சுமக்கும்

போக்காலை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

குடும்பத்தினர்

## இராசி பலன்

**மீனம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மேடம்:** பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, உறவினர்களிடையே ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள், பயணங்களால் பலனுண்டு.

**இடபம்:** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், அடுத்தவர்களின் விவகாரங்களில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது.

**மிதுனம்:** குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, நட்பு வட்டம் விரிவடையும் நாள்.

**கும்பம்:** உன்னதமான வாழ்வுக்கு வழிகோலுவீர்கள், பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

| | | | |
|---|---|---|---|
| | | | ராகு |
| | இராசி பலன் | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>மிருகசீரிடம்,.<br>திருவாதிரை | | |
| சனி, சந், கேது | குரு | சுக், புத | சூரி, செவ் |

06.10.2019

புரட்டாதி 19, ஞாயிற்றுக்கிழமை

சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு

அட்டமி பிற்பகல் 3.29 மணிவரை

பூராடம் முன்னிரவு 7.59 மணிவரை

சுபநேரம் 9.02-10.32 மணிவரை

இராகுகாலம் 4.32-6.02 மணிவரை

அட்டமி-நவமி

வளவன்

**கடகம்:** வழிபாடு சிறப்பினைத் தரும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், மறைமுக எதிர்ப்புகள் அகலும், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**மகரம்:** வீட்டை அழகுபடுத்துவதில் ஆர்வம் காட்டுவீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள்.

**சிம்மம்:** உள்ளம் மகிழும் வகையில் சம்பவங்கள் இல்லத்தில் இடம் பெறலாம், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள்.

**தனுசு:** மற்றவர்களின் வியாக்கியானங்களை மறந்து செயற்படுவது நல்லது, இரவு-பகல் பாராது பாடுபடுவீர்கள், ஆரோக்கியத்தில் அக்கறை கூடும், ஆன்மீக நாட்டம் கூடும்.

**விருச்சிகம்:** தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், உங்களின் வார்த்தையை பலரும் கேட்டு நடக்க முன்வருவர், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**துலாம்:** எடுத்த காரியத்தை முடிக்க சகோதர வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கலாம், சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், சுறுசுறுப்புடன் செயற்படுவீர்கள், போசன சுகமுண்டு.

**கன்னி:** பேச்சில் கனிவு பிறக்கும், பொருளாதார நிலை உயர வழி வகை செய்வீர்கள், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

# இனந்தெரியாதோர் தாக்குதல் இருவர் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

துவிச்சக்கர வண்டியில் சென்ற வேளை இனந்தெரியாதவர்களின் தாக்குதலுக்குள்ளாகி இருவர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதில் கொடிகாமம் அல்லாரை வடக்கைச் சேர்ந்த தனுசன் (வயது-21), கொடிகாமம் வெள்ளாம் போக்கட்டியைச் சேர்ந்த அருள்நேசன் (வயது-30) ஆகியோரே காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். (இ-5-10-114)

# விநியோகத்தர்களுடன் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் பொருட்களை விநியோகிக்கும் வர்த்தகத்தில் ஈடுபடும் விநியோகத்தர்கள் (Distributers) எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக அவசரமாகக் கலந்துரையாட வேண்டி இருப்பதால் எதிர்வரும் 09.10.2019 புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இல-165, மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள யாழ். வணிகர் கழகப்பணி மனைக்கு சகல விநியோகத்தர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு யாழ்.வணிகர் கழகம் கேட்டுக் கொண்டது. (இ-5)

# நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை 7 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணியளவில் அதிபர் ரி.வரதன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயாளர் இ.இளங்கோவன் கலந்து கொள்வார். (இ-5)




# வடமாகாண வீதிப் பாதுகாப்பு வாரம் நாளை நடைபவனியுடன் ஆரம்பம்

## சாரதிகளுக்கு இலவச மருத்துவ பரிசோதனை



(யாழ்ப்பாணம்)

வடமாகாண வீதிப் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு முதன் முறையாக வடமாகாணத்திலுள்ள அரச அலுவலகங்களைச் சேர்ந்த சாரதிகளின் உடற் தகுதிக்கான இலவச மருத்துவப் பரிசோதனை நடத்தப்படவுள்ளதாக வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.


நாளை 7 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதிவரை நடைபெறவுள்ள வடமாகாண வீதி பாதுகாப்பு வாரம் தொடர்பிலான கூட்டம் நேற்று முன்தினம் ஆளுநர் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது. இதன் போது ஆளுநர் கருத்துத் தெரிவிக்கையில்,

வீதி பாதுகாப்பு வாரத்தின் ஆரம்ப நாளில் யாழ்.மாவட்டத்திலுள்ள சுமார் 500 அரச அலுவலக சாரதிகளின் உடற் தகுதிப்பரிசோதனை இடம்பெறவுள்ளதுடன் வடமாகாணத்தின் ஏனைய மாவட்டங்களிலும் இந்த உடற் தகுதிப்பரிசோதனை சாரதிகளுக்கு நடத்தப்படவுள்ளது.

மேலும் ஆளுநரின் வழி நடத்தலில் வடமாகாண ஆளுநர் செயலகம், வடமாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை மற்றும் வடமாகாண வீதி பாதுகாப்புச் சபை ஆகியன இணைந்து வீதிப்பாதுகாப்பு வாரத்தின் முதல் நாளான நாளை யாழ்.மாவட்ட செயலகத்திலிருந்து துரையப்பா விளையாட்டு மைதானம் வரையான விழிப்புணர்வு நடைபவனி எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9 மணியளவில் ஆரம்பமாகும். இதன் போது ஏனைய மாவட்டங்களிலும் இந்த நடைபவனி அந்தந்த மாவட்டச் செயலகங்களின் ஏற்பாட்டில் இடம்பெறும் என ஆளுநர் தெரிவித்தார்.

அத்துடன் இவ்வாரத்தின் போது மாவட்ட ரீதியில் இரண்டு சாரதிகள் வீதம் தெரிவு செய்யப்பட்டு பதக்கங்களும் ஏனைய சாரதிகளுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இவ்வாரத்தினை முன்னிட்டு பாடசாலை மட்டங்களில் போட்டிகளும் வீதி நாடகங்கள் உள்ளிட்ட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதுடன் வீதி விபத்து சம்பந்தமான விழிப்புணர்வு தொடர்பிலான குறுந்திரைப்படம் மற்றும் துணுக்குப் போட்டிக்கான ஆக்கங்களை அனுப்பி வைப்பதற்கான இறுதித்திகதி எதிர்வரும் 10 ஆம் திகதியாக பிற்போடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)



சிறுவர் தினத்தை முன்னிட்டு யாழ்.போக்கட்டி அ.த.க. பாடசாலையில் அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் கடந்த முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை சிறுவர் தின நிகழ்வுகள் இடம்பெற்றன. (படங்கள்:-சுபேசன்)

# இந்தியக் கடற்படையினர் கைது செய்த யாழ்.மீனவர்களை மீட்டுத்தருமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

எழுவைதீவுக்கு மேற்கு பக்கமான கடற்பரப்பில் மீன் பிடிக்கச் சென்ற யாழ்ப்பாணம் மீனவர்கள் 18 பேர் இந்தியக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களின் உறவினர் ஒருவர் தெரிவிக்கையில்,

படகில் மீன்பிடிக்கச் சென்ற குறித்த 18 பேரும் கடந்த வியாழக்கிழமை காலை 6.30 மணியளவில் இந்தியக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்து தொலைபேசியில் படம் ஒன்று தமக்கு அனுப்பப்பட்டதாகக் கூறினார்.

இந்நிலையில் தமது உறவினர்களைப் பாதுகாப்பாக மீட்டு வருவதற்கு யாழ். மாவட்ட நீரியல் வளத்துறையினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்டவர்கள் கேட்டுக் கொண்டனர். (இ-10)

# கொடுப்பனவு குறித்த விபரங்களை 9 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பவும்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் அரச நிர்மாண ஒப்பந்த வேலைகளை நிறைவுபடுத்தி, இறுதிக் கொடுப்பனவு சிட்டைகளைச் சமர்ப்பித்து நீண்டகாலமாகியும் உரிய கொடுப்பனவுகள் கிடைக்கப்பெறாத அனைத்து அங்கத்துவ ஒப்பந்தகாரர்களும் அவை தொடர்பான அனைத்து விபரங்களையும் எதிர்வரும் 09.10.2019 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.

மின்னஞ்சல்: ncaslnb 2014 @gmil.com

அலுவக முகவரி: இல.54, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம். மேலும் விபரங்களுக்கு அலுவலக தொலைபேசி இலக்கம் 021 221 7567 உடன் தொடர்பு கொள்ளவும் என நிர்வாக உத்தியோகத்தர் அறிவித்தார். (இ-5)

# மூன்று விபத்துக்களில் ஐவர் படுகாயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற மூன்று விபத்துச் சம்பவங்களில் ஐவர் படுகாயமடைந்தனர். சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு முன்பாக இரவு 8 மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள்-துவிச்சக்கரவண்டி விபத்தில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த சாவகச்சேரி தபால் கந்தோர் வீதியைச் சேர்ந்த சி.தங்கரூபன் (வயது-62) மற்றும் மோட்டார் சைக்கிளில் பயணித்த மீசாலையைச் சேர்ந்த இ.ரமேஷ் (வயது-20) ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

அத்துடன் இரவு 8.15 மணியளவில் சாவகச்சேரி புளியடிச் சந்திப் பகுதியில் ஏ-9 வீதியில் இடம்பெற்ற ஆட்டோ-மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த சரசாலையைச் சேர்ந்த வ.ரமேஷ்குமார் (வயது-28) மற்றும் ஆட்டோ சாரதியான அல்லாரையைச் சேர்ந்த த.தர்மபாலன் (வயது-48) ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். அத்துடன் மோட்டார் சைக்கிளுக்கு குறுக்கே நாய் பாய்ந்ததில் விபத்துக்குள்ளான பாலாவி வடக்கைச் சேர்ந்த மதுவதனி (வயது-26) என்பவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். இந்த விபத்துக்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். சாவகச்சேரிப் பகுதியில் அண்மைக்காலமாக விபத்துச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5-30)

# தேர்தல் காலம் நிறைவடைந்த பின்னர் செயற்றிட்ட உதவியாளர்களுக்கு நியமனம்

## அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி தெரிவிப்பு



(சாவகச்சேரி)

தேர்தல் காலம் நிறைவடைந்த பின்னர் பயிலுநர் செயற்றிட்ட உதவியாளர்களை உள்வாங்குவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதாக தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள் மீள்குடியேற்றம் புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

கொடிகாமம் பகுதியில் நேற்று இடம்பெற்ற வாழ்வாதார உதவித் திட்டப் பொருட்கள் கையளிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

செயற்றிட்ட உதவியாளர்களாக யாழில் 999 பேருக்கு கடிதங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. குறித்த நியமனத்திற்கு தற்போது சில தடைகள் உள்ள போதிலும் அவை எல்லாம் தேர்தல் காலம் நிறைவடைந்ததும் சரி செய்யப்பட்டு அவர்களை உள்ளெடுப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

யாழில் அண்மையில் 1300 பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டது. குறித்த நியமனம் கிடைத்ததன் மூலம் அபிவிருத்தி நீரோட்டத்தில் அவர்களும் இணைந்து செயலாற்ற சந்தர்ப்பம் கிடைத்தது.

அத்துடன் வடக்கில் 1016 பேர் தொண்டர் ஆசிரியர்களாக உள்வாங்கப்பட்டனர்.

இவை சிறிய வேலைத் திட்டங்களாகக் காணப்படுகின்ற போதிலும் இதன் பலாபலன்கள் நீண்ட காலத்திற்கு நிலைத்து நிற்கக்கூடியவை என அவர் மேலும் தெரிவித்தார்.

யாழில் செயற்றிட்ட உதவியாளர் நியமனம் கிடைக்கப்பெற்று இடைநிறுத்தப்பட்டோர் அமைச்சின் செயலாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்ததுடன் தேர்தல் முடிவடைந்த பின்னர் தமக்கு குறித்த நியமனம் கிடைக்கும் என்ற உறுதிமொழிக்காக காத்திப்பதாகவும் சுட்டிக் காட்டியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5-30)

# சட்டவிரோத மீன்பிடி வலைகள் கடற்படையால் கண்டுபிடிப்பு

(திருமலை)

சட்டவிரோத மீன்பிடிக்காக பயன்படும்இரண்டுசட்டவிரோதமீன்பிடி வலைகளை கடந்த 3 ஆம் திகதி திருகோணமலை , வெருகல், முகத்துவாரம் கடல் பகுதியில் மற்றும் திருகோணமலை இரக்கண்டி கடல்பகுதியில்வைத்து கடற்படை கண்டு பிடித்துள்ளது.

அதன்படி, திருகோணமலை, வெருகல், முகத்துவாரம் கடல் பகுதி மற்றும் திருகோணமலை, இரக்கண்டி கடல் பகுதி ஆகியவற்றில் கிழக்கு கடற்படை கட்டளை நடத்திய தேடுதல் நடவடிக்கைகளின் போது, இரண்டு சட்டவிரோத மீன்பிடி வலைகள், ஒரு டிங்கி படகு மற்றும் பல மீன்பிடிப் பொருட்கள் ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டன.

குறித்த வலைகள், ஒரு டிங்கி படகு மற்றும் மீன்பிடி உபகரணங்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக திருகோணமலை மீன்வளத்துறை உதவி இயக்குநரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாக கடற்படை தெரிவித்தது. (ஜ)

# மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட ஒருவர் கைது

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாமிமலை ஓல்டன் தோட்டத்தில் சட்டவிரோதமான முறையில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட ஒருவரை சந்தேகத்தின் பேரில் மஸ்கெலியா பொலிஸார் கைது செய்தனர். இச்சம்பவம் தொடர்பாக மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவிக்கையில்,

பொலிஸ் நிலையத்திற்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய நேற்று முன்தினம் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் சிலர் தப்பி ஓடியதாகவும் ஒரு சந்தேக நபர் மாணிக்கக்கல் அகன்ற மண் பொதி ஒன்றைக் கொண்டு செல்லும் போது கைது செய்யப்பட்டார். (ஜ)

# சு.க.கூட்டணி அமைக்குமாயின் அது பெரமுனவுடன் மட்டுமே

## தயாசிறி திட்டவட்டம்



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டணி அமைக்குமாயின் அது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் மட்டுமேயாகும். ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒருபோதும் கூட்டணிக்கு நாம் தயாரில்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்தார்.

பொதுச் சின்னத்தில் களமிறங்க இன்னமும் வாய்ப்புக்கள் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாட்டை முன்வைக்கையில் அவர் இதனைக் கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியும் பொதுவான சின்னத்தில் களமிறங்க முடியும். புதிய சின்னத்தில் களமிறங்க இன்னமும் வாய்ப்புக்கள் உள்ளன, அதேபோல் சின்னத்தை மாற்றுவதில் எந்தவித சட்ட சிக்கல்களும் இல்லை.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் தாமரை மொட்டுச் சின்னத்தில் களமிறங்குவதாக தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் தெரிவித்து கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

அவ்வாறு இருக்கையில் நாம் அவர்களுடன் பொதுவான சின்னத்தில் பயணிப்பது குறித்து கேள்விகள் எழுகின்றது. ஆனால் கட்சியின் சின்னத்தை மாற்றிக் கொள்ள முடியும்.

அதற்கான அனுமதி இருப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழு எமக்கு அறிவித்தது. நாம் சட்டத்தை ஆராய்ந்தே பேசுகின்றோம்.

எனவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் பொதுஜன பெரமுனவும் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டுமாயின் பொதுவான சின்னத்தில் மட்டுமே களமிறங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


விற்பனைக்கு

HITACHI EXCAVETOR 120
YEAR 1999
JCB
YEAR 1990
REGISTRATION 2003

தொடர்பு:-
077 480 1734 (544)

வைத்தியம்

தலைமுடி உதிர்தல், முள்ளந்தண்டு பிரச்சினை, பாரிசவாதம், சலரோகம், உடல்பருமன் குறைத்தல் அல்லது கூட்டுதல் (வயிறு, மார்பு, கை) ஆண்மைக் குறைபாடுகள், குழந்தையின்மை போன்றவற்றிற்கு சிகிச்சை வழங்கப்படும். (515)

தொடர்பு:- Shan's Health Care
225, K.K.S. Road Kokuvil
T.p: 077 035 7307

வீடு விற்பனைக்கு

யாழ். றக்கா றோட், றக்கா ஒழுங்கையில் 3 பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்கு.

தொடர்புகள்:-
மணியம்
077 603 5769 (492)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,021 567 1532

சமையலாள் தேவை

வவுனியா நகரில் அமைந்துள்ள ஹோட்டல் ஓவியாவிற்கு இலங்கை, இந்திய, சைனீஸ் உணவு வகைகள் மற்றும் கொத்துரொட்டி வகைகள் தயாரிக்கக் கூடிய திறமையுள்ள குறைந்தது 05 வருட முன் அனுபவமுள்ள சமையலாளர்கள் (ஆண்/பெண்) உடன் தேவை.
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: இல.47, மில் வீதி, வவுனியா.

தொலைபேசி இலக்கம்: 024 222 7959/69,
077 366 0828 (488)

ஓம் ஸ்ரீ சிவபார்வதி ஜோதிட நிலையம்
ஓலைச்சுவடிகள் மூலம் காண்டம் வாசிக்கப்படும்

நாவலர் வீதி, கைலாசப் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில்

திருமணத்தடை, புத்திரபாக்கியம்/ புத்திரபாக்கியத்தடை, தொழில் வியாபாரம் தடைகள், வெளிநாட்டு பயணத்துக்கான பரிகாரம், முற்பிறப்பு தோஷங்கள் விலகல் போன்றவற்றுக்கான பரிகாரங்கள், வவுனியா பண்டாரிக் குளத்திலும்..(புதன், வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு - யாழ்ப்பாணம்) (திங்கள், செவ்வாய் - வவுனியா)

தொடர்புகளுக்கும் முன்பதிவுகளுக்கும் :-
0763287119

ST.JOHN'S ACADEMY & COLLEGE OF TECHNOLOGY
TVEC Centre Registration No. P25/0076
Available Courses

- Information and Communication Technology
  NVQ Level – 05 Diploma (*Admission Test on 21 October 2019*)
  *(Those who have completed NVQ Level 4 can apply)*
- Pre School Teacher NVQ Level - 03
- Computer Hardware Technician Level - 03 & 04

*Limited number of students will be admitted.*

Issue of Application Forms : 30.09.2019
Closing Date for Applications : 14.10.2019
Course Commencement :28.10. 2019

For more details, contact:
The Director
St. John's Academy& College of Technology
446 Main Street, Chundikuli, Jaffna
T.P.No:- 021 221 6680, 077 729 2199,
071 856 1252 (C-7796)

# ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் ரணில் சிறை செல்ல நேரிடும்

## மகிந்த அணி எச்சரிக்கை

(கொழும்பு)

**ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் தான் சிறைசெல்ல நேரிடும் என்பதை அறிந்தே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்‌ஷவிற்கு எதிராகப் பல சட்ட சிக்கல்களை ஏற்படுத்தினார். ஆனால் அனைத்துச் சவால்களையும் எதிர்கொண்டு மாற்று வழிகளைப் பிரயோகித்து நாம் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவோம் என பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.**

பொதுஜன பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு எச்சரித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சியின் முழு ஒத்துழைப்புடனேயே இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி இடம்பெற்றது. அமைச்சரவையிலுள்ள பெரும்பாலானோர் இம்மோசடியுடன் தொடர்புபட்டவர்கள். அவர்களே இன்று ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவிற்கு ஆதரவாக அணி திரண்டுள்ளார்கள்.

பிணைமுறி மோசடி விவகாரம் குறித்து ஐக்கிய தேசிய கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ இதுவரையில் எவ்வித கருத்துக்களையும் தெரிவிக்கவில்லை. அவ்வாறு தெரிவித்தால் கட்சியின் ஆதரவு கிடைக்காது.

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்‌ஷவின் ஆட்சி மீண்டும் உருவானால் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் நாட்டுக்கு அழைத்து வரப்படுவார். அதன் பின்னர் தான் சிறை செல்ல நேரிடும் என்பதை அறிந்தே பிரதமர் ரணில் விக்கிரம சிங்க பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்‌ஷவிற்கு எதிராகப் பல சட்ட சிக்கல்களை திட்டமிட்டு ஏற்படுத்தினார்.



முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டார நாயக்கவின் குடியுரிமையை இரத்துச் செய்வதற்கான அரசியல் சூழ்ச்சியை ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொண்டது. அதன் தொடர்ச்சியே தற்போதும் முன்னெடுக்கப்பட்டது. மாற்று வழியை பிரயோகித்தாவது பொதுஜன பெரமுன ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று ரணிலுக்குத் தகுந்த பாடம் கற்பிக்கும் என அவர் மேலும் எச்சரித்தார்.(இ-7)

# நீதிமன்றத் தீர்ப்பையடுத்து கேக் வெட்டி கொண்டாடிய பொதுஜன பெரமுனவினர்



(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்‌ஷவை இலங்கைப் பிரஜையாக ஏற்றுக் கொள்வதைத் தடுத்து உத்தரவொன்றைப் பிறப்பிக்குமாறு கோரித்தாக்கல் செய்யப்பட்ட மனுவைத் தள்ளுபடி செய்வதாக மேன் முறையீட்டு நீதிமன்றின் தலைமை நீதிபதி யசந்த கோதா கொட நேற்று முன்தினம் மாலை தீர்ப்பறிவித்தார்.

இந்த அறிவிப்பின் மூலம் ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளரும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளருமான கோத்தபாய ராஜபக்‌ஷவுக்கு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான தடை நீங்கியது.

இந் நிலையில் இந்த வெற்றியைக் கொண்டாடும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த மற்றும் கோத்தபாய தலைமையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் கேக் வெட்டிக் கொண்டாடி மகிழ்ந்தனர். (இ-7)

# வாணிவிழா

(யாழ்ப்பாணம்)

அராலி ஸ்ரீ முருகன் சனசமூக நிலைய வாணி விழா இன்று 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் நிலைய முன்றலில் நிலையத் தலைவர் ச.யசிகரன் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் த.நடனேந்திரன், சிறப்பு விருந்தினர்களாக முருகமூர்த்தி வித்தியாசாலை அதிபர் தி.தவரத்தினம், ஓய்வு நிலை அதிபர் கல்விச் சமூக செம்மல் வி.சிவஞானபோதன், நிலையப் போசகர் இ.வசந்தன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# கொரியாவுடனான நல்லுறவின் மூலம் இலங்கை பொருளாதார அபிவிருத்தி

## சாகல தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை மற்றும் கொரிய நாடுகளுக்கு இடையிலான நல்லுறவின் மூலம் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்திகள் பல இலங்கைக்கு கிடைக்கப் பெறுவதாக அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற கொரியாவின் தேசிய தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். "கொரியா மற்றும் இலங்கை இடையே மிக நெருங்கிய உறவு காணப்படுகின்றது. இரு நாடுகளிடையே நெருங்கிய பொருளாதார மற்றும் அரசியல் உறவுகளை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம்.

இதன்மூலம் பூகோளவியல் முக்கியத்துவத்தை ஒன்றுபடுத்தல், அறிவுசார் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல், சுங்கத் திணைக்களத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொடுத்தல், தொழில்நுட்ப பரிமாற்றங்களை மேற்கொள்வதற்கு புதிய வழிமுறைகளை உருவாக்குதல், திறந்த பொருளாதார முறை, முதலீட்டு மற்றும் சுற்றுலாத் துறைகளை அபிவிருத்தி செய்வதற்கு இலங்கை எதிர்பார்த்துள்ளது.

இலங்கை மற்றும் கொரியா இடையே இயற்கை அழிவுகளுக்கு முகங்கொடுக்கக் கூடிய வகையில் மாபெரும் கட்டடங்களை நிர்மாணிக்கும் பொருட்டு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

இத்திட்டத்தின் கீழ் அதிகளவில் இயற்கை அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்கும் மட்டக்களப்பு, மன்னார், முல்லைத்தீவு, மாத்தளை மற்றும் மொனராகலை மாவட்ட மக்கள் பயன் பெறவுள்ளனர்.

மேலும் இலங்கை மாணவர்களுக்கு கொரியாவில் பட்டப்படிப்பு அல்லது பட்டப்படிப்பின் பின் படிப்புக்களை முன்னெடுப்பதற்கு சந்தர்ப்பம் கிட்டியுள்ளது.

இரு நாடுகளிடையே காணப்படுகின்ற பொருளாதார, வியாபார மற்றும் கல்விசார் தொடர்புகள் காரணமாக இந்நாடுகளின் சுற்றுலாத்துறை முன்னேற்றத்தில் பெரும் தாக்கம் செலுத்துகின்றது. இரு நாட்டு மக்களிடையேயான உறவும் வளர்ச்சியடைகின்றது.

தற்பொழுது 30 ஆயிரம் வரையிலான மக்கள் கொரியாவில் தொழில்புரிவதுடன் அது கொரியா மற்றும் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுகின்றது.

இவ்வூழியர்கள் கொரியாவில் முன்னெடுக்கப்படுகின்ற உற்பத்தித் துறைகள், கட்டட நிர்மாணத்துறை மற்றும் மீனவ தொழிலில் ஈடுபடுகின்றார்கள். இதன்மூலம் இலங்கைக்கு பெருந்தொகை வருமானம் கிடைக்கிறது" என சாகல மேலும் தெரிவித்தார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 120 | 130 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 160 | 120 | 100 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 180 | 200 | 240 | 170 | 300 |
| தக்காளி | 140 | 140 | 130 | 140 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 100 | 20 | 80 | 120 |
| கோவா | 160 | 120 | 120 | 80 | 60 |
| கரட் | 120 | 100 | 40 | 110 | 120 |
| பூசணி | 80 | 60 | 80 | 70 | 80 |
| புடோல் | 200 | 120 | 100 | 80 | 120 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 80 | 160 |
| சின்ன வெங்காயம் | 200 | 180 | 160 | 140 | 240 |
| பெரிய வெங்காயம் | 230 | 200 | 240 | 210 | 200 |
| பாகற்காய் | 350 | 320 | 100 | 260 | 300 |
| வெண்டிக்காய் | 120 | 140 | 100 | 70 | 160 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 100 | 80 | 120 |
| பயற்றங்காய் | 160 | 140 | 180 | 150 | 160 |
| லீக்ஸ் | 100 | 100 | 100 | 70 | 120 |
| பீற்றூட் | 120 | 70 | 100 | 80 | 120 |
| கறிமிளகாய் | 200 | 180 | 180 | 120 | 200 |
| முருங்கைக்காய் | 220 | 150 | 200 | 130 | 240 |
| போஞ்சி | 300 | 200 | 200 | 170 | 200 |
| கத்தரிதம்புள்ள | 140 | 80 | — | 80 | 100 |
| கீரை – 1பிடி | 50 | 60 | 40 | 50 | 40 |
| தேசிக்காய் | 300 | 350 | 300 | 260 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 40 | 35 | 20-40 |
| இராசவள்ளி | — | — | 400 | 150 | — |
| வெங்காயப்பூ | 250 | 160 | — | — | 240 |
| முள்ளங்கி | 80 | 100 | 80 | 40 | 80 |
| பொன்னாங்காணி | 50 | 35 | 40 | 30 | 30 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 30 | 20 |
| ஈரப்பலா | 70 | 100 | 50 | 140 | — |

# போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு மரண தண்டனைச் செயற்றிட்டத்தை வெற்றி பெறச் செய்ய முடியவில்லை

## ஜனாதிபதி மைத்திரி கவலை





(கொழும்பு)

போதைப்பொருள் கடத்தல் காரணமாக நாட்டுக்கு ஏற்படும் பாரிய அழிவைத் தவிர்ப்பதற்காகத் தனது அரசியல் வாழ்க்கையில் தொடர்ச்சியாகத் தலைமைத்துவத்தை வழங்கியதுடன், போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு எதிராக மரண தண்டனையை வழங்குவதற்கும் ஜனாதிபதி என்ற வகையில் தான் கைச்சாத்திட்ட போதும் அரசியல் பேதங்களின்றி பொறுப்புக்கூற வேண்டியவர்கள் அதற்கெதிராகச் செயற்பட்டதால் அந்தச் செயற்றிட்டத்தை வெற்றி பெறச் செய்ய முடியவில்லை என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

என்றாலும் தனது அர்ப்பணிப்பின் பெறுபேறாகக் கடந்த சில வருடங்களாகப் போதைப்பொருள் ஒழிப்பில் வெற்றிகரமான பல பெறுபேறுகள் நாட்டுக்குக் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், யார் எதைக் கூறினாலும் கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற துன்பியல் சம்பவமும் நாட்டுக்கான அந்த நிகழ்ச்சித்திட்டத்தை சீர்குலைப்பதற்காக எடுக்கப்பட்ட முயற்சி என்றே தான் நம்புவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கொழும்பு நாலந்தா கல்லூரியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரித்தானிய மகாராணியால் வழங்கப்படும் கௌரவ விருதான நைட் விருதைப் பெற்ற நாலந்தா கல்லூரியின் பழைய மாணவரும் இலங்கை சென்.ஜோன் அமைப்பினதும் போதைப்பொருள் ஒழிப்பு அரச சார்பற்ற நிறுவனத்தினதும் தலைவரான வைத்தியர் சரத் சமரகேவைப் பாராட்டும் வகையில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

நாட்டின் வைத்தியத் துறைக்காக முக்கிய பங்களிப்பை மேற்கொண்டுள்ள சரத்சமரகே, போதைப்பொருளுக்கெதிராக இலங்கை அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றிணைந்த சம்மேளனத்தின் தலைவராகவும் குறிப்பிடத்தக்கப் பங்களிப்பைச் செய்து வருகின்றார்.

ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு துறைகளில் சிறந்து விளங்குவோரைத் தெரிவு செய்து நைட் பதக்கங்கள் பிரித்தானிய மகாராணியால் வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வருடம் உலகிலுள்ள 20 பேருக்கு அப்பதக்கங்கள் வழங்கப்பட்டன. இம்முறை நைட் பதக்கம் வென்ற ஒரேயொரு ஆசிய நாட்டவராக வைத்தியர் சரத் சமரகே விளங்குகிறார். மேலும் அவர் கடந்த செப்டெம்பர் 19 ஆம் திகதி லண்டன் நகரில் சென். ஜோன் தேவாலயத்தினாலும் கௌரவிக்கப்பட்டார்.

வைத்தியர் சரத் சமரகே நாட்டுக்குச் செய்த சேவையைப் பாராட்டிய ஜனாதிபதி, இலங்கை மக்களின் சார்பாகத் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார். (இ-7)

# முன்னாள் போராளிகளுக்கு வாழ்வாதார உதவிகள்





(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட புனர்வாழ்வு அளிக்கப்பட்ட ஏழு முன்னாள் போராளிகளுக்கு நேற்றுச் சனிக்கிழமை காலை வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஆறு இலட்சத்து 93 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் குறித்த வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி.தேவந்தினி பாபு தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி கலந்து கொண்டு வாழ்வாதார உதவிப் பொருட்களைக் கையளித்தார்.

அந்த வகையில் ஜே/324 கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த பயனாளி ஒருவருக்கு கோழிக்கூடு அமைக்க 64 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையும், ஜே/322 கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த பயனாளி ஒருவருக்கு ஆட்டுக் கொட்டில் அமைக்க 25 ஆயிரம் ரூபாவுக்கான காசோலையும் ஜே/324 கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த பயனாளி ஒருவருக்கு ஒரு இலட்சம் ரூபாவுக்கான தையல் இயந்திரமும் மந்துவில் கிழக்கு ஜே/345 கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த பயனாளி ஒருவருக்கு ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாவுக்கான ஸ்ரூடியோ மொனிற்றர் உப கரணமும் மற்றும் யு.என்.டி.பி. திட்டத்தின் கீழ் ஜே/325 கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த முன்னாள் போராளி ஒருவருக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவுக்கான மேசன் தொழில் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் கொடிகாமம் தெற்கு ஜே/328 கிராம உத்தியோகத்தர், பொருளாதார உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர்.பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், முன்னாள் போராளிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். (இ-30)

# வவுனியா மதீனாநகர் சந்தியில் இராணுவச் சோதனைச் சாவடி

(நெளுக்குளம்)


வவுனியா பூந்தோட்டம் மதீனாநகர் சந்தியில் நேற்று முன்தினம் காலை புதிதாக இராணுச் சோதனைச் சாவடி ஒன்று அமைக்கப்பட்டது. மதீனா நகர்ப் பகுதிக்குச் சென்ற இராணுவத் தினர் ஒரு சில வீடுகளில் சோதனைகளை மேற்கொண்டிருந்தனர்.

இந் நிலையில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினரால் குறித்த சோதனைச் சாவடி நேற்று முன்தினம் அமைக்கப்பட் டதுடன் அவ்வீதியால் பயணிக்கும் வாகனங்கள் பதிவு நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டன.

நாட்டில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தின் போது குறித்த பகுதியில் இராணுவச் சோதனைச் சாவடி அமைக்கப்பட்டு சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

பின்னர் அவை அகற்றப்படிருந்தன. இந் நிலையில் மீண்டும் சோதனைச் சாவடி அமைக்கப்பட்டுள்ளதால் பொதுமக்கள் அச்சத்துடன் பயணிக்கின்றனர்.

கடந்த வாரமும் பம்மைமடுப் பகுதியில் இராணுவத்தினரால் சோதனைச்சாவடி ஒன்று அமைக்கப்பட்டு சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(இ-299)



வடக்கின் தங்கக் குரல் தேர்வு யாழ்.பொது நூலகக் கேட்போர் கூடத்தில் இயக்குநர் இமயம் பாரதிராஜா தலைமையில் ஆரம்பமானது. வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனின் வழிகாட்டலின் கீழ் ஆளுநர் செயலகமும் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களமும் இணைந்து இந்தத் தேர்வை நடத்துகின்றமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்:- வர்ணன்)

# நியாயமில்லாத சமுதாயத்தாலும் நேர்மையைத் தேடாத சமுதாயத்தாலும் ஒருபோதும் நிலைத்துநிற்க முடியாது

## ஆளுநர் ராகவன் இடித்துரைப்பு







(யாழ்ப்பாணம்)

ஒரு சமுதாயம் முன்னேற வேண்டும் எனில் அந்தச் சமுதாயம் அடிப்படை நியாயமாகவும் நேர்மையாகவும் இருக்கவேண்டும் என்ற பாரிய கொள்கை இருக்கவேண்டும். நியாயமில்லாத சமுதாயத்தாலும் நேர்மையைத் தேடாத சமுதாயத்தாலும் ஒருபோதும் நிலைத்து நிற்க முடியாது என வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

கார்கில்ஸ் நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட விவசாயிகளின் பிள்ளைகளுக்கான கார்கில்ஸ் சாரு பிமா உழவர் சமூக நன்மை மற்றும் உதவித்தொகை வழங்கும் 2018-2019 நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் கார்கில்ஸ் திரையரங்கில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார். புலமைப் பரிசில் திட்டம் வழங்கும் இந் நிகழ்வில் ஆண்டு 5 மற்றும் ஆண்டு 11 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் தொகையினையும் பல்கலைக்கழக மாணவிக்கான மடிக்கணனியையும் ஆளுநர் இதன்போது வழங்கினார்.

இந் நிகழ்வில் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், கார்கில்ஸ் நிறுவனத்தின் வியாபார மற்றும் விவசாயக் குழு முகாமையாளர் ஹரிதாஸ் பெர்னாண்டோ மற்றும் விவசாயிகள், மாணவர்கள் கலந்துகொண்டனர். (இ-7)

## கைகலப்பு; இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் இருவர் காயமடைந்தனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

கச்சாய் சங்கிலி கிணற்றடி ஆத்திக்கட்டுப் பிள்ளையார் கோவில் பிரச்சினையால் ஏற்பட்ட வாய்த்தர்க்கமே கைகலப்பாக மாறியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவத்தில் மீசாலை அல்லாரை தெற்கைச் சேர்ந்த த.தருமபாலன் (வயது-48), கொடிகாமம் கச்சாய் வீதியைச் சேர்ந்த க.வாமதேவன் (வயது-60) ஆகியோரே இவ்வாறு காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். (இ-10-114)

## திடீரென வீதியை விட்டு விலகி 20 அடி பள்ளத்தில் பாய்ந்த கார்



(ஹற்றன்)

நோர்வூட் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹற்றன் ஒல்டன் பிரதான வீதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு காரொன்று திடீரென வீதியை விட்டு விலகி 20 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானது.

மேலும், ஹற்றனிலிருந்து மஸ்கெலியா சாமிமலைப் பகுதியை நோக்கிப் பயணித்த இந்த காரில் சென்ற எவருக்கும் பாதிப்பில்லையென பொலிஸார் தெரிவித்தனர். இந்நிலையில், குறித்த விபத்திற்கான காரணம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## குழந்தை விற்பனை; ஏழு பேர் கைது

(கண்டி)

பிறந்து 20 நாட்களேயான குழந்தையை 40 ஆயிரம் ரூபாவிற்கு வாங்கியமை தொடர்பில் கண்டியில் 7 பேர் கைது செய்யப்பட்டனர்.

கடந்த ஒருவருட காலமாக இரகசியமான முறையில் குழந்தைகளை விற்பனை செய்து வருபவர்கள் தொடர்பில் கண்டி சிறுவர் பாதுகாப்பு பொலிஸ் பிரிவின் உயர் அதிகாரிகளுக்குத் தகவல் கிடைத்தது.

இந்நிலையில் பிறந்து 20 நாட்களேயான குழந்தையை 40 ஆயிரம் ரூபாவிற்கு வாங்கியதாகக் கண்டி கட்டுகலைப் பகுதியிலுள்ள 47 வயது பெண்ணொருவர் கைது செய்யப்பட்டார்.

கண்டி பொலிஸ் சிறுவர் பாதுகாப்புப் பிரிவின் உயர் அதிகாரி, சந்தேக நபரை விசாரித்த போது, அக்குழந்தையை 40 ஆயிரம் ரூபாவிற்கு பெற்றதாகவும் சந்தேக நபருக்குக் குழந்தைகள் இல்லாததால் அவர் பணம் கொடுத்து குழந்தையை வாங்கியதாகவும் இதன்போது சந்தேக நபர் குழந்தையை கம்பளை வைத்தியசாலை பகுதியில் நபரொருவரிடம் பணம் கொடுத்துப் பெற்றதாகத் தெரிவித்தார். இதையடுத்து குறித்த சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் 7 பேர் கைது செய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை மேற்கொண்டு வருவதாக கண்டி பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## வெல்கமவின் தீர்மானம் முற்றிலும் தவறானது

### டிலான் சுட்டிக்காட்டு





(கொழும்பு)


பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம ஜனாதிபதித் தேர்தலில் சுயாதீனமான முறையில் போட்டியிடுவதாகத் தீர்மானித்தமை முற்றிலும் தவறான தீர்மானமாகும் எனப் பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

அத்துடன் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக கோத்தபாய ராஜபக்ஷவை நியமிக்க வேண்டாம் என்று இவர் ஆரம்பத்தில் இருந்து எதிர்ப்பை வெளிப்படுத்தினார்.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக கோத்தபாய உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து மீண்டும் ஜனாதிபதியுடன் இணக்கமாகச் செயற்படத் தொடங்கினார். இவருக்கும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாயவிற்கும் இடையில் எவ்வித அரசியல் ரீதியிலான முரண்பாடுகளும் கிடையாது. (தனிப்பட்ட பகைமையே காணப்படுகின்றது).

ஜனாதிபதித் தேர்தலில் சுயாதீனமாகப் போட்டியிட்டால் அவர் பாரிய பின்னடைவை எதிர்கொள்ள நேரிடும். இன்றும் காலம் கடக்கவில்லை. மீண்டும் பொதுஜன பெரமுனவுடன் இணைந்து ஐக்கிய தேசியக் கட்சியை வீழ்த்தி பலமான அரசாங்கத்தைத் தோற்றுவிக்க எவ்விதத் தடைகளும் ஏற்படுத்தப்படாது என்றும் டிலான் கூறினார்.

பொதுஜன பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)







யாழ்.இருபாலை தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் சர்வதேச முதியோர் மற்றும் சிறுவர் தின நிகழ்வுகள் கடந்த முதலாம் திகதி கட்டப்பிராய் முத்துமாரி அம்மன் திருமண மண்டபத்தில் இடம்பெற்றது. இருபாலை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் பா.பிரதீபன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட செயலக முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி இணைப்பதிகாரி இ.அமலன், சிறப்பு விருந்தினர்களாக கிராம உத்தியோகத்தர் எம்.ஆர்.ஜெயதரன், சமுர்த்தி உத்தியோகத்தர் என்.உமாகாந்தன், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் வி.மாதவன், கௌரவ விருந்தினர்களாக கிராம உத்தியோகத்தர் தி.ஜேசுதாஸ், நல்லூர் லயன்ஸ் கழக தலைவர் சி.இலட்சுமிகாந்தன், மக்கள் ஆதரவு மையத்தின் பணிப்பாளர் ச.சுரேந்திரன், உதயம் கலாசார சங்கத்தின் இணைப்பாளர் தி.நிசங்கன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# தேசிய கல்வியியற் கல்லூரியில் திருக்குறள் அறிமுக விழா





(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் திருக்குறள் அறிமுக விழா சிறப்பாக இடம் பெற்றது.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் தமிழ் மன்றமும் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் இணைந்து, வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் பதிப்பித்து வெளியிடப்பட்ட "திருக்குறள்", "திருக்குறள் ஆய்வுகள்", "முப்பாற் நூற் சுருக்கம்", பேர்சிவல் பாதிரியாரால் தொகுத்து வெளியிடப்பட்ட "தமிழ்ப் பழமொழிகள்" ஆகிய நூல்களின் அறிமுக விழா கல்வியியற் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் கடந்த 3 ஆம் திகதி இடம்பெற்றது.

விழாவின் சிறப்பம்சமாக விழாவில் கலந்து கொண்ட அனைத்து ஆசிரிய மாணவர்களுக்கும் விரிவுரையாளர்களுக்கும் நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

இந்த விழாவின் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், சிறப்பு விருந்தினராக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப்பணிப்பாளர் திருமதி. சுஜீவாசிவதாஸ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

விழாவின் தலைவராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி சு.பரமானந்தம் திருக்குறள் இன்றைய சமுதாயத்தை எவ்வாறு வழிப்படுத்துகின்றது என்னும் தொனிப் பொருளில் தலைமையுரை ஆற்றினார்.

பழமொழிகள் எனும் தலைப்பில் பா.பாலகணேசன், திருக்குறள் என்னும் தலைப்பில் விரிவுரையாளர் சி.சிவசங்கர் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். பிரதம விருந்தினராக வருகை தந்திருந்த வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் எமது நாட்டில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி இப்பொழுது புதுமெருகூட்டப்பட்டு மிகவும் சிறப்பாக தனது செயற்பாட்டை ஆற்றி வருகின்றது எனவும் தரம்மிக்க ஆசிரியர்கள் இங்கு உருவாக்கப்படுகின்றனர் எனவும் கல்லூரியின் தமிழ் மன்றத்தின் இது போன்ற செயற்பாடு ஏனையவற்றுக்கு முன்னுதாரணமானது எனவும் தெரிவித்தார். (இ-9)

# எதிரணியின் ஏற்பாட்டிலேயே வேலைநிறுத்தப் போராட்டம்

## ஆளும் தரப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டில் தற்போது முன்னெடுக்கப்படும் ஒவ்வொரு வேலை நிறுத்தப் போராட்டமும் எதிரணியினரின் ஏற்பாட்டிலேயே இடம்பெறுகின்றது.

பலவருட காலமாக இருந்து வந்த அரசாங்க ஊழியர்களின் சம்பளப் பிரச்சினைக்கும் யுத்தத்தால் பாதிப்படைந்த முன்னாள் இராணுவ வீரர்களின் பிரச்சினைகள் தொடர்பிலும் தங்களது ஆட்சிக்காலத்தில் கவனம் செலுத்தாத மகிந்த தரப்புக்கு தற்போதுதான் அந்த பிரச்சினை கள் நினைவுக்கு வந்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் அஜித் மனம்பெரும குற்றம்சாட்டினார்.

இதேவேளை எதிர்த் தரப்பினர் கூறுவது போன்று இந்த அரசாங்கம் நாட்டின் சொத்துக்களை வெளிநாடுகளுக்கு விற்றதற்கான ஆதாரம் இருந்தால் அவற்றை அவர்கள் நிரூபித்துக் காட்ட வேண்டும் என்றும் அவர் சவால் விடுத்தார்.

அலரிமாளிகையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

சர்வாதிகார ஆட்சியை ஒழித்து ஜனநாயக ஆட்சியை உருவாக்குவதற்காகவே மக்கள் 2015 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆட்சிப் பலத்தைத் தந்தார்கள்.

நாட்டில் நான்கரை வருடங்களுக்கு முன்பிருந்த நிலைமையில் தற்போது பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. கடந்த காலங்களில் அச்சுறுத்தல்களினூடாகவும் தாக்குதல்களினூடாகவுமே பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கப்பட்டது.

இவ்வாறானதொரு நிலையில் 2015 ஆம் ஆண்டு முதல் பதவியில் இருந்த அரசாங்கத்துக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட ஒவ்வொரு போராட்டமும் எதிர்த்தரப்பினரின் ஏற்பாட்டிலேயே இடம்பெற்றது.



கடந்த சில தினங்களாக தமது கொடுப்பனவுகளை அதிகரிக்குமாறு கோரி புகையிரத சேவைப் பிரிவு உள்ளிட்ட அரசாங்க நிர்வாகப் பிரிவினரும் தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுப்பட்டு வருகின்றனர். 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்தே இந்தச் சம்பள பிரச்சினை இருந்து வருகின்றது. இருப்பினும் இந்த அரசாங்கத்திலேயே சம்பந்தப்பட்ட அரசாங்க சேவை பிரிவினர் தமக்கான கொடுப்பனவுகளை அதிகரிக்குமாறு கோரி வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடக் கூடியதாக இருக்கிறது.

அதேவேளை முன்னாள் இராணுவ வீரர்களும் கடந்த சில தினங்களாக தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்கள். இந்தப் போராட்டத்தின் பின்னணியில் எதிர்த் தரப்பினரே செயற்படுகிறார்கள் என்பதை அவர்களே நிரூபித்துக் காட்டியிருந்தார்கள்.

ஆகவே நாட்டில் இடம்பெறும் அநேகமான வேலை நிறுத்த போராட்டங்களை எதிர்த்தரப்பினரே தூண்டி விடுகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)

# கோத்தபாயவுக்கு எதிராக வழக்குத் தொடர வேண்டிய அவசியம் ஐ.தே.கவுக்கு கிடையாதாம் - ஹரின்



(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிராக வழக்குத் தொடர வேண்டிய அவசியம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடையாதென அமைச்சர் ஹறின்பெர்னாண்டோ தெரிவித்தார்.


கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். "எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியடைவதற்கான வேலைத்திட்டங்களைத் தற்போது நாம் முன்னெடுத்துச் செல்கின்றோம்.

அந்த வகையில் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக கோத்தபாய, களமிறங்கி இருப்பது குறித்து நாம் அச்சமடையவில்லை. அத்துடன் எமது கட்சிக்கு அவர் பலமான போட்டியாளர் கிடையாது.

இதேவேளை கோத்தபாயவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கிற்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் எந்தவித தொடர்பும் இல்லை.

அவருக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கு எந்தவொரு தேவைப்பாடும் எங்களுக்குக் கிடையாது" என ஹறின் தெரிவித்தார். (இ-7)

# நீதிமன்றத்துக்குள் கரகோஷம் ஆர்ப்பரித்த ஆதரவாளர்கள் எச்சரித்த தலைமை நீதிபதி



(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை இலங்கைப் பிரஜையாக ஏற்றுக் கொள்வதை தடுத்து உத்தரவொன்றைப் பிறப்பிக்குமாறு கோரித் தாக்கல் செய்யப்பட்ட மனுவைத் தள்ளுபடி செய்வதாக மேன் முறையீட்டு நீதிமன்றின் தலைமை நீதிபதி யசந்த கோதாகொட நேற்று முன்தினம் மாலை தீர்ப்பறிவிக்கும் போது, கோத்தபாயவின் ஆதரவாளர்கள், ஆதரவு சட்டத்தரணிகள் பலர் கரகோஷம் செய்து, மகிழ்ச்சியில் ஆர்ப்பரித்தனர். இதனால் நீதிமன்றத்துக்குள் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

நீதிமன்ற நடவடிக்கை நிறைவு பெறாத நிலையில், தீர்ப்பின் இடை நடுவே இவ்வாறு கரகோஷம் எழுந்தமையால் மன்றில் இருந்த பலர் அதிர்ச்சியடைந்தனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து கோத்தபாய ராஜபக்ஷவின் சட்டத்தரணியான ஜனாதிபதி சட்டத்தரணி றொமேஷ் டி சில்வா உடனடியாகவே பின்னோக்கி திரும்பி அமைதி கொள்ளுமாறு கூறியதுடன், இந்த செயற்பாடுகள் தொடர்பில் தனது ஆழ்ந்த கவலையை நீதிபதிகளிடம் வெளியிட்டார்.

எவ்வாறாயினும் தலைமை நீதிபதி யசந்த கோதாகொட, இந்தச் நடவடிக்கையை மிக மோசமான, நீதிமன்றை அவமதிக்கும் செயல் என வர்ணித்ததுடன், இந்த செயற்பாடுகளுக்கு உடந்தையாக இருந்த அல்லது அச் செயற்பாடுகளில் ஈடுபட்ட சட்டத்தரணிகளை சட்டம் பார்த்துக்கொள்ளும் என எச்சரித்தார்.

இதனைவிட நீதிமன்ற வளாகத்திலும் கோத்தாவுக்கான ஆதரவு கோஷங்கள் எழுப்பப்பட்ட நிலையில், கொழும்பு மேல் நீதிமன்றத்துக்கு முன்பாக பல்லாயிரக்கணக்கான பட்டாசுகள் கொளுத்தப்பட்டும் மகிழ்ச்சி வெளிப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நந்திக்கடல் துப்புரவு பணியை உடனடியாக முன்னெடுக்குமாறு வடக்கு ஆளுநர் பணிப்பு

(முல்லைத்தீவு)

நாயாறு களப்பு மற்றும் நந்திக் கடல் களப்பு பகுதியில் வர்த்தமானி அறிவித்தலின் படி காணிகள் வனஜீவராசிகள் திணைக்களத்தின் கீழ் கொண்டுவரப்பட்டதனால் பாதிப்படைந்த பொதுமக்கள் ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனுக்கு வழங்கிய முறைப்பாட்டினை தொடர்ந்து ஆளுநர் இது தொடர்பில் ஆராயும் கூட்டம் கடந்த வியாழக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட செயகைத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது.

2017ஆம் ஆண்டு வனஜீவராசிகள் திணைக்களத்தினர் நாயாறு மற்றும் நந்திக்கடல் பகுதியினை வர்த்தமானி அறிவித்தல் மூலம் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

ஆனாலும் அப்பிரதேசத்தினுள் மக்களினுடைய தனியார் காணிகளும் வயற்காணிகளும் இருந்தமையினால் தற்பொழுது வனஜீவராசிகள் திணைக்களத்திற்கும் அப்பகுதி மக்களுக்குமிடையில் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. எனவே இது தொடர்பில் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இது தொடர்பில் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் வன



ஜீவராசிகள் திணைக்களத்தினுள் கொண்டுவரப்பட்ட மக்களின் காணிகளின் அளவினை இனங்கண்டு அவற்றினை மீளவும் வர்த்தமானி அறிவித்தலின் படி பொதுமக்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு ஆளுநர் ஆலோசனை வழங்கினார்.

மேலும், இவ்விரண்டு களப்பு பகுதிகளிலும் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்கு வனஜீவராசிகள் திணைக்களம் தடைவிதித்து வருவதாகவும் பொதுமக்கள் முறைப்பாடு தெரிவித்திருந்தமை தொடர்பிலும் இக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

அப்பகுதி மக்கள் காலாகாலமாக செய்துவந்த பாரம்பரிய மீன்பிடிமுறையை செய்யமுடியும் என்றும் இந்த இரு களப்பு பகுதிகளையும் சுத்தம் செய்ய 2018 இல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும் இதுவரை எதுவித முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் ஆளுநரின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

இதனைத்தொடர்ந்து யாழ். பல்கலைக்கழகத்தின் மீன்பிடியியல் துறையினை தொடர்பு கொண்டு களப்பு பகுதி மீன்பிடி தொடர்பில் ஆய்வு செய்து உடனடியாக வனவிலங்கு திணைக்களத்திற்கு சமர்ப்பித்து நந்திக் கடல் பகுதியில் துப்புரவுப்பணியை மேற்கொள்ளுமாறும் அதற்கு பூரண ஒத்துழைப்பை வழங்குமாறும் வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு பணிப்புரை விடுத்தார்.

வனஜீவராசிகள் திணைக்கத்தின் கீழ் உள்ள பொதுமக்களின் காணிகள்,விவசாய நிலங்கள் என்பவற்றை மீள் வர்த்தமானி மூலம் ஜனாதிபதியின் உதவியுடன் மக்களிடம் மீண்டும் கையளிக்க நடவடிக்கை எடுப்பதாக ஆளுநர் நம்பிக்கை தெரிவித்தார். (9)

# பாவனைக்கு உதவாத வீதியால் புன்னைநீராவி கிராம மக்கள் அவதி



(கண்டாவளை)

கிளிநொச்சி புன்னைநீராவி கிராமத்தின் மத்திய பகுதியில் அமைந்துள்ள பொது வைத்தியசாலையின் வீதி மக்கள் பயன்படுத்த முடியாதவாறு பள்ளமாக காட்சியளிப்பதால் தற்போது பெய்த மழையினால் வீதி படுமோசமாக பாதிப்படைந்துள்ளது. இதனால் நாளும் நூற்றுக் கணக்கில் சிகிச்சை பெற வரும் மக்கள் பல்வேறு இடர்களை அடைந்து வருகின்றனர்.

புன்னைநீராவிக் கிராமத்தில் இரண்டாயிரத்து தொள்ளாயிரம் குடும்பங்களின் வைத்திய நிலையமாக காட்சியளிக்கும் இவ் வைத்தியசாலை வீதியில் சமார் 500 மீற்றர் தூரம் படுமோசமாக பாதிப்படைந்துள்ளமையினால் பல நோயாளர்கள் பல்வேறு இடர்களை அடைந்துள்ளனர்.

இவ் வைத்தியசாலைக்கு பிரமந்தனாறு மயில்வாகனபுரம், கண்ணகிநகர், குமாரசாமிபுரம், புன்னைநீராவி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பலரும் இவ் வைத்தியசாலையில் பயன் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (9-315)

# பிரதேச சபை உறுப்பினரின் அடாவடியை கட்டுப்படுத்தக்கோரி ஆளுநருக்கு மகஜர்

(நெளுக்குளம்)

வவுனியா புதிய கற்பகபுரம் கிராம வட்டாரத்திலுள்ள பிரதேச சபை உறுப்பினரின் அத்து மீறிய அடாவடித்தனங்களை தடுத்து நிறுத்தி தமது கிராமத்திற்கு நீதியான தீர்வினை பெற்றுத்தருமாறு அப்பகுதி மக்கள், வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் அரச அதிபர் உட்பட 10பேருக்கு மகஜர்களை நேற்று முன்தினம் கையளித்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

குறித்த மகஜரில் மேலும் தெரிவிக்கையில், வவுனியா புதிய கற்பகபுரம் கிராமத்தில் உட்கட்டுமான அபிவிருத்திகள், வாழ்வாதார உதவிகள், சனசமூக நிலையம், விளையாட்டுக்கழகம் என்பன செயற்படமுடியாமல் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. வீதிப்புரமைப்பு,குடிநீர் போன்ற அத்தியாவசியமான பல்வேறு பிரச்சினைகள் எமது கிராமத்தில் காணப்படுகின்றன.

கிராம அபிவிருத்திச்சங்கம் கடந்த மூன்று வருடங்களாக செயற்பாடமலிருக்கின்றது. அதனைப்புதுப்பித்து தருமாறு பல தடவைகள் அரசாங்க அதிபர் உட்பட பல்வேறு தரப்பினரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டும் அக்கோரிக்கைக்கு எவரும் செவிசாய்ப்பதாக தெரியவில்லை.

இதனைப் பெற்றுக்கொடுப்பதற்கு முன்னின்று செயலாற்றும்போது சிலர் அச்சுறுத்தல் விடுத்து கிராமத்திலுள்ள அமைப்புக்களை செயலாற்ற தடை ஏற்படுத்துகின்றனர்.

குறித்த பகுதியில் உள்ள பிரதேச சபை உறுப்பினரின் அடாவடித்தனமான செயற்பாடுகள் இங்கு காணப்படுகின்றன. இதனால் கிராமத்திற்கு வருகின்ற அபிவிருத்தித்திட்டங்கள் கிடைப்பதில்லை.

இவ்விடயம் குறித்து மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலாளர் ஆகியோருக்கு கடிதங்கள் மூலமும் எமது பிரச்சினைகளைத் தெரிவித்திருக்கின்றோம். இன்று வரையிலும் இப்பிரச்சினைகளுக்கு எவ்விதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. தயவு செய்து எம்மக்களுக்கு நீதியான தீர்வினைப் பெற்றுத்தருமாறு மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9-299)



வவுனியாவில் அஞ்சலா உதவும் கரங்கள் அமைப்பினால் வசதியற்ற வறிய ஆறு மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் கடந்த வாரம் வழங்கி வைக்கப்பட்டன. கலிபோர்னியா வாழ் தமிழ் உறவுகளின் நிதிப் பங்களிப்பில் குறித்த ஆறு மாணவர்களுக்கும் ஆறு துவிச்சக் கர வண்டிகளை வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினர் திருமதி அஞ்சலா கோகிலகுமார் வழங்கி வைத்தார். (படம்:நெளுக்குளம் செய்தியாளர்)

# காட்டு யானைகளால் பாதிக்கப்படும் துணுக்காய் தென்னியன்குளம் மக்கள்

(கண்டாவளை)

முல்லைத்தீவு துணுக்காய் தென்னியன்குளம் பகுதியில் உள்ள 120 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் காட்டுயானைகளின் தொல்லை காரணமாக பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருவதாக தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள மேற்படி கிராமத்தில் தற்போது 120 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இந்த நிலையில் இக் கிராமத்திற்கான பிரதான வீதி இதுவரை புனரமைக்கப்படாது காணப்படுகின்றது.

இதேவேளை இந்தக் கிராமத்திற்கான எந்த விதப் போக்குவரத்து வசதிகளும் அற்ற நிலை காணப்படுகின்றது.

இதனால் மேற்படி கிராமத்தில் வாழும் குடும்பங்கள் பல்வேறு சிரமங்களை அன்றாடம் எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இந்தப் பிரதேசத்தில் காட்டு யானைகளின் தொல்லையும் அதிகரித்துக் காணப்படுவதாக குறிப்பிட்டுள்ள பிரதேச மக்கள் பயிர்ச்செய்கை காலங்களில் தங்களுடைய பயிர்களை பாதுகாப்பதிலும் சிரமங்களை எதிர் கொள்வதாக தெரிவித்துள்ளனர். (9-315)




# கிளிநொச்சியில் முஸ்லிம் பள்ளிவாசல் திறப்பு





(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகர் முஸ்லிம் பள்ளிவாசல் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி பழைய மாவட்ட செயலகத்தின் பின்புறமாக அமைந்துள்ள குறித்த பள்ளிவாசல் யுத்தத்தின் பின்னர் படிப்படியாக அபிவிருத்தி செய்யப்பட்டு வந்தது.

இந்த நிலையில் குறித்த பள்ளிவாசல் முழுமையாக்கப்பட்டு இஸ்லாமியர்களின் தொழுகை வழிபாட்டிற்காக நேற்று முன்தினம் திறந்து கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டத்தில் வாழும் இஸ்லாமியர்கள் பலரும் கலந்து கொண்டதுடன் குறித்த நிகழ்விற்கு சவுதி அரேபியாவிலிருந்தும் சிலர் வருகை தந்திருந்தனர். (9)

சரியாகத் திட்டமிட்டால் முதல் முயற்சியிலேயே பாதித் தூரத்தை நிச்சயம் அடைந்து விடலாம்.

– என்.ஹில்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## கிளியின் கழுத்தைத் தவிர மற்றெல்லாம் தெரிகிறது

அகண்ட பாரதத்திலிருந்து பாகிஸ்தானைப் பிரித்தெடுத்து அதனைத் தனிநாடாக்கிய பெருமை ஜின்னாவையே சாரும்.

மகாத்மா காந்தியுடன் இணக்கப்பாட்டை செய்து கொண்டு பாகிஸ்தானைத் தனி நாடாக்கி தனது இலக்கை ஜின்னா அடைந்து கொண்டார்.

இத்தனைக்கும் ஜின்னா கடுமையான இருதய நோயாளியாக இருந்தார். எனினும் தனது கடுமையான இருதய நோய் பற்றி அவர் வெளியில் எதுவும் கூறவில்லை.

இதற்குக் காரணம் தனக்கு இருதய வியாதி இருப்பதை அறிந்தால் பாகிஸ்தானைப் பிரிப்பதைக் காலம் கடத்துவார்கள்.

தன் மரணத்துக்குப் பின்னர் பாகிஸ்தான் என்ற தனிநாட்டுக்கு இடமில்லாமல் போகும்.

ஆகையால், தான் நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பதாக ஜின்னா காட்டிக் கொண்டார்.

இங்குதான் தன் இலக்கை அடைவதற்காக தனக்கு இருக்கக்கூடிய நோயைக் கூட ஜின்னா மறைப்புச் செய்தார்.

ஆம், 1947ஆம் ஆண்டு பாகிஸ்தான் பிரிகிறது. சரியாக ஒரு வருடம் மட்டுமே ஜின்னா உயிர் வாழ்ந்தார். 1948 செப்ரெம்பர் மாதத்தில் அவர் மரணமடைகிறார்.

ஆக, ஒரு வருடம் காலம் கடத்தியிருந்தால், இந்தியாவின் அரசியல் எல்லைக்குள் பாகிஸ்தான் அடங்கியிருக்கும்.

எனினும் காலம் கடத்துவதை இந்தியாவால் செய்ய முடியாமல் போனமைக்கு ஜின்னாவின் இராஜதந்திர அணுகுமுறையே காரணமாகும்.

இவற்றையெல்லாம் நாம் இங்கு கூறி ஆகப் போவதொன்றுமில்லை.

இருந்தும் எதற்கும் ஏட்டிக்குப் போட்டி என்ற நிலைமை வந்துவிட்டது. எவரையும் எப்படியும் திசை மாற்றி தங்கள் விருப்பங்களை நிறைவேற்ற முடியும் என்றளவில், தமிழ் இனத்தின் நிலைமை ஆகிவிட்டது.

யாரை நம்புவது என்பது கூடத் தெரியாத அளவில் எங்கும் உள்நோக்கம் தலைவிரித்தாடுகிறது. இலக்கு என்ற பேச்சுக்கே இடமில்லை.

தமிழ் இனம் வெறும் பேசுபடுபொருளேயன்றி தமிழினத்துக்காகப் பாடுபடுதல் என்பது அறவே இல்லை.

சிந்தை சிதறி எதைச் செய்கின்றோம் என்பது கூடத் தெரியாமல் நடந்து கொள்ளுமளவுக்கு நம் அரசியல் தரப்புகள் இருக்கின்றன.

வில்வித்தை பயிற்றுவிக்கும் துரோணர் தன் மாணாக்கர்களைப் பார்த்து மரத்தில் இருக்கக்கூடிய செயற்கைக் கிளியை அம்பெய்தி வீழ்த்துமாறு பணிக்கிறார்.

துரியோதனன், கர்ணன், அருச்சுனன் என மாணவர்கள் வரிசை கட்டி நிற்கின்றனர். அம்பு எய்வதற்கு முன்னதாக ஒவ்வொரு மாணவரிடமும் துரோணர் கேள்வி கேட்கிறார்.

மரம் தெரிகிறதா? கிளை தெரிகிறதா? கிளி தெரிகிறதா? என்பதாகத் துரோணரின் கேள்விகள் விரிகின்றன.

கிளிக்கு அம்பெய்த முற்பட்ட மாணவர்களில் அருச்சுனன் மட்டுமே கிளியின் கழுத்துத் தெரிகிறது என்றான். ஏனையவர்களுக்கு கிளையும் இலையும் தெரிந்ததால் கிளி தெரியவில்லை.

இத்தகைய மாணவர்களின் மனநிலையில் தான் ஒற்றுமை உடைக்கப்படுகிறது. இனி நடப்பதைக் கண்டுகொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

# அனைத்து மக்களும் மகிழ்ச்சியாக வாழ்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்துவேன்

## மகேஷ் சேனாநாயக்க

(கொழும்பு)

நாட்டிலுள்ள அனைத்து மக்களினது வாழ்க்கையையும் மேம்படுத்தி, அவர்கள் மகிழ்ச்சியாக வாழ்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்துவேன் என மகேஷ் சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

பப்ரல் அமைப்பின் ஏற்பாட்டில் கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்ற கலந்துரையாடலில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் கூறுகையில், "நாட்டில் அநாவசியமாக செலவாகின்ற அரசாங்கத்தின் நிதியை இனங்கண்டு அதனை வறுமை பிரதேசங்களில் வாழும் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்காக செலவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளேன்.

அதாவது சாதாரண மாணவர்களும் பூரண கல்வியை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தி, கல்வியில் புதிய புரட்சியை உருவாக்குவேன்.

மேலும் நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் தேவையான வேலை வாய்ப்புக்களை உருவாக்குவேன். அதிலும் ஆசிரியர்களுக்கு அதிக சலுகைகளை வழங்குவேன்.

தேசிய பாதுகாப்பு விடயத்தில் வெளிநாடுகளின் அறிவித்தலுக்கு அமைய செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாது. அதாவது எமது நாட்டின் சூழலுக்கு ஏற்பவே நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும்.

அந்தவகையில் நாட்டினதும் மக்களினதும் பாதுகாப்பு நிச்சயம் உறுதி செய்யப்படும். நவீன நாகரிகத்துக்கு ஏற்றவாறு சட்ட திட்டங்களை மதித்து செயற்படுகின்ற ஒரு சமூகத்தை உருவாக்குவேன்" என குறிப்பிட்டுள்ளார். (ம-3)

# ட்ரோன்கள் பறக்கத்தடை

## தேர்தல்கள் செயலகம்

(கொழும்பு)

நேற்று தொடக்கம் நாளை வரை தேர்தல்கள் ஆணைக்குழு அமைந்துள்ள ராஜகிரிய மற்றும் வெலிக்கடை பிரதேசங்களில் "ட்ரோன்கள்" பறப்பதற்கு தடைசெய்யப்படுவதாக தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

"ட்ரோன்கள்" இந்த பிரதேசங்களில் பறக்குமானால் அதற்கு எதிராக வான்படையினர் நடவடிக்கை எடுப்பர் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ம-03)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

காலையில் இரண்டு நிமிடமாவது தியானம் செய்யுங்கள். வேறொரு அற்புத உலகிற்கு தியானம் ஒரு திறவுகோல். -காந்தியடிகள்

# வவுனியாவில் துவிச்சக்கரவண்டி மோட்டார் சைக்கிள் விபத்து

## ஒருவர் படுகாயம்

(பனிக்கன்குளம்)

வவுனியா வைரவப்புளியங்குளம் - புகையிரத நிலைய வீதியில் நேற்று மாலை 5.25 மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - துவிச்சக்கரவண்டி விபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வைரவப்புளியங்குளம் ஆதிவிநாயகர் ஆலயத்திற்கு அருகேயிருந்து பாதையின் மறுபக்கம் திரும்ப முற்பட்ட துவிசக்கரவண்டியினை குருமன்காட்டு சந்தியிலிருந்து புகையிரத நிலைய வீதியூடாக பயணித்த மோட்டார் சைக்கிள் மோதித் தள்ளி விபத்துக்குள்ளானது.

இவ் விபத்தில் துவிச்சக்கரவண்டியில் பயணித்த 42 வயதுடைய பெண் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,250)

# நவராத்திரி பாமாலை

கல்விக்கு இன்று இரண்டாம் நாள்



### கல்வித்தாயே சரஸ்வதியே

வண்ணம் வண்ணமாய் கல்வி தந்திடும்
வாணி சரஸ்வதியே
மீட்டும் சுருதியை எங்கள் கல்விக்காய்
மீட்டவாராயோ கலைவாணியே!
அபிராமிப்பட்டரை அபிராமி அந்தாதி
பாட வரம்கொடுத்த தாயே
கல்வி எனும் பாற்கடலில் நீந்தும் எங்களை
கரைசேர்க்க ஓடமாய் வருவாய் தாயே!
வெள்ளை உள்ளம் கொண்ட தாயே
வெண்மலர் தூவி வணங்குகின்றோம்
மாநிலத்தில் வாழும் சிறார்கள்– நாம்
திசை திரும்பிப் போகாமல்
ஆயகலைகள் அறுபத்து நான்கையும் தந்து
காத்திடுவாய் தாயே சரஸ்தியே!

கே.ஜனுசன்
நயினாதீவு கணேசா கனிஷ்ட ம.வி

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



❖ "உயிர் அனைத்தும் எனக்கே சொந்தம். பெற்றோரின் உயிர் என்னுடையது. பிள்ளைகளின் உயிரும் என்னுடையதே.இது கடவுளின் வாக்கு.

❖ உங்களுக்குள் ஒருவருக்கொருவர் மட்டுமின்றி, அனைவருக்கும், எப்போதும், நன்மை செய்ய முயற்சிக்க வேண்டும்.

❖ நம்பிக்கை இல்லாத தீய உள்ளம், வாழும் கடவுளை விட்டு விலகும். இத்தகைய தீய உள்ளம் உங்கள் எவருக்கும் இல்லாதபடி பார்த்துக் கொள்ளுங்கள்.

❖ அனைவருக்கும் கடவுள் தந்தையுமானவர் ஒருவரே. அவர் அனைவருக்கும் மேலானவர். அவர் அனைவர் மூலமாகவும் செயலாற்றுகிறவர். அனைவருக்குள்ளும் இருக்கிறவர்.

❖ இறைப்பற்றோடு சகோதர நேயமும், சகோதர நேயத்தோடு அன்பும் கொண்டு விளங்குமாறு முழு ஆர்வத்தோடு முயற்சி செய்யுங்கள்.

❖ அடிமையாயினும், உரிமைக் குடிமகனாயினும், நன்மை செய்யும் ஒவ்வொருவரும் ஆண்டவரிடமிருந்துநன்மையே பெறுவர்.

❖ அறிவுத்தெளிவோடு விழிப்பாயிருங்கள்.

# மீண்டும் சம்பியனாகியது தொண்டைமானாறு கலையரசி



அரச தலைவர் கிண்ணத்திற்கான 23 வயதிற்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் மீண்டும் தொண்டைமானாறு கலையரசி அணி சம்பியனாகியது.

டயலொக் நிறுவனத்தின் அனுசரணையில் நடைபெற்ற ஜனாதிபதி வெற்றிக் கிண்ணத்திற்கான யாழ்.மாவட்ட அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் தொண்டைமானாறு கலையரசி அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி அணி மோதியது.

5 செற்கள் கொண்ட போட்டியில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் முகமாக விளையாடினர். ஆனால் பலத்த போராட்டத்தில் தொண்டைமானாறு கலையரசி அணி 25:22, 28:26, 30:28 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் 3:0 வெற்றி பெற்றுச் வெற்றி சம்பியனாகியது.

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் ஏற்கனவே இப்போட்டியை நடத்தி சம்பியன் வழங்கிய போதும் வயது கணிக்கப்பட்டதில் தவறுகள் ஏற்பட்டதையடுத்து மீண்டும் போட்டி நடத்தப்பட்டது.

இதிலும் தொண்டைமானாறு கலையரசி தமது அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி சம்பியனாகியமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது மருதநிலா அணி



கிராஞ்சி செல்சிற்றி விளையாட்டுக்கழகம் மாகாண ரீதியில் நடத்தும் கற்பக சமர் வெற்றிக் கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் மருதநிலா அணியை எதிர்த்து ஜெயந்திநகர் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 02:00 என்ற கோல் கணக்கில் மருதநிலா அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது.

மருதநிலா அணி சார்பாக கதிர், பிரவீன் ஆகியோர் தலா ஒரு கோலை பெற்றுக் கொடுத்தனர். (ஐ)



முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் வெற்றிக் கிண்ணத்துக்கான 40 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் கரைதுறைப்பற்று பிரதேச செயலக அணி வெற்றி பெற்று கேடயத்தை தனதாக்கிக்கொண்டது. இறுதிப்போட்டி நேற்று பிரதேச சபை மைதானத்தில் நடைபெற்றது. இறுதிப் போட்டியில் மாவட்ட செயலக அணிக்கும் கரைதுறைப்பற்று பிரதேச செயலக அணிக்கும் இடையில் இறுதிப்போட்டி நடைபெற்றது. இதில் கரைதுறைப்பற்று பிரதேச செயலக அணி முதலாம் இடத்தை பெற்றுக்கொண்டது.

# பரபரப்பான ஆட்டத்தில் வென்றது உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி!



பருத்தித்துறை லீக்கின் அனுசரணையுடன் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழகம் பருத்தித்துறை, வடமராட்சி லீக்கின் அங்கத்துவ கழகங்களுக்கிடையில் நடத்தி வருகின்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் உடுத்துறை செந்தமிழ் அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 01:00 என்ற கோல் கணக்கில் நவஜீவன்ஸ் அணி வெற்றி பெற்றது.

நவஜீவன்ஸ் அணி சார்பாக வினிகரன் ஒரு கோலை பெற்று கொடுத்தார். (ஐ)

# அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது பாஷையூர் சென்.அன்ரனீஸ் அணி



கிராஞ்சி செல்சிற்றி விளையாட்டுக்கழகம் மாகாண ரீதியில் நடத்தும் கற்பக சமர் வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் பாஷையூர் சென்.அன்ரனீஸ் அணியை எதிர்த்து நியூஸ்ரார் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 05:00 என்ற கோல் கணக்கில் அன்ரனீஸ் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

அன்ரனீஸ் அணி சார்பாக கலிஸ்ரர் 02 , விஜய் , துசாரின், சறோன் ஆகியோர் தலா ஒரு கோலை பெற்று கொடுத்தனர். (ஐ)

# அடுத்த சுற்றுக்கு முன்னேறியது கொடுக்குளாய் சக்திவேல் அணி



பருத்தித்துறை லீக்கின் அனுசரணையுடன் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழகம் பருத்தித்துறை, வடமராட்சி லீக்கின் அங்கத்துவ கழகங்களுக்கிடையில் நடத்தி வருகின்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் அண்ணா சிலையடி யுத் அணியை எதிர்த்து கொடுக்குளாய் சக்திவேல் அணி மோதியது. ஆட்ட நேர முடிவில் 02:00 என்ற கோல் கணக்கில் சக்திவேல் அணி வெற்றி பெற்றது. சக்திவேல் அணி சார்பாக பார்த்தீபன், சிந்தன் ஆகியோர் தலா ஒரு கோலை பெற்று கொடுத்தனர். (ஐ)

**அன்பு வாசகர்களே!**

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

**உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்**

## தேர்தல் ஆணைக்...

கள் அனைவரும் தேர்தல் ஆணைக்குழு வில் முன்னிலையாகுமாறு அறிவிக்கப்பட் டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-3)

## கட்டுப்பணம்...

இன்று நண்பகல் 12.00 மணியுடன் நிறை வடைவதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலுக் கான வேட்புமனு ஏற்பு நாளை காலை 9.00 மணி முதல் முற்பகல் 11.00 மணி வரை இடம்பெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து முறைப்பாடுகளை ஏற்கும் நடவடிக்கை முற்பகல் 11.30 மணிவரை இடம்பெறும்.

இம்முறை தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவரும் தமது சொத்து விபரங்களை வழங்குவதற்கு உடன்பாடு தெரிவித்துள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். (ம-3)

## புலமைப்பரிசில்...

ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் அடுத்த வாரம் வெளியிடப்படவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## 3 ஆயிரம் சேவை...

தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தி யாளர் சந்திப்பில் பங்கேற்று உரையாற்றிய தொடருந்து இயந்திர சாரதிகள் சங்க செயலாளர் இந்திக தொடங்கொட இதனைத் தெரிவித்துள்ளார்.

தங்களது கோரிக்கைகள் தொடர்பில் எந்த நேரத்திலும் கலந்துரையாடத் தயார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள சேவையாளர்களில் பெரும்பாலானவர் களுக்கு சேவையிலிருந்து விலகுவதற்கான கடிதங்கள் கிடைக்க பெற்றுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

வேதன பிரச்சினையை முன்னிறுத்தி 10 வது நாளாகவும் பணிப்புறக்கணிப்பு போராட் டம் முன்னெடுக்கப்படுகின்றது.

எத்தகைய வழிமுறைகளை அரசாங் கம் கையாண்டாலும் தம்மால் முன்னெ டுக்கப்படும் பணிப்புறக்கணிப்பு தொடரும் என தொடருந்து தொழிற்சங்கங்கள் எச்சரித்துள்ளன.

எவ்வாறாயினும், நேற்று முற்பகல் 12 தொடருந்து சேவைகளும் பிற்பகல் வேளை யில் 8 தொடருந்து சேவைகளும் இடம்பெற்ற தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள தொழிற்சங்கங்களுக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு செய்யப்படவுள்ள தாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த எச்சரிக்கையை தொடருந்து பொது முகாமையாளர் டிலந்த பெர்ணான்டோ விடுத்துள்ளார். (ம-3)

## அத்துரலிய ரத்ன...

மன்றுக்குத் தெரிவாகிய அத்துரலிய ரத்ன தேரர், தேசிய அரசு பதவிக் காலத்தில் பாராளு மன்றில் சுயாதீனமாக இயங்க ஆரம்பித் தார்.

இந்த நிலையில் அவர், ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு தனது ஆதரவை வழங்கியுள்ளார். (ம-3)

## பெரும்பான்மை...

குழுவும் மை பெஸ்ட் வோட் இலங்கை பேஸ் புக் குழுவும் இணைந்து கொழும்பில் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வின் போதே இந்தக் கருத்தை மகிந்த தேசப்பிரிய வெளியிட்டுள் ளார்.

இந்நிலையில் முதல் தடவையாக வாக் களிப்பவர்கள் தமது முதல் வாக்கின் மீது அன்பு கொள்ள வேண்டும் என்றும், அத்து டன் அந்த வாக்கு பொறுப்புடன் பயன்படுத் தப்பட வேண்டும் என்றும் தேசப்பிரிய கோரிக்கை விடுத்துள்ளார். (ம-3)

## தமிழ் அரசியல்...

என்ன நிலைப்பாடு எடுப்பது என்பது தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டது.

நேற்றிரவு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பொது அறையில் இடம் பெற்ற சந்திப்பில்,

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றி யப் பிரதிநிதிகளுடன், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன் னணி, தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ். புளொட், ரெலோ அமைப் புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்ட னர்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை. சோ.சேனாதிராசா, சி.சிறீதரன் மற்றும் சீ.வீ.கே. சிவஞானம் ஆகியோரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் அதன் தேசிய அமைப்பாளரும் சட்டத் தரணியுமான வி. மணிவண்ணன், சட்டத் தரணி க.சுகாஸ் ஆகியோரும் தமிழ் மக்கள் கூட்டணியின் சார்பில் க.அருந்தவபாலன், த.சிற்பரன் ஆகியோரும் ஈ.பி.ஆர்.எல்.எவ் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனும் புளொட் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன். முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜ தீபன் மற்றும் எஸ்.ராகவன் ஆகியோரும் ரெலோ அமைப்பின் சார்பில் அதன் செய லாளர் நாயகமும் சட்டத்தரணியுமான என். சிறிகாந்தாவும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

தமிழ் மக்களின் நலன் நோக்கி, பொது நிலைப்பாடொன்றுக்கு வருவதற்கான இணக்க நிலை தோற்றுவிக்கப்பட்டிருப்பதாக வும், அது தொடர்பில் பல்கலைக்கழக மாண வர் ஒன்றியத்தினரே உத்தியோகபூர்வமான நிலைப்பாட்டை வெளியிடுவர் என்றும் சந் திப்பை முடித்துக் கொண்டு வெளியேறிய கட்சிகளின் பிரதிநிதிகள் குறிப்பிட்டனர்.

மேலும், குறித்த சந்திப்பு பயனுள்ளதாக அமைந்ததோடு அடுத்த சந்திப்பை நாளை திங்கட்கிழமை நடத்துவதற்கும் இணக்கம் காணப்பட்டிருப்பதாக அறிய முடிகிறது. (ம-3,9,10)

## பிரபாகரனே தமிழ்...

வாறு தெரிவித்தார்.

அவர் மேலும்தெரிவிக்கையில், தமிழன் என்றால் பண்பாடு, கலை கலாசாரம் உண்டு. அதனை சிறந்த முறையில் பேணிக் காத்து இன்று பழைமையான தமிழ் மொழியை பாதுகாத்து வருவது ஈழம்தான் எனத் தெரிவித்தார்.

இவ்வாறு போற்றப்பட்ட தமிழ் இனத்தை யும் தமிழ் மொழியையும் உலகளாவிய நீதியில் பெருமைப்படுத்திய பெருமை தலைவர் பிரபாகரனையே சாரும்.

இதை நான் எந்த இடத்திலும் உறுதி யாகத் தெரிவிப்பேன். இந்த மண்ணை நேசிப்பவர்கள் பலர் வெளிநாடுகளில் செல்வச் செழிப்புடன் வாழ்ந்து வருகிறார்கள். அவர் களின் உதவிகளும் இந்த மண்ணுக்குத் தேவை. அதைப்போல் நாடும் எங்களால் ஆன பணியை இந்த மண்ணுக்குச் செய் யத் தயாராவே உள் ளோம்என இயக்குநர் பாரதிராஜா மேலும் தெரிவித்தார்.(ம-3,10)

## யுத்தத்...

என ஸ்ரீலங்கா பொதுஜன முன் னணியின் ஜனாதி பதி வேட்பாளர் கோத்தபாய ராஜ பக்ஷ தெரிவித்துள் ளார்.

எங்கள் எதிர் காலம் எங்கள் கரங்களில் என்ற தொனிப்பொருளில் பத்தரமுல்லையில் நேற்று இடம்பெற்ற மலையக இளை ஞர்களுக்கான கருத் தரங்கில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இதனை தெரி வித்துள்ளார்.

யுத்தத்தை ஆரம் பித்தவர்கள் தாங் கள் அல்ல.

அதனை முடி வுக்கு கொண்டுவந்த வர்களே தாங்கள் என்றும் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித் துள்ளார்.

ஆனால் தங்கள் மீதே பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன் வைக்கின்றனர்.

இது சிறந்த அரசியல் தேவைப்பாடுகள் என்பதை அறிந்துக்கொள்ள முடிகின்றது.

அவர்களே தமிழ் மக்கள் மத்தியில் தவ றான பிரசாரங்களை முன்வைக்கின்றனர் என கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

யுத்தம் தொடர்ந்தும் நீடித்திருந்தால் அத னால் பாரிய அழிவுகளை சந்திக்க நேர்ந் திருக்கும்.

எனினும் அதனை தம்மால் முடிவுக்கு கொண்டுவர முடிந்தது என்றார். (ம-3)

# இனவாதத்தை தூண்டிவிட சிலர் முயற்சி

## மனோ எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் மீண்டும் இனவாதத்தை தூண்டி விடுவதற்கான ஆயத்தங்கள் சில விஷமிகளால் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் மனோ கணேசன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தனது முகப்புத்தகத்தில் அவர் நேற்று இட்டுள்ள பதிவிலேயே இதனைத் தெரிவித் துள்ளார்.

சிங்கள மக்கள் மத்தியில் (தமிழர், முஸ் லிம்களுக்கு எதிரான) இனவாதம், தமிழ் முஸ்லிம் மக்கள் மத்தியில் (அரசுக்கு எதி ரான) விரக்தி ஆகியவற்றை தூண்டி விட்டு, இவற்றி னால் தம் வெற்றியை அறுவடை செய்ய திட்டமிட்ட முயற்சி நடைபெறுகிறது எனவும் அவர் அந்த பதிவில் தெரிவித் துள்ளார். (ஜ)

## பொதுஜன பெர...

இவ்விடயத்தில் இருதரப்பினருக்கும் இடையில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாக வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அங்கத்தவர்கள் வெளிப்படுத்து கின்ற கருத்துக்கள் கோத்தாவை ஆதரிப் பதனை உறுதி செய்வதாக பாராளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தெரிவித் துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-3)

## முதற் தடவையாக...

வேட்பாளர்கள் ஒரே மேடைக்கு நேற்று அழைக்கப்பட்டனர்.

சுகததாச உள்ளக அரங்கில் நேற்று மாலை 'மக்கள் மேடை' நிகழ்வு இடம் பெற்றது.

மார்ச் 12 அமைப்பு, பப்ரல் அமைப்பு மற்றும் எவ்ரில் இளைஞர் வலயமைப்பு ஆகியன இணைந்து மக்கள் மேடை நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

ஜனாதிபதி வேட்பாளர்கள் தமது கொள்கைகள் மற்றும் திட்டங்களை மக்கள் மயப்படுத்துவதே இந்த நிகழ்வின் முக்கிய நோக்கமாகும்.

ஒரே மேடையில் இருந்து கொள்கை ரீதியான விவாதத்தில் ஈடுபடுவதற்காக, ஜனாதிபதி வேட்பாளர்களான கோத்தபாய ராஜபக்ஷ, சஜித் பிரேமதாஸ மற்றும் அநுர குமார திசாநாயக்க ஆகியோர் அழைக் கப்பட்டிருந்தனர்.

கடந்த தேர்தல்களின்போது 2 இலட் சத்திற்கும் அதிக வாக்குகளைப் பெற்ற கட்சி களை அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்து கின்ற அடிப்படையில் அவர்கள் அழைக்கப் பட்டிருந்தனர்.

எனினும், கோத்தபாய ராஜபக்ஷ இந்த விவாதத்தில் பங்கேற்கவில்லை. (ம-3)

## செஞ்சோலை...

கரைச்சி பிரதேச செயலகம் எழுத்து மூல மான அறிவித்தலை செஞ்சோலை காணி யில் குடியிருக்கும் செஞ்சோலை பிள்ளை களின் தற்காலிக வீடுகளில் ஒட்டியுள்ளனர்.

இதனால் செஞ்சோலைப் பிள்ளைகள் நிர்க்கதிக்குள்ளாகி செய்வதறியாது தவித்துக் கொண்டிருக்கின்றனர். (ம-3)
























## அமெரிக்க லொத்தர் விசா

பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன

2021ல் நீங்களும் அமெரிக்காவில்..

ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம் 0768226241

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற அரிய சந்தர்ப்பம்

குடும்பத்தினர்களுக்கு இரண்டு வாய்ப்புக்கள் 02-10-2019 தொடக்கம் 05-11-2019 வரை

வெளிநாட்டில் வாழ ஒரு இலவச சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | நெல்லியடி | சாவகச்சேரி | திருகோணமலை | புதுக்குடியிருப்பு |
|---|---|---|---|---|---|
| 0768226243 | 0768226240 | 0776699892 | 0768226242 | 0768226237 | 0764550673 |
| மானிப்பாய் | சுன்னாகம் | கொடிகாமம் | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை | மருதங்கேணி |
| 0768226238 | 0764550670 | 0764550675 | 0768226230 | 0776697960 | 0764550671 |

V2 Travels www.facebook.com/v2tandt



வெளிநாடு - உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION 070 330 5500 WESTERN UNION

அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி (C-7757)

021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்

கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்

முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை



## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK – 550 /-Kg

கனடா - 950 /-Kg

ஜேர்மனி - 650 /-Kg

நெதர்லாந்து- 700 /-Kg

இத்தாலி- 700 /-Kg

DELIVERY IN 3-5 DAYS

0768226240

V2 TRAVELS



வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603

021 567 1532



## தவறவிடப்பட்டுள்ளது

யாழ்.நகரிலிருந்து காரைநகர் செல்லும் கல்லுண்டாய் வீதியில் கோயில் படங்கள் கொண்ட மூன்று அல்பம் 29.09.2019 அன்று தவறவிடப்பட்டுள்ளது.

கண்டவர்கள் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு:-

077 738 5701

077 933 2058 (553)



## வாடகைக்கு அல்லது விற்பனைக்கு

யாழ்.நகரில் மின்சார நிலைய வீதியில் அனைத்து வசதிகளும் உடைய 4 மாடி கடை கட்டடம் வாடகைக்கு அல்லது விற்பனைக்கு உள்ளது.

மொத்தமாக 5000 சதுர அடி கொண்டது. காட்சியறைகள், நிறுவனங்கள் என்பவற்றுக்கு உகந்தது

தொடர்பு: 077 335 9750 (540)



## சுப்பர் சிங்கர் இசை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், வவுனியா



ரோஷினி செந்தில் - ராஜலக்ஸ்மி அனிருத்

காலம் - ஒக்டோபர் 13ம் திகதி ஞாயிறு மாலை 3.30

இடம் - யாழ்.கே.கே.எஸ்.வீதி (பூநாறி மடம்), செல்வா பெலஸ் (A/C)

காலம் - ஒக்டோபர் 14ம் திகதி திங்கள் மாலை 6.30

இடம் - வவுனியா நகர சபை கலாசார மண்டபம்

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு K.T. பிரசாத் (C-7794)



## கடை விற்பனைக்கு

மானிப்பாய் ஆலடிச்சந்தியில் (ரவுண்ட போட் அருகில்) சகல வசதிகளுடன் கூடிய கடை விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு (542)

075 643 4535

Viber 0016478919714



## நிரந்தர வேலைவாய்ப்பு

வேலையற்ற இளைஞர் யுவதிகளுக்கான ஓர் அரிய சந்தர்ப்பம். எங்களிடம் (DME) எமது நிறுவனம் இலங்கையில் வட மாகாணத்தில் 18 ற்கு மேற்பட்ட புதியகிளைகளுக்கு 68 பதவி வெற்றிடங்களை பூர்த்தி செய்யவுள்ளோம்.

புதிய கிளைகள் ஆரம்பிக்கப்படவுள்ள இடங்கள்


•யாழ்ப்பாணம் •கிளிநொச்சி •முல்லைத்தீவு

•மன்னார் •வவுனியா •திருகோணமலை

பதவிகள் : விற்பனை பிரதிநிதி, அலுவலகர், மேற்பார்வையாளர், உதவி முகாமையாளர், முகாமையாளர். தகைமை : 10 தொடக்கம் O/L, A/L மேற்கல்வி கற்றோருக்கும் நேர்முக தெரிவினூடாக தெரிவு செய்யப்படுவர். குறிப்பு : முன் அனுபவம் அற்றவர்களுக்கு தகுந்த பயிற்சியினூடாக நிரந்தர உயர் பதவியை பெற்றுக்கொள்ள கூடிய வாய்ப்புகள் உண்டு.

தொடர்புகளுக்கு : 077 126 3805 / 077 326 0979 (497)


# மரண அறிவித்தல்



தோற்றம் : 08.05.1927 மறைவு : 04.10.2019

## சின்னத்துரை விசுவலிங்கம்

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

கரணவாய் மூத்தவிநாயகர் கோவிலடியை பிறப்பிடமாகவும் இமையாணன் கிழக்கு செம்பாட்டோலையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை விஸ்வலிங்கம் அவர்கள் நேற்று முன்தினம் 04.10.2019 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் சின்னத்துரை - மீனாட்சி தம்பதிகளின் புதல்வரும், சிவபாக்கியத்தின் பாசமிகு கணவரும், சிவனேசராசா, சிவானந்தராசா, சிவலிங்கராசா, திருமங்களாதேவி, சசிகலா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற நாகம்மா பரஞ்சோதி, செல்லத்துரை கணேசலிங்கம், திலகவதி அச்சுதன் ஆகியோரின் சகோதரரும், தவமலர், ராஜேஸ்வரி, லலிதா, மகாதேவன், சதீஸ்குமார் ஆகியோரின் மாமனாரும், கிசோர், கினேசன், பானுசன், விதுசன், ரேணுகா, அனோசன், மொனேஸ், லக்சியா, ராகேஸ், றோகித் ஆகியோரின் பேரனும் மற்றும் நச்சுனாச்சினியனார், பரிமேலகர், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, விபுலானந்த அடிகள், மாணிக்கவாசகர் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.10.2019) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

செம்பாட்டோலை

இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி.

தகவல் : குடும்பத்தினர்

077 151 3874

(C-7800)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.10.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka

விலை : 30.00

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 237

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2050 | 06.10.2019 | தொலைபேசி : 021 222 3378






## தேர்தல் முடிவுக்கு முன் கொண்டாட்டம்

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு



## இந்த முறை ஜனாதிபதித் தேர்தல் சூடு பறக்கும் போல...

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

இதனைத் தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். திருமதி தயாரதி சீவரட்ணம் அவர்கள் மறைந்த செய்தியறிந்து எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள 110 வருடங்கள் பழைமையான கட்டடத்தை திருத்துவதற்கு நிதியுதவி வழங்கிய அவருக்கு யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரும் உத்தியோகத்தர்களும் தமது அஞ்சலியைச் செலுத்தியுள்ளனர். அன்னாருக்கு ஆலடி மாநா டும் தனது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறது.

மேலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியற்றுறைத் தலைவராகவும் சிரேஷ்ட விரிவுரையாளராகவும் இருந்து ஓய்வு பெற்ற செல்வி சுசிலாதேவி அருளானந்தம் அவர்களுக்கும் எமது அஞ்சலியைத் தெரிவித்து இருவருக்கு மாக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனப் பண்டிதர் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

ஜனாதிபதித் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ஷ போட்டியிடலாமென்று நீதிமன்றம் தீர்ப்பளித்து விட்டது. இனி தேர்தல் களம் கமறப் போகுது. கங்காணி கார்த்திகேயன் அவசரமாகக் கூறினார்.

ஜனாதிபதித் தேர்தலில் முன்பு ஒருபோதும் இல்லாத அளவில் . வேட்பாளர்கள் போட்டியிடப் போகினம்.

அதுதான் பெரிய அதிசயம். விதானையார் விசுவலிங்கம் கூற, ஆலடி மாநாடு அதனை ஆதரிப்பது போல மௌனமாக இருந்தது.

**மூப்பர்:** அது சரி, தமிழ் மக்கள் பேரவையால் அமைக்கப்பட்ட சுயாதீனக்குழு, தமிழ் அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருக்குது. முடிவு என்ன என்பது தெரியல்ல.

**சிறாப்பர்:** தமிழ் அரசியல் கட்சிகளை ஒன்றிணைப்பதில சுயாதீனக்குழு தனது பணியை மிகச் செம்மையாகச் செய்கிறது. என்னைப் பொறுத்தவரை எதுவாக இருந்தாலும் ஒட்டுமொத்தத் தமிழ் மக்களும் ஒரே முடிவை எடுத்து அதன்படி நடக்க வேணும். தமிழினம் தன்ர உரிமை விடயத்தில ஒற்றுமையாகவும் உறுதியாகவும் இருக்கிறது என் பதை எடுத்துக் காட்ட வேணும்.

**சாத்திரியார்:** ஜனாதிபதித் தேர்தலில எல்லாத் தமிழ் அரசியல் கட்சிகளும் ஒரே முடிவை எடுக்கின்ற வகையில் அனைத்துத் தமிழ்க் கட்சிகளையும் ஒன்றாக அழைத்து பேச்சுவார்த்தை நடத்துகிறது நல்லது என்று நினைக்கிறன்.

**வாத்தியார்:** சுயாதீனக் குழு இது விடயத்தில நடவடிக்கை எடுக்கும் என்பதுதான் என்னுடைய நம்பிக்கை.

**பண்டிதர்:** சரி... சரி... அரசியல் விவகாரங்களை விட்டிட்டு எங்கட கதையளைக் கதைப்பம்.

**வாத்தியார்:** பண்டிதர் ஐயா அப்படிச் சொல்லாதீங்கோ. அரசியலும் எங்கடகதைதான். நடக்கப் போற ஜனாதிபதித் தேர்தலில ஒரு சரியான முடிவை எடுக்கத் தவறினால் எல்லாம் அம்போதான்.

**கங்காணி:** வாத்தியார் நீங்கள் சொல்லுறதும் சரிதான். ஆனால் அரசியல் என்று வந்தவுடன எல்லாத் தீர்மானங்களையும் அரசியல் கட்சிகள் தானே முடிவெடுக்கப் போகினம். தமிழ் மக்களின்ர அபிப்பிராயங்கள் எதுவும் கேட்கப்படுவதாகத் தெரியவில்லை.

**வாத்தியார்:** தமிழ் மக்கள் தங்கள் பலத்தைக் காட்டவேண்டும். எதுக்கெடுத்தாலும் அரசியல் கட்சிகள் சொல்லுறதும் செய்யிறதும்தான் திறம் என்று நினைத்தால் எங்களால எதுவும் செய்ய முடியாமல் போகும். ஆகையால அரசியல்வாதிகளை முதலில எங்கட பக்கம் அழைப்பம். அதற்காக எம்மிடையே ஒற்றுமைப் பலத்தை உருவாக்க வேண்டும்.

**பண்டிதர்:** இந்த அரசியலை விட்டிட்டு எங்கட சமூகப் பிரச்சினைகளைக் கதைப்பம்.

(பண்டிதர் தொடர்ந்து வலியுறுத்தியதனால் ஆலடி மாநாடு சமூகப் பிரச்சினைகளை ஆராய முற்பட்டது.)

**விதானையார்:** அதுசரி கடந்த ஆலடி மாநாட்டில சிதம்பரத்தில இருக்கிற யாழ்ப்பாண சைவபரிபாலன சபைக்குச் சொந்தமான புண்ணிய நாச்சியார் மடத்தில பெயர் பொறித்த கல்லை அகற்றிப் போட்டு ஒரு கண்ணாடியை பதித்திருக்கினம் எண்டு பிரஸ்தாபிக்கப்பட்டது. அது விடயத்தில யாழ்ப்பாண சைவபரிபாலன சபை ஏதேனும் நடவடிக்கை எடுத்ததோ.

**சிறாப்பர்:** எடுத்ததாகத் தெரியவில்லை.

**சாத்திரியார்:** அப்படி ஏதேனும் நடவடிக்கை எடுத்தால் அதை மக்கள் மத்தியில் தெரியப்படுத்த வேணும்.

எதிலும் வெளிப்படைத்தன்மை இல்லாததாலதானே இன்றைக்கு நாங்கள் இவ்வளவு இடர்பாடுகளைச் சந்திக்கிறம்.

கட்டட அடிக்கல் நாட்டுறதுக்கே தன்ர நிர்வாக உறுப்பினர்களுக்கு அறிவிக்கவில்லை என்று குறைபடுகிற அளவுக்குத்தான் சைவபரிபாலன சபை இருக்குது.

நிலைமை இவ்வாறாக இருக்கையில், சிதம்பரத்தில இருக்கிற புண்ணிய நாச்சியார் மடத்தின்ர கல்வெட்டை அகற்றிக் கண்ணாடி வைத்தது தொடர்பில உண்மை நிலை என்ன என்பதை சைவ பரிபாலன சபை வெளிப்படுத்தும் என்று நான் நம்பல்ல.

**மூப்பர்:** அதுசரி போகட்டும். இண்டைக்கு வேலணைப் பக்கம் போனனான். வேலணை வடக்கு வீதியில மிக நீண்ட தூரத்திற்கு மர நடுகை செய்திருக்கினம். அதைப் பார்த்த போது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

**வாத்தியார்:** இது மட்டுமல்ல மண்டைதீவிலும் மர நடுகைக்கான ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டது. வேலணை வடக்கு வீதியில மரநடுகையை முன்னெடுத்துள்ள வேலணை பிரதேச செயலகத்தை உண்மையிலேயே பாராட்ட வேணும்.

இதுபோல எல்லா இடங்களிலும் மரநடுகை நடந்தால் எங்கட இடங்கள் பசுமையாக மாறிவிடும்.

**வாத்தியார்:** அப்ப மர நடுகையில ஈடுபட்டுள்ள அனைவருக்கும் ஆலடி மாநாட்டில வாழ்த்துத் தெரிவிப்பம்.

இவ்வாறு வாத்தியார் கூற, அந்த வாழ்த்துக்காக ஆலடியில் இருந்த அத்தனை பேரும் எழுந்து நிற்க, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடி மாநாட்டை நிறைவு செய்தவர்கள் கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தரப்புடன் பேரம் பேசும் கட்டாயத்தை ஏற்படுத்த வேண்டும்







2019 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதி நாட்டின் அடுத்த ஜனாதிபதி யார் என்பதைத் தீர்மானிக்கப் போகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் மொட்டுச் சின்னத்தில் கோத்தபாய ராஜபக்ஷ போட்டியிடுவது உறுதியாயிற்று. அவரின் குடியுரிமை தொடர்பில் எழுந்த சர்ச்சை பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியிருந்தது.

இந்தக் குழப்பம் மகிந்த ராஜபக்ஷ தரப்பையும் உலுப்பிவிட, அவர்கள் அவசர அவசரமாக சமல் ராஜபக்ஷவை சுயேட்சையில் நிறுத்தும் பொருட்டு கட்டுப் பணத்தையும் செலுத்தியிருந்தனர்.

எனினும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ஷ போட்டியிடுவதற்கு எந்தத் தடையுமில்லை என நீதிமன்றம் தீர்ப்புத் தந்துவிட மகிந்த ராஜபக்ஷ தரப்பு மகிழ்ச்சியின் உச்சத்தில் கேக் வெட்டிக் கொண்டாடியுள்ளது.

இதெல்லாம் அரசியலில் சகஜம் என்ற அடிப்படையில் அவற்றை ஒருபுறம் வைத்துவிட்டு, ஜனாதிபதித் தேர்தல் எவ்வாறாக அமையப் போகிறது என்று பார்ப்பதுதான் பொருத்தமுடையதாக இருக்கும்.

2019 ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தல் என்பது முன்னெப்போதும் இல்லாத அளவில் மிகப்பெரும் போட்டியைக் கொண்டிருக்கும் என்பது நிராகரிக்க முடியாத உண்மை.

அதாவது எப்பாடுபட்டாவது கோத்தபாய ராஜபக்ஷ தேர்தலில் வெற்றி பெற்றால் மட்டுமே மகிந்த தரப்பிற்கு எதிர்காலம் உண்டு என்றளவில் அவர்களின் நிலைமை உள்ளது.

கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறமுடியாமல் போனால், அது பொதுஜன பெரமுனவுக்கான தோல்வி என்பதைவிட மகிந்த ராஜபக்ஷவின் குடும்பத்திற்கு ஏற்பட்ட தோல்வி என்பதாகவே அமையும்.

தவிர், கோத்தபாய ராஜபக்ஷ தோல்வியுற்றால், அதன்பின்பு கோத்தபாயவிற்கான மதிப்பு மரியாதை என்பது ராஜபக்ஷ குடும்பத்திலேயே முதலில் வீழ்ச்சியடையும்.

எனவே, எப்பாடுபட்டேனும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றாக வேண்டும். அதற்காக எவ்வளவு செலவும் செய்யலாம் என்ற நிலைப்பாட்டில் மகிந்த தரப்பு களமிறங்கும்.

இது அவர்கள் பக்கமென்றால், ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் எதிர்காலத்தையும் இந்தத் தேர்தலே தீர்மானிக்கப் போகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற சந்தர்ப்பத்தைத் தனக்குத் தரவேண்டுமென இறுக்கமாக நின்று அந்தச் சந்தர்ப்பத்தை பெற்றுக் கொண்டவர் சஜித் பிரேமதாஸ.

தவிர, ஜனாதிபதிக்கான அதிகாரத்தைக் குறைப்புச் செய்வதற்கான சூழமைவு ஏற்பட்டபோது அதற்கு ரணில் விக்கிரமசிங்க, மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் ஆதரவாக இருந்தாலும் சஜித் பிரேமதாஸ அதனைக் கடுமையாக எதிர்த்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் யானே வெற்றி பெறப்போகிறேன். அவ்வாறு வெற்றிபெறும் எனது அதிகாரத்தைக் குறைப்புச் செய்வதற்குச் சதித்திட்டம் தீட்டுகிறீர்களா? என்பது போல சஜித்தின் பார்வை இருக்க,ஜனாதிபதியின் அதிகாரக் குறைப்பு என்ற விடயம் அப்படியே அடங்கிப் போயிற்று.

ஆக, பலத்த எதிர்ப்புக்கள், பதிலீடுகள் என்ற சவால்களை முறியடித்து சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி வேட்பாளராக இறக்குதல் என இறுதித் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்நிலையில் சஜித் பிரேமதாஸ தேர்தலில் தோல்வியடைவாராக இருந்தால், அவரை எதிர்ப்பவர்களை, தூற்றுபவர்களைத் தேடி வெளியில் செல்லத்தேவையில்லை.மாறாக அவரின் கட்சிக்குள்ளேயே அதற்குரியவர்கள் நிறையப்பேர் இருப்பர்.

இவையாவற்றுக்கும் மேலாக, ஜனாதிபதித் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ஷ வென்று சஜித் பிரேமதாஸ தோற்றுப் போவாராக இருந்தால், அடுத்த பல வருடங்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சி தலைநிமிர்த்த முடியாமல் போகும் என்பதுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கமீது பழிதீர்க்க மத்திய வங்கியின் பிணைமுறி விவகாரம் மீண்டும் கையிலெடுக்கப்படும் என்பது நிறுதிட்டமான உண்மை.

இவ்வாறான சூழ்நிலை ஏற்பட்டால் அது மிகப்பெரிய கஷ்டங்களையும் நஷ்டங்களையும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்களுக்குக் கொடுக்கும் என்பதும் மறுக்கமுடியாத உண்மை.

இவ்வாறான கட்டத்தில் தலையால் நடந்தேனும் ஜனாதிபதித் தேர்தலில் வெல்ல வேண்டும் என்ற கட்டாயத்தை சஜித் பிரேமதாஸவுக்கு ஏற்படுத்தும்.

இவ்வாறானதோர் சூழமைவு இப்போது உடனடியாக ஏற்படாவிட்டாலும் தேர்தல் நடைபெறுகின்ற நவம்பர் 16 ஆம் திக திக்கு முன்னதாக ஏற்பட்டேயாகும்.

இந்நிலைமை ஏற்படுகின்றபோது சஜித் பிரேமதாஸ எடுக்கின்ற ஒரே முடிவு தமிழ்-முஸ்லிம் மக்களின் ஆதரவைப் பெற்றாக வேண்டும் என்பதாக இருக்கும்.

அதிலும் முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் கோத்தபாய ராஜபக்ஷவை எதிர்க்கவே செய்வர். இந்த எதிர்ப்பு முஸ்லிம்களின் வாக்குகள் சஜித் பிரேமதாஸவுக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தும்.

நிலைமை இவ்வாறாக இருக்கையில், அடுத்த கட்டம் தமிழ் மக்களின் வாக்குகள் என்பதாக இருக்கும். இங்குதான் தமிழ் அரசியல் கட்சிகள் தமக்குள் ஒன்றுபட்டு மிகநுட்பமான வியூகம் ஒன்றை அமைத்து வைத்திருப்பார்களாயின் அந்த வியூகம் தமிழ்த் தரப்புடன் பேரம் பேசுவதைத் தவிர வேறுவழியி ல்லை என்ற ஒரு கட்டாயத்தை சஜித் பிரேமதாஸவுக்கு ஏற்படுத்தும்.

இந்நிலையில் உத்தரவாதம் வழங்குதல் என்ற தவிர்க்க முடியாத தீர்மானத்தை சஜித் பிரேமதாஸ எடுப்பார். இந்த நடைமுறை பிசகாமல் அரங்கேற வேண்டுமாயின் அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளும் ஒன்றுபட்டு ஏகமனதான முடிவை தம்வசம் வைத்திருக்க வேண்டும்.

விதுரன்




# அலை சொல்லும் பாடம்

கரையில் நின்று பார்த்துக்கொண்டிருக்கின்றீர்கள். எதிர்க்கரை எங்கே இருக்கிறது? என்று எமது கண்களை அகல விரித்து வைத்து பார்த்துக்கொண்டிருப்போம். எங்கும் நீலநிறமாகத் தெரியும். வெண்ணிறமான மாலை போன்று அலைகள் ஓயாது வந்து கொண்டிருக்கும். நீர்ப்பறவைகள் பறந்தபடியே இருக்கும். அத்தனையையும் வியந்து, வியந்து பார்த்துக் கொண்டிருக்கும் போது பேரிரைச்சலோடு அலைகள் நம்மை நோக்கி தவழ்ந்து வரும். பாய்ந்தும் சீறியும் வரும். ஓடுகின்ற நிலப்பரப்பு நம் கால்களை இழுக்கும். அழுத்தமாக கால்களை ஊன்றிக் கொண்டால் வந்த அலைகள் வடிந்து மீண்டும் கடலுக்குள் சென்றுவிடும் வருவதும் திரும்பிப் போவதும் தான் அலைகளின் இயல்பு.

அலைகள் மட்டுமல்ல, கவலைகளும் நம் வாழ்வில் வரும் போகும். மனிதனை சோதிக்க வரும் கவலைகள் அவனை புடம் போட்டு பொன்னாக்கும். தாங்கும் வலிமையினை தந்துவிடும். எதிர்கொள்ளும் ஆற்றலை தந்துவிடும். நிலைத்து நிற்கும் சக்தியை வழங்கிவிடும். கரையில் ஸ்திரமாக காலை ஊன்றி நிற்பது போல



மனதில் இறைவனின் திருநாமத்தை இடையறாது சொல்லிக் கொண்டிருந்தால் அலைகளைப்போல் கவலைகளும் திரும்பிவிடும்.

எல்லா வசதிகளும் நிறைந்து இருந்து எதற்குமே ஓரடி நடக்க வேண்டாம் என்ற நிலை வந்தால் என்ன ஆகும்? சில நாட்கள் சந்தோசமாக இருக்கலாம். பின் அதுவே சோம்பலாகி துருப்பிடித்த இரும்பு போல் ஆகி வலிமையான இரும்பு துரும்பான கதையாக நமது வாழ்வு ஆகிவிடும். எதிர்ப்புக்களை முறியடிக்க உழைக்க வேண்டும். வியர்வை சிந்தி பாடுபட வேண்டும். விசை என்ற ஒன்று இருந்தால் தான் வேகம் உண்டாகும். துடுப்பை வலிமையாக இயக்கினால் தான் நீரோட்டத்தை சமாளித்து கரை சேர முடியும். கவலைகளும் சோதனைகளும் தம்மை யார் என்று சிந்திக்க தூண்டுபவை. வருவதை எதிர்கொள்ள ஆற்றல் தேவை. அந்த ஆற்றலையும் துணிவையும் இறையருள் ஒன்று தான் எமக்கு தரமுடியும். நீங்கள் எதை நினைக்கிறீர்களோ அதுவாகவே ஆகிவிடுவீர்கள். இறைவனுடைய திருநாமத்தை கூறிக்கொண்டிருந்தால் இறைசக்தியின் பேராற்றல் உங்களுக்குள்ளும் நிறையத் தொடங்கும். அந்த மகா சக்தி உங்களை இயக்கத் தொடங்கும். அந்த நிலையில் உங்கள் விருப்பம் என்ற எதுவும் தனியாக எதுவும் இருக்காது. உங்களை வழி நடத்துவது இறைசக்தியாகும் போது உங்களுக்குள் நடப்பது நன்மையாகவே இருக்கும். நன்மையை தவிர வேறு எதுவும் நிகழாது. இதுதான் பக்தியின் வலிமை. எனவே இறைவன் திருநாமம் உங்கள் இதயத்தில் எப்போதும் ஒலித்துக்கொண்டே இருக்கட்டும்.

அந்த மகாமந்திரத்தின் ஓசை உலகம் எங்கும் எதிர் ஒலிக்கட்டும். இதன்மூலம் உங்கள் பிறவி மகத்தான பிறவியாக ஆகி மனித பிறவியின் இலக்கை அடைந்து விடுவீர்கள்.

-சிவனடியான்-

## பழமொழிகள்

- ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது.
- இடித்தவள் புடைத்தவள் இங்கே இருக்க, எட்டிப் பார்த்தவள் கொட்டிக்கொண்டு போனாள்.
- அறிய அறியக் கெடுவார் உண்டா?
- மாடு கெட்டால் தேடலாம், மனிதர் கெட்டால் தேடலாமா?
- தந்தை எவ்வழி புதல்வன் அவ்வழி.



யோ.தமிழ், தரம் 07,
யா/நல்லூர் C.C.T.M, SOS சிறுவர் கிராமம் நாயன்மார்கட்டு நல்லூர்.

# நம்மை நாமே பாதுகாப்போம்

சிறுவர்கள் என்பவர்கள் யார்? 18 வயதிற்கு குறைந்த அனைவருமே சிறுவர்களாகவே கருதப்படுகின்றனர். இனம், மதம், மொழி போன்ற பேதங்கள் இங்கு கிடையாது. சிறுவர்கள் அனைவரும் இச் சமுதாயத்தில் வாழ்வதற்கு உரிமை பெற்றவர்கள். ஆயினும் இவர்களுக்கு உள்ள கடமைகள், பொறுப்புக்கள், உரிமைகள் என்பன தற்போதைய சூழலில் மீறப்படுகின்றன. சிறுவர்களுக்கு உள்ள உரிமையாக உயிர்வாழும் உரிமை, கல்வி பெறும் உரிமை, பெற்றோருடன் வாழும் உரிமை எனப் பல உரிமைகள் உண்டு. உறுப்புரிமை ஆறில் கூறியவாறு அனைத்து சிறுவர்களுக்கும் உயிர் வாழ்வதற்கு உரிமை உண்டு என்று இருந்தாலும் கூட அது நடைமுறையில் சாத்தியமாகவுள்ளதா? என்பது ஐயத்திற்கிடமே. தற்போதைய சமூகத்தில் சிறுவர்களின் உரிமையைப் பாதுகாக்க இலங்கைச் சட்டம், அரசியலமைப்புச் சட்டம், யாப்புக்கள் எனப் பல உருவாக்கப்பட்டுள்ளன. இவ்வாறு காணப்பட்டாலும் சமூகத்தில் தற்பொழுது நிகழ்ந்துகொண்டிருப்பது என்ன? சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்கின்றார்கள், விற்பனை செய்கின்றார்கள், வேலைக்கமர்த்துகின்றார்கள், இம்சைப்படுத்துகின்றார்கள். இது மட்டுமல்லாமல் உடல் ரீதியான துஷ்பிரயோகம், உள ரீதியான துஷ்பிரயோகம், பாலியல் ரீதியிலான துஷ்பிரயோகம் என்பனவும் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றமை யாவரும் அறிந்ததே.

மேலும் 18 வயதிற்கு உட்பட்ட அனைத்து ஆண், பெண்பிள்ளைகளும் சிறுவர் ஊழியத்தின் மிக மோசமான வடிவங்களிலிருந்து விடுபட்டவர்களாய் தமது உடல் மற்றும் உள அபிவிருத்தியை மேற்கொள்வதற்கான ஓர் அடிப்படை உரிமையைக் கொண்டுள்ளனர். ஆயினும் சிறுவர்களை வஞ்சகமாகக் கடத்தி விற்பனை செய்தல், கொத்தடிமைத்தனம், ஆயுதப் போராட்டப் பயன்பாட்டிற்கெனப் பலவந்தமாக அல்லது கட்டாயமாகச் சிறுவரை ஆட்சேர்த்தல் உள்ளிட்ட பலவந்தமான அல்லது நிர்ப்பந்தத்தின் பேரிலான ஊழியம் போன்ற அடிமைத்தனம் அதிகரித்து வருகின்றது. அத்துடன் இழிவோவியங்கள் தயாரிப்பு அல்லது இழிவோவியம் சார் செயலாற்றுகைகள் என்பவற்றிற்காகவும் ஒரு சிறுவனை அல்லது சிறுமியைப் பயன்படுத்தல், பெற்றுக் கொள்ளல் அல்லது வழங்குதல் போன்றனவும் இன்று நடைபெறுகின்றன.

இன்று ஏன் சிறுவர்கள் வேலை செய்கின்றனர்? முதலில் வறுமையாலும் மற்றும் கடனுதவி, காணி போன்ற உற்பத்தித்திறன் கொண்ட சொத்துக்கள் இல்லாமை போன்ற தம்மையும் தம் குடும்பங்களையும் பாதிக்கின்ற பொருளாதார மற்றும் சமூக காரணங்களாலேயே சிறுவர் முக்கியமாக வேலைக்குச் செல்கின்றனர். மற்றும் கல்வியிலிருந்து கிடைப்பதை விடத் தொழிலால் கிடைக்கும் ஊதியம் அதிகமென அவர்களோ அல்லது அவர்கள் பெற்றோர்களோ நம்புவதனால் சிறுவர்கள் சில வேளைகளில் வேலைக்குச் செல்கின்றனர். அதுமட்டுமல்ல சிறுவர்கள் இலகுவாகச் சுரண்டப்படக்கூடியவர்கள் என்பதனால் தொழில் தருநர்களும் சில சமயங்களில் அவர்களை தொழிலுக்கமர்த்தவே பெரிதும் விரும்புகின்றனர்.

மேலும் சிறுவர்கள் ஏன் வேலை செய்யக்கூடாது? சிறுவர் ஊழியமானது சிறுவர்களின் கல்வி, உடல் நலம், பாதுகாப்பு மற்றும் ஒழுக்கப்பண்புகள் என்பவற்றிற்கு ஊறு விளைவிப்பதுடன் குழந்தைப் பருவத்திற்கான அவர்களது உரிமையையும் மீறுகின்றது. மற்றும் தரமான திறன்படைத்த வளர்ந்தோர் தொழில் அணியொன்றின் விருத்தியைத் தடுப்பதன் மூலம் சிறுவர் ஊழியமானது பொருளாதார வளர்ச்சிக்குத் தடை போடுகின்றது. சிறுவரின் சுகாதாரத்திற்கும் அபிவிருத்திக்குமான அபாய தேர்வுகள் குறித்து அவர்களது பெற்றோர், தொழில் தருநர்கள் மற்றும் செல்வாக்குச் செலுத்தும் சமூகத்தலைவர்கள் ஆகியோருக்குள்ள அறியாமையின் காரணமாகவே சிறுவர்கள் ஆபத்து விளைவிக்கும் தொழில்களில் பெரிதும் ஈடுபடுகின்றனர்.


இவ்வாறு பெரிதும் துன்பப்படும் சிறுவர்களை இனங்கண்டு அவர்களிடம் உள்ள பிரச்சினைகளை சிறுவர்களுக்கென உருவாக்கிய நிறுவனங்கள் அறிந்து அப்பிரச்சினைகளுக்கு எதிராகப் போராடி தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். சிறுவர்களாகிய எங்களைப் பாதுகாருங்கள், எங்கள் வாழ்விற்கு ஒளி தீபம் ஏற்றுங்கள், எங்களைப் பாதுகாருங்கள் என்று எந்தச் சிறுவரும் யாரிடமும் நிற்கமாட்டார்கள். இனிவரும் காலத்தில் எல்லோரும் தங்களைத் தாங்களே பாதுகாப்பார்கள். சிறுவர்களாகிய எங்களைப் பாதுகாக்கும் பொறுப்பு எங்களிடம் உண்டு. நாம் எல்லோரும் ஒன்று சேர்வோம். ஒன்று சேர்ந்து எங்களுக்கும் தேசத்திற்கும் தீமை செய்யும் தீவிரவாதிகளை இனங்காண்போம். அவர்களுக்கு எதிராக சட்டரீதியாயில் தண்டனை பெற்றுக்கொடுப்போம்.

அதுமட்டுமல்ல எமக்கு பாதுகாப்பு வழங்கும் வழிமுறைகளை இனங்கண்டு பிரச்சினை ஏற்படும் இடத்தை விட்டு விலகி நிற்போம். எமக்கு தீங்கு ஏற்படும் இடத்தில் இருந்து கூச்சலிட்டு கத்துவோம். எங்களுக்கு நம்பிக்கையானவர்களிடம் இது தொடர்பில் கூறுவோம். சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய துண்டுப் பிரசுரம், விழிப்புணர்வுகளை மேற்கொள்வோம். பயந்து உலகின் ஓர் மூலைக்குள் ஒளிந்து கிடக்கும் சிறுவர்களை துணிந்து எழவைப்போம். இன்றைய உலகை நாளை மாற்றிக்காட்டுவோம். இச் சிறுவர் தினத்தன்று சிறுவர்கள் எல்லோரும் இணைந்து ஒன்றாய் இவ் உலகை மாற்றுவோம். நாளைய உலகின் தலைவர்கள் நாம் ஆகிடுவோம்.

மேரி ஆன் பிறித்திக்கா பார்த்தீபன்,
யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், SOS சிறுவர் கிராமம், சதயம் இல்லம், யாழ்ப்பாணம்.





தளபதியின் பிகில் எப்படி இருக்கும் வியாசரே?

எழுத்து மூலம் வாங்காத வாக்குறுதி செல்லுடியாகுமா?

சுப்பர் ஸ்டார் ரஜினி அரசியலுக்கு வந்தால் தமிழர்களுக்கு நன்மையா?

**தானா — முனை**

**இனப்படுகொலை நடந்த தேசத்தில் இப்படி நடந்து கொள்கிறார்களே?**

இதுவும் செய்வார்கள் இன்னமும் செய்வார்கள். இது எங்கள் தேசம். இதில் நாம் நினைத்ததைச் செய்வோம். யாரும் எதுவும் கேட்க முடியாது. இது பௌத்த நாடு. இங்கு பௌத்ததுக்குத்தான் முதன்மை.

பௌத்த துறவியின் உடலை நாம் எங்கு வேண்டுமென்றாலும் எரிப்போம், புதைப்போம். யாரும் எதிர்த்துக் கேள்வி கேட்க முடியாது. ஏன் எம்மைக் கட்டுப்படுத்த முடியாது.

இப்பேற்பட்டவர்கள் வாழும் இந்தப் பூமியில் தமிழ் மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டார்கள் என்பது மட்டுமே பதிவு.

**கலை — மிருசுவில்**

**என்னவாம் எங்கள் தமிழ்த் தலைவர்கள்?**

அட அவர்கள் இன்றும் இருக்கிறார்களா? ஓ.... தேர்தல் காலம் வந்தவிட்டதல்லவா இனி முடிவு விடிவு என்று கடுமையாகப் பேசுவார்கள்.

மக்கள் நலன் சார்ந்து எதையும் சிந்திக்காமல் வெறுமனே வெற்றுத் தோட்டாக்களில் டுமில் விடுவார்கள்.

சத்தம் காதைக் கிழிக்க நாமும் அட என்று வாயைப் பிளந்து வாக்கைப்போட மறுபடியும் அவர்களிடம் தஞ்சம் புகுந்து தம் பொக்கெட் நிறைத்து இருக்கிற காலம் வரை நன்றியாய்க் குரைத்து, எல்லாம் நடக்கும். ம்ம்.. நடக்கட்டும்.

**கரன் — நெல்லியடி**

**தமிழ் மக்கள் தேர்தலைப் புறக்கணித்தால் என்ன?**

நாம் புறக்கணித்து ஒன்றும் ஆகப்போகிறது இல்லை. ஏனென்றால் நாம் வாக்களித்தாலும் வாக்களிக்காவிட்டாலும் அந்த இரண்டு பேரில் ஒருவர் தான் வரப் போகிறார்.

இதில் புறக்கணித்தும் பயனேதும் வந்துவிடப் போவதில்லை.

ஆனால் எமது ஒட்டுமொத்த பலத்தைக் காட்ட இந்தத் தேர்தலை பயன்படுத்தலாம் அல்லவா.

**ரசிகன் — யாழ்ப்பாணம்**

**சுப்பர் ஸ்டார் ரஜினி அரசியலுக்கு வந்தால் தமிழர்களுக்கு நன்மையா?**

டுவிட்டரில் பார்த்த ஒரு ஜோக்

மதுரை கீழடி ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டில் பொறிக்கப்பட்டிருந்த வசனம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் ரஜினி தனது கட்சிப் பெயரை அறிவிக்கிறார்.

**கம்சன் — இணுவில்**

**தளபதியின் பிகில் எப்படி இருக்கும் வியாசரே?**

அப்பா– மகன் என இரண்டு வேடம். அப்பா வேடத்திற்கு நல்ல வரவேற்பு இருக்கும் என அட்லி கூறியிருக்கிறார்.

இசை வெளியீட்டு விழாவில் விஜயின் பேச்சு படம் எப்படி இருக்கும் என்பதை புடம் போட்டுக் காட்டியிருக்கிறது.

மெர்சலை விட மிகப் பிரமாண்டமாக இருக்கும். வெற்றியும் மிக மிகப் பிரமாண்டமாக இருக்கும் என்பது மறுக்க முடியாத உண்மை.

**கோகிலன் — வரணி**

**பெண் தெய்வங்களை போற்றி வணங்கும் நாம் சில காலங்களில் பெண்களை ஒதுக்கி வைக்கிறோமே?**

சடங்குகள் சம்பிரதாயங்கள் பற்றிப் பேசிப்பயன் கண்டுவிடப் போவதில்லை

பெண்ணானவள் தெய்வம். இந்த உலகத்தின் தோற்றத்திற்கும் இயக்கத்திற்கும் அச்சாணியாக இருப்பவள். அவளை போற்றிப் புகழ வேண்டியது எம் ஒவ்வொருவருடைய கடைமையே.

**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை வியாசரிடம் கேளுங்கள்**
**021 567 1532**
**என்ற இலக்கத்துக்கோ SMS அனுப்புங்கள்**

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**நடந்தது நடந்து முடிந்து விட்டது. அதை அப்படியே விடுவது நல்லது என்கிறாரே ஒருவர்?**

என்னமோ சின்னஞ்சிறுசுகள் தவறு செய்துவிட்டார்கள். பேசாமல் இதை விட்டு விடுவம் என்கிற மாதிரிச் சொல்லுறார் அவர். எங்கள் இறையாண்மையில் கைவைத்து விட்டு இப்படி சொல்ல எப்படி அவர்களுக்கு துணிச்சல் வந்தது.
அந்தத் துணிச்சலைக் கொடுத்தது யார்?

இதை எல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒரு படத்தில் வடிவேலு வேலைக்காரிதானே என்று உள்ளேபோய் அடிவாங்கிய கதையாய் முடிந்து விடக்கூடாது.

இப்போது கூட எல்லாவற்றிற்கும் ரணிலிடம் ஓடும் எம் தலைமை விசாரணை வேண்டும் என்று ஜனாதிபதியிடம் கேட்கிறார்கள்.

**சுதன் — குப்பிளான்**

**தமிழ் மக்களின் ஜனநாயக ரீதியிலான போராட்டங்களில் பங்குபற்றாமல் தவிர்க்கிறதே கூட்டமைப்பு?**

மரண வீடு என்றால் நான்தான் பிணமாக இருக்க வேண்டும். திருமணம் என்றால் நான்தான் மாப்பிள்ளையாக இருக்க .வேண்டும். திரைப்படம் என்றால் நான்தான் கதாநாயகனாக இருக்க வேண்டும். எங்கு முதன் நன்மை நடந்தாலும் எனக்குத்தான் தலைப்பாகை கட்டவேண்டும்.

மலசலகூடத் திறப்பு விழாவில் இருந்தாலும் நான்தான் ரிபன் வெட்ட வேண்டும்.

இப்படி தம்மை முதல்வனாக நினைக்கும் இவர்கள் மக்கள் போராட்டம் என்றதும் பின்னிற்கிறார்கள். தேர்தல் வந்ததும் சீறிப் பாய்கிறார்கள். ஏன்தான் என்று புரியவே இல்லை.

**கருணாகரன் — வலிகாமம்**

**வீடு இல்லாதவனுக்கு வீடு கொடுத்து கடன்காரன் ஆக்கும் திட்டம் எப்படிப்பட்டது?**

அன்றாடம் உழைத்து கடன் இல்லாமல் ஒழுக்கு வீடென்றாலும் நிம்மதியாக தூங்கியவனுக்கு வீட்டுத்திட்டம் வழங்கி கட்டிக்காட்டு, கல்லை வைத்துக்காட்டு, வீம் மட்டத்தை தட்டிக்காட்டு என்று நச்சரித்து அவரைக் கடன்காரன் ஆக்கிறது.

காசு எப்ப வரும் ஐயா. பிள்ளையின்ற சங்கிலி மாளப்போகுது. ஏன்டா என்ன இப்ப அவசரம் வரேக்க தருவம் தானே என்று ஏறிப் பாய்வது.

அவனும் ஏதோ பிள்ளை வளருற காலத்தில அதுக் கொண்டு ஒரு வீடிருக்குமே என்ற அங்கலாய் ப்பில இன்னும்இன்னும்கடன்காரன் ஆககடைசியில்பிச்சுப் பிச்சு வந்தது எட்டு இலட்சம். வட்டியும் முதலும் சேர்த்து முடிஞ்சது 15 இலட்சம். மீதி ஏழு இலட்சத்துக்கு அவன் யாரை வறுத்து வைத்துக்கட்டுவான்.

**திகழன் — யாக்கரு**

**எழுத்து மூலம் வாங்காத வாக்குறுதி செல்லுடியாகுமா?**

எழுத்து மூலம் வாக்குறுதியை வாங்கினாலே பிரட்டி அடிக்கக் கூடிய ஆட்சியாளர்கள் மத்தியில் எழுத்து மூலம் வாங்காத வெறும் வாய் வாக்குறுதியை எப்படி நடைமுறைப்படுத்துவார்கள் சொல்லுங்கள்.

13ற்கு மேலே தருவோம் என்று ஒரு தரப்பும் 13 ற்கு கீழே தருவோம் என்று இன்னொரு தரப்பும் கூறுகின்றன.

முதலில் அந்த மேல், கீழ் என்ன என்பதை விளக்குங்கள். அதன் பின் இதைக் கூறுங்கள்.

தமிழர்களை ஏமாற்றுவது மிகச் சுலபம். எலும் புத்துண்டுக்கு ஆசைப்படும் ஒரு கூட்டம் இருக்கும் வரை இவர்களை ஏமாற்றிக் கொண்டே இருக்கலாம் என்று அவர்களுக்கு நன்கு தெரியும்.

**உங்கள் கேள்விகளை 021 567 1532 / 076 636 3378 எனும் இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**

## நாமொரு முடிவு கொண்டோம்

சந்தித்த துயரெலாம் தாங்கிக் கொண்டே
சிந்தித்து நாமொரு முடிவு கண்டோம்
முந்தித்தன் வாக்கையெலாம் அள்ளிச் சென்ற
முனைவர்கள் வரட்டுமிங்கு முழுதாய் கேட்போம்

பந்தியிலே பெரும்பங்கு எடுக்கு மிவர்
சந்தியிலே நின்றெம்மைச் சிரித்தும் பார்த்தார்
புந்தியிலே இங்கிதனைப் பெற்றுக்கொண்டே
மந்திரியிவர் வரட்டுமிங்கே வளவாய் கேட்போம்

சொந்தப் புத்தியில்லை உனக்குச் சோரம் போய் நீ
எந்தப் புத்தி சொல்வார்க்கும் இளித்து நின்றாய்
வந்தெம்மை வகைக்கொன்றாய் பிரித்துச் சென்றார்
இத்தனைக்குப் பின்னுமிவர் வரட்டும் கேட்போம்

அம்மா அப்பா மகிழ்ந்திருந்த இந்த நாடு
சும்மா பொய் சொல்வார் இங்கு கேளு
தம்மாட்களையெலாம் அயல் நாட்டில்
சுகமாயிருக்க வைத்தார் வரட்டும் கேட்போம்

வீட்டுக்குப் போடு விடுதலை கிடைக்கும் என்று
சாட்டுப் போக்கு சொன்ன இவர் தன்
பாட்டுக்குப் போய் விடவோ பெடியள் இங்கு
நாட்டுக்காய் போராடி மடிந்து போனர்

பொய்மை யிங்கு புகழோ டிருக்கிது
வாய்மை யிங்கு வலுவிழந்து போயிற்று
தாய் நாட்டை விற்றுப் பிழைக்கும்
நாய் வாலோரை இத்தடவை நிமிர்த்திப் பார்ப்போம்

மயூரதன், யாழ்ப்பாணம்

## யதார்த்தம்

துன்பங்களாய் ஊசலாடும்
நினைவுகள்..

நலமா என கேட்டு செல்லும்
சோகங்கள்...

சொல்லில் அடங்காத
கண்ணீர் துளிகள்...

சொந்தமாய் போகும்
கோப தாபங்கள்..

சற்றே தூரத்தில்
இன்ப களிப்புக்கள்..

அதை தட்டிப் பறிக்கும்
பொறாமை குரல்கள்...

இனிப்பான இம்சைகள்
இதமான இச்சைகள்


அத்தனையும் ஏற்றுக்கொள்ள
மறுக்கும் ஏமாற்றங்கள்...

கண்களை நனைத்துச் செல்லும்
கனமான கண்ணீர் துளிகள்

காந்தமாய் சில காதல் சுவடுகள்
காணிக்கையாய் சில கலப்படங்கள்...

வாழ்க்கையின் யதார்த்தமாய்
கொட்டிக் கிடக்கின்றன
இவை அனைத்தும்

ப்ரியா காசிநாதன்



## பாராமுகமேன்?

நலிந்த உயிர்களுக்கு
துணை நின்று
தூக்கிவிடும் இறைவா
மெலிந்த தமிழினத்தின்
மேனி பாராமல்
பாராமுகம் காட்டிப் போனதேனோ?

காரம் உண்டவர்க்கு
தண்ணீர் அருளும் நீ
தாகத்திற்குத் தண்ணீரின்றி
தவித்த தமிழினத்தை
தவிக்க விட்டாயோ?

ஓட்டுக்களுக்கு ஓடிவரும்
எம்மவர்க்கு ஏமாற்றத் தெரிகிறது
அவரை ஏமாற்றாது
எம்மை ஏமாளியாக்கினாயோ?

பேச்சாலே புல்லாங்குழலாதி
புவியோரை துயிலுறச் செய்யும்
ஆற்றாமை கண்டு
ஆத்திரம் கொண்டிடாதது
ஏன்தானோ எம்பெருமானே

தேற்ற ஆளின்றித்
தவிக்கிறது தமிழினம்
வெற்றுத் தேசியம் பேசித் திரிகிறது
வேடதாரிக் கூட்டமொன்று

பார்க்க எமக்குச் சகிக்கவில்லை
பாராமுகமாய் நீயிருந்தால்
பராபரமே யாம் எங்கு போவோம்?

மாவை. நா. கஜேந்திரன்

## மௌனத்தின் தேடல்- 467



## நின் முயற்சிக்கு

வாள்வெட்டுக்
கலாசாரம் வளர்ந்து
வலிந்து போதைக்குள்
வழிமாறி வழிப்பறியும்
பொலிவிழந்து எம்
பூமி பூச்சியமாய்
போன புத்திலிகளுக்கு நின்
முயற்சிக்கு தலைவணங்கி
முழு உலகும் பாராட்ட
முன்னேற வழி பிறக்கட்டும்

கார்வண்ணன்
ஊர்காவற்றுறை

## மௌனத்தின் தேடல் -468



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம் .
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
/ ஈனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## மனிதம் மரணித்துவிட்டதா?

பல்கலை பயிலும் வயதில்
பாதணியை ஸ்பரிசம் செய்ய
வைத்தது யாரோ? நின்
பெற்றோர் செய்த தவறா?
பெருஞ்செல்வந்தரின் திமிரா?
பள்ளி செல்லும் பாலகன் உன்னை
பட்டினியால் முடக்கி விட்டனரோ?
சீரழிக்கப்பட்ட உன் எதிர்காலம் தான்
இந்த சிறுவர் தினத்திற்கு
உனக்கான வெகுமதியோ?
காலை நீட்டும் முன்-- உன்
கண்ணை சற்று திறந்து பாருடா மானிடா!
மனிதம் உன் காலுக்குள்
மண்டியிட்டு விட்டதா?
எழுத்தாணி பிடிக்க வேண்டிய
அந்தப் பிஞ்சுக் கரங்கள்
ஏக்கத்துடன் பாதணியை ஸ்பரிசிக்கின்றன
இதுதான் சிறுவர் தினத்தின் நோக்கமா?
இனியாவது சிந்தனை செய்யடா மானிடா?
நாட்டின் எதிர்காலம் ஒன்று கண்முன்னே
நசுக்கப்படுகின்றதே என்றுதான்
மாறும் இந்த பரிதாபம்

ஷயா, கரவெட்டி

## காலடியில் அடிமை

பார்வையில்லாவிட்டாலும்
பிச்சையெடுக்காமல்
உழைத்து வாழவேண்டும்
என்ற இச்சிறுவனின்
உயர்ந்த எண்ணத்தைப்
போற்றாமல்
உன் காலணி தூசு துடைக்க
காலடியில் அடிமையாக்கும்
மானிடா!
நீ இந்தச் சமூகத்திற்குத்
தேவைதானா!
சிறுவயதில்
வசதியில்லாததாலே
காலடியில்
அடிமையாய் தொழில்
புரிகின்ற இச்சிறார்களின்
எதிர்காலத்தை
வளமாக்குவதற்கு
தோள் கொடுப்போம் வாரீர்!

இ.தனுப்பிரியன்
தொல்புரம் கிழக்கு

## உழைப்பால் உயர்வோம்

பள்ளி சென்று
பாடம் படித்து
பட்டம் பெற்று
பாரையுயர்த்தும்
பண்புதனைக் கொண்டு நீ
வாழும் இளவயதிலிங்கே
பாதம் தொட்டு
பாதணி துடைக்க
வறுமையுன் வாழ்வை
தொலைத்ததோ
பொய் களவின்றி
உண்மை வழியிலுழைப்பது
உயர்வேயன்றி தாழ்வில்லை
வறுமையுன்னை
வாட்டிய போதும்
உள்ளமிங்கே
உறுதிகொண்டால்
உழைப்பேயுன்னை
உயர்த்துமென்றும்

சி.திவ்வியா
யா/ப/மெ/ம/வி.

## மாற்றம்

வஞ்சகமான
பூமியிலே
நெஞ்சமற்ற
மனிதர்களின்
பாதணியைத் துடைத்து
பசியைப் போக்கும்
ஏழைச்சிறுவன் யான்
இறைவா! நீ
ஒருமுறையேனும்
கண் திறந்து பார்
என் வறுமை
நீங்குவதற்கல்ல
இம்மனிதர்களின்
மனிதாபிமானமற்ற
மனங்கள் மாறுவதற்கு

த.ஜானிகா
யோகபுரம்

## உடைந்த இதயம்

பார்வையில்லாத சிறுவன்
பிழைப்புக்கு வழிதேடும் போது
தூசுச்சப்பாத்தினை
துடைக்க நேர்ந்தது
அவன் தான் பிழைப்பிற்காக
அவ்வாறு செய்கின்றானெனில்
அவனது நிலையினைப் பார்த்து
பரிதாபப்படாமல்
உன் சப்பாத்துத்தூசினை
துடைக்க அவனிடம்
செல்கிறாயோ
உனது இதயம்
உடைந்து விட்டதா?
என்பது எனக்குத்
தெரியவில்லை--ஆனால்
உன் செய்கையினைக்
கண்டு எனது இதயம் உடைந்தது

இ.தனுசா
தொல்புரம் கிழக்கு



# தக்கணப் பிழைக்கும்

பொழுது புலர்ந்தும் புலராதது போல் இருந்தது. சூரியக் கதிர்கள் பூமியைத் தொடாத வண்ணம் கருமேகக் கூட்டங்கள் வானத்தை ஆக்கிரமித்திருந்தன. பெருங்காற்று குளிருடன் வீசியது. மரங்கள் ஈடுகொடுக்க முடியாது வளைந்து ஆடின. சருகுகள் பறந்தன.

அந்த ஓலைக்குடிசைக்குள் இருந்து வெளியே வந்த பொன்னி வானத்தை அண்ணாந்து பார்த்தாள். "அடக்கடவுளே... மழை கடலென வரப்போகுதே" என்றவாறு உடலை சிலிர்த்துக் கொண்டாள். அருகில் இருந்த தென்னையில் இருந்து ஓலை ஒன்று விழுந்தது.

" இந்த மழைக்கு என்ர குடிசை தாங்காது" என்று முணுமுணுத்தவாறு குடிசைக்குள் சென்றாள். கத்தி ஒன்றை எடுத்து வந்து ஓலைகளை வெட்டி கூரை மேல் பரப்பினாள்.

"பொன்னி" இந்தக் கிராமத்தில் அவளைத் தெரியாதவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். திருமண வைபவம் தொடக்கம் மரணச்சடங்கு வரை எல்லா இடத்திலும் அவள் இருப்பாள்.

குசினிதான் அவள் சாம்ராஜ்ஜியம். சிட்டெறும்பு போல் சுறுசுறுப்பாய் அவள் இயங்குவாள். உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் அவளுக்கு ஒருபோதும் கிடைப்பதில்லை. கணக்கு மட்டுமல்ல கையெழுத்துக் கூடப் போடத் தெரியாதவள்.

"பொன்னி... பொன்னி... என்று கூப்பிட்ட குரல் கேட்டு திரும்பிப் பார்த்தாள். படலையடியில் சங்கரப்பிள்ளை வாத்தியார் நின்றிருந்தார்.

"சொல்லுங்கோ ஐயா" என்று அருகில் சென்றாள்.

"கம்பரெலியத் திட்டத்தின்கீழ் எங்கட ஒழுங்கைக்கு றோட்டுப் போடப் போறாங்கள்" அரைகுறையாக புரிந்து பொன்னி தலையைச் சொறிந்தாள்.

" அதுக்கு என்னையா?"

" மினிஸ்டர் இன்டைக்கு அடிக்கல் நாட்ட வாறார்"

" இண்டைக்கா?"

"ஓமடி புள்ள. நீ பின்னேரம் வீட்டுப் பக்கம் வா"

" ஏனாங்கோ"

" தேத்தண்ணி போடணும்"

"உங்க வீட்டையும் வாறாங்களா?"

" அவர் என்ர பழைய சிநேகிதன்". இதைச் சொல்லும்போது வாத்தியாரின் முகத்தில் பெருமிதம் தெரிந்தது.இதைக்கேட்டதும் பொன்னியின் முகம் பிரகாசமானது.

" ஐயா... வீட்டுத் திட்டம் எனக்குப் பாஸ் பண்ணி இருக்கு என்கிறாங்க... ஆனா... இன்னும் காசு வந்து சேரல. என்ர பெரிய பொண்ணு பெரிய படிப்பெல்லாம் படிச்சிருக்கா. மினிஸ்டர் ஐயாட்டச் சொல்லி அவளுக்கு ஒரு வேலை வாங்கிக் குடுங்கோ ஐயா..." மன்றாட்டமாய் கேட்டாள் பொன்னி.

"அவளின்ர விபரங்களை பின்னேரம் கொண்டு வா...பாப்பம்" என்று கூறிச் சென்றார் சங்கரப்பிள்ளை வாத்தியார்.

பொன்னி மலையகத்தில் பிறந்தவள். கஷ்டத்தின் காரணத்தினால் அவளை வெறும் ஐந்நூறு ரூபாய்க்கு அவள் பெற்றோர் விற்று விட்டனர்.

அன்றிலிருந்து யாழ்ப்பாணம் தான் அவளின் புகலிடம் மட்டுமல்ல புகுந்த இடமும்கூட. இவ்வூரின் சிங்கப்பூர் பென்சனியர் ஆறுமுகம் குடும்பம்தான் அவளை வாங்கியவர்கள். ஆறுமுகத்தார் வீட்டில் தான் பொன்னியின் காலம் கரைந்தோடியது.

1990களில் பொன்னியைத் தேடிக்கொண்டு வந்த மச்சான் முறையான வேலனுக்கு இவளைத் திருமணம் செய்து வைத்து விட்டார்கள். அன்றிலிருந்து இருவரும் அந்த வீட்டிற்காக மாடாய் உழைத்தனர்.

ஆறுமுகத்தாருக்குச் சொந்தமான தென்னந்தோப்பு ஒன்றினுள் இவர்களுக்கு குடிசை ஒன்று போட்டுக் கொடுக்கப்பட்டது. அன்றிலிருந்து அவன் தென்னந்தோப்புக்கு காவற்காரன். இவள் அவர்களின் வீட்டிற்கு வேலைக்காரி.

ஒருமுறை வேலன் சம்பளத்தைப் பற்றிக் கதைத்தபோது "தின்கிறதுக்கு சோறு. உடுத்துக்க உடுப்பு. படுக்கிறதுக்கு ஒரு குடிசை இவ்வளவும் யார் தாறது" என்று ஓர் தலையடி போட்டு மடக்கிப் போட்டா ஆறுமுகத்தாரின் மனைவி மணியக்கா.

சிறிது காலத்தின் பின் ஆறுமுகத்தாரும் பின் அவர் மனைவியும் இறந்துபோக பொன்னி குடும்பம் நிர்க்கதியாகிவிட்டது. அமெரிக்காவில் இருந்துவந்த ஆறுமுகத்தாரின் பிள்ளைகள் தென்னந்தோப்புக்களை விற்பதற்கு நாட்குறித்துச் சென்றுவிட, இவர்கள் கதி அதோ கதியாகிவிட்டது.

வயதுக்கு வந்த இரண்டு பெண் பிள்ளைகளையும் குடிகாரக் கணவனை நம்பி எங்கே அவள் கொண்டு செல்வாள்?

வடக்குப் பக்கமாக இருந்து " சோ" என்ற பேரிரைச்சலுடன் மழை பொழியத் தொடங்கியது. ஓட்டமாக குடிசைக்குள் சென்ற பொன்னி ஒழுக்கு விழும் இடம் பார்த்து பாத்திரங்களை எடுத்து வைத்தாள்.

மாலை 5.30 மணியளவில் அடிக்கல் நாட்டும் வைபவம் முடித்து மூன்று வாகனங்களில் சுமார் பதினைந்து பேர் வாத்தியார் வீட்டிற்கு வந்தனர். வாத்தியாருக்கு கையும் ஓட வில்லை, காலும் ஓடவில்லை. பொன்னி பம்பரமாக இயங்கினாள். சுடச்சுட வடை, தேநீர் என்பன பரிமாறப்பட்டன.

வடை, தேநீருக்குப் பெரும் புகழாரம் பாடப்பட்டது. அதைத் தானே செய்தது போல ஏற்றுக் கொண்டாள் வாத்தியாரின் மனைவி. பொன்னி குசினுக்குள் நின்று எட்டி எட்டிப் பார்த்தாள். யாரும் அவளை கண்டுக்கவே இல்லை.

இறுதியில் அமைச்சர் புறப்படும் போது வாத்தியார் மஞ்சள் கவரிட்ட விண்ணப்பம் ஒன்றை அவர் கையில் திணித்தார். அதனை அமைச்சர் தன் உதவியாளரிடம் கொடுத்து விடைபெற்றுச் சென்றார். அவசரமாக வாத்தியாரின் மனைவி வடைப்பார்சல் ஒன்றையும் கொடுத்து அனுப்பினார்.

பொன்னிக்கு அளவில்லா ஆனந்தம். தான் கொண்டு வந்த வேலைக்கான விண்ணப்பத்தை வாத்தியார் கொடுத்ததைப் பார்த்திருந்தாள். அவள் கண்கள் நனைந்தன.

சங்கரப்பிள்ளை வாத்தியாரைக் கையெடுத்துக் கும்பிட்டாள். அவள் கைகளுக்குள் நூறு ரூபாயைத் திணித்தார் வாத்தியார்.

"இதை வாங்கினால் நான் நன்றி கெட்டவள் ஆயிடுவன்" என்று காசைப் பெறாது விருட்டென்று வீதியில் இறங்கி நடந்தாள் பொன்னி.

அவள் போனதும் வாத்தியார் மேசை விரிப்பின் கீழிருந்து அந்த மஞ்சள் கவரை எடுத்துச் சுக்கு நூறாகக் கிழித்து குப்பைக் கூடைக்குள் போட்டார்.

" இனி எப்படியும் என் மகனுக்கு வங்கியில் வேலை கிடைக்கும்" என முணுமுணுத்தவாறு சாய்மனைக் கதிரைக்குள் சாய்ந்தார்.


அமைச்சரின் சொகுசு வாகனம் முப்பது நிமிடங்கள் ஓடியிருக்கும். முன் இருக்கையில் அமர்ந்திருந்த அமைச்சரைப் பார்த்து " ஐயா வடை சாப்பிடுங்களன். இன்னும் சூடாய் இருக்கு" என்றார் பின்னால் இருந்த உதவியாளர். "எண்ணெயை ஒத்தி விட்டுத் தாரும்" என்றார் அமைச்சர்.


அவரின் கொலஸ்ட்ரோலை உணர்ந்த உதவியாளர் மெல்ல சங்கரப்பிள்ளை வாத்தியாரின் மஞ்சள் கவரை எடுத்து அவரின் மகனின் வேலை விண்ணப்பத்தைக் கிழித்து எண்ணெயைப் பதமாக ஒற்றி எடுத்தார்.

"எல்லோரும் வேலைக்கு மனுக் கொடுத்தால் எங்கட குடும்பத்திற்கு யார் வேலை கொடுக்கிறது?" என்ற மனக்குமுறல் அடங்கியது. வடையை நீட்டினார் உதவியாளர். அமைச்சர் அதனைப் பெற்றுச் சப்புக் கொட்டியவாறு சாப்பிடத் தொடங்கினார்.

சி.சிறீரங்கன்
உரும்பிராய்

# அமெரிக்காவுக்கு நிலவிலிருந்த ஒரே சாட்சி!








ஆல்ட்ரின் எடுத்த புகைப்படம்

நம் வாழ்வின் மிக முக்கியமான தருணங்களையும் மனதுக்கு நெருக்க மானவர்களையும் என்றைக்குமே பாது காத்துக்கொள்ள நினைப்பது மனிதனின் இயல்பு. பிறந்தநாள், திருமணநாள் முதல் மனதுக்கு நெருக்கமானவர்கள் நம்மை விட்டுப் பிரியும் தருணம் வரை அனைத் தையும் நினைவில் வைத்துக் கொள் வோம். அவற்றை எந்த விதத்திலாவது பதிவு செய்துகொள்வதும் உண்டு. அந்த வகையில் "புகைப்படங்களுக்கு" என்றைக் குமே தனி இடம் உண்டு.

அப்படி நாம் விரும்பும் முகங்களையும் இடங்களையும் புகைப்படம் மூலம் பதிவு செய்ய உதவும் "கமரா"வின் முக்கியத் துவம் அளவற்றது. "கமரா", வார்த்தையில் சொல்ல இயலாத பல அனுபவங்களைப் பொக்கிஷமாக்கும் கருவி. அந்த வரிசை யில் நிலவுக்குச் சென்ற முதல் கேமரா பற்றியும், அன்று வரை நிலவைப் பற்றி நாம் கண்ட கனவுகளைப் புரட்டிப்போட்ட புகைப்படப் பயணம் பற்றியும் கேள்விப் பட்டிருக்கிறீர்களா?

மனிதர்கள் நிலத்திலிருந்துகொண்டே நிலவைப் பற்றிக் கட்டிய கதைகளையும் அதைப் பற்றிய பார்வையையும் மாற்றிய மைத்தது இருபதாம் நூற்றாண்டின் மிக முக்கியமான நிகழ்வுகளில் ஒன்றான அப்போலோ 11 விண்வெளிப் பயணம். "அது கடவுள்", "அதில் மனிதர்கள் வாழ்கி றார்கள்", "அது ஒரு வாழும் உயிரினம்" என்று நிலவைப் பற்றி மக்கள் விவாதம் செய்துகொண்டிருக்க, 1969-ம் ஆண்டு, ஐகானிக் விண்வெளி வீரர்களான நீல் ஆர்ம்ஸ்ட்ரோங், பஸ் ஆல்ட்ரின் **(Buzz Aldrin)** மற்றும் மைக்கேல் காலின்ஸ் **(Michael Collins)** ஆகிய மூவரும் நிலவுக்குச் செல்லத் தயாராகிக் கொண்டி ருந்தனர்.

அப்போது இவர்களை நிலவுக்கு அனுப் புவது குறித்து நாசா எந்த அளவுக்குத் தீவிரமாக யோசித்துக்கொண்டிருந்ததோ, அதே அளவுக்கு நிலவை கேமராவில் படம் பிடிப்பது எப்படி என்பது குறித்தும் தீவிரமாக யோசித்துக்கொண்டிருந்தது.

முதல்முதலில் பூமியைச் சுற்றி வந்த அமெரிக்க விண்வெளி வீரர் ஜான் கிளென் விண்வெளியிலிருந்து படம் எடுக்க, நாற் பது டொலர்கள் மதிப்புள்ள 35 மிமீ மினோல்ட்டா அன்ஸ்கோ ஆட்டோசெட் **(Minolta Ansco Autoset)** கமராவைத் தேர்ந்தெடுத்தார். விண்வெளியில் மூன் றாவதாகத் தடம் பதித்த வால்டர் ஸ்கீரா **(Walter Schirra)** ஹசல்பிளேடு **500c** மீடியம் ஃபார்மேட் கமராவைப் **(Hasselblad 500C medium format camera)** பயன்படு த்தி விண்வெளியைப் வெவ்வேறு பரிமா ணங்களில் படம் எடுத்தார்.

இந்தக் கமராவின் மதிப்பு ஐநூறு டொலர்கள். இவர் எடுத்தப் புகைப்படங்கள், விண்வெளி பற்றிய ஆழமான பல விட யங்களைச் சுட்டிக்காட்டியது. இதன்பிறகே விண்வெளி புகைப்படங்களின் அருமையை நாசா உணர்ந்துகொண்டது.

### Hasselblad 500 EL

இதைத் தொடர்ந்து அப்போலோ 11 பயணத்துக்காக, இதே ஹசல்பிளேடு கமரா தலைக்கவசத்துக்கு எந்தவித இடை யூறுகளும் இல்லாதபடியும், பயன்படுத்து வதற்கு எளிதாக இருக்கும் வகையிலும் சிறந்த பொறியாளர்களால் மாற்றி வடிவ மைக்கப்பட்டது. இதற்காக கமராவின் எடையை முற்றிலுமாக அவர்கள் குறை த்தனர்.

மேலும், இதனுடன் மோட்டார் இணை க்கப்பட்டு மேம்படுத்தப்பட்ட **Hasselblad 500 EL** கமரா உருவாக்கப்பட்டது. இந்த வகை கமராவைத்தான், அப்போலோ 8 விண்வெளி வீரரான பில் ஆண்டர்ஸ், உலகப் புகழ்பெற்ற **Earthrise** புகைப் படத்தை எடுக்கவும் உபயோகித்தார். இந்தப் புகைப்படமானது நிலவில் ஆர்ம் ஸ்ட்ராங் எடுத்த புகைப்படத்துக்கு நிகராக இன்றளவும் கொண்டாடப்படுகிறது.

நாசாவின் அப்போலோ 11 பயணம் மிகவும் நீண்டது. இப்பொழுது இருக்கும் அளவுக்கு அந்நாளில் மேம்பட்ட கருவிகள் இல்லை. விண்வெளி வீரர்கள் நிலவுக்குச் செல்லும் பயணத்தை மேற்கொள்வதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னதாகவே, அறி வியல் மற்றும் புகைப்படப் பயிற்சியை மேற் கொண்டனர். இதற்காக நெவாடா, அரிசோனா, ஹவாய் எனப் பல இடங்களில் புகைப்பட சிறப்புப் பயிற்சியும் வழங்கப் பட்டது. இப்படியாக நிலவுக்குச் செல்வதற்கு முன்னரே தங்கள் பயணத்தை முழுமை யாக பூமியிலேயே ஒத்திகை பார்த்து முடித்தனர்.

### ஆல்ட்ரின் எடுத்த புகைப்படம்

பயிற்சியை மேற்கொண்ட விண்வெளி வீரர்கள் நிலவுக்குச் செல்லத் தயாராக இருந்தனர். ஆர்ம்ஸ்ட்ரோங், அனைத்துப் பயிற்சிகளிலும் சிறப்பாகத் தேர்ச்சி பெற்றி ருந்தார். பல்வேறு விதமான எண்ண ஓட்டங்கள், பதற்றம், ஆச்சரியம் என அவர்களின் வெவ்வேறு மனநிலை பயணத்தின் எதிர்பார்ப்பை நிறைத்தது. ஹூயுஸ்டனிலிருக்கும் ஜான்சன் விண் வெளி ஆராய்ச்சி மையத்திலிருந்து விஞ் ஞானிகள் விண்வெளி வீரர்களை வழி காட்டிக்கொண்டிருக்க, விண்கலங்கள் மெதுவாக நிலவில் தரையிறங்கின. மனித குலத்தின் மாபெரும் சாதனைக் கான முதல் அடி அது.

அன்றுவரை மக்கள் அனைவர் மனதி லும் நிலவைப் பற்றி இருந்த சிந்தனைகள் அனைத்துக்கும் முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக அமைந்தது அன்று வீரர்கள் எடுத்த புகைப்படம். அங்கிருந்தபடி கறுப்பு வெள்ளை பிரபஞ்சத்தின் அதிசயத்தை நேரில் பார்த்து, அவற்றைப் புகைப்படத் தில் அடக்கிய ஆல்ட்ரின் "இது ஓர் அற்புத மான பாழடைந்த இடம்" என்றார்.

ஆல்ட்ரின் எடுத்த விண்வெளி புகைப்படங்கள் மிகச் சிறப்பாக வரவி ல்லை எனக் கூறுபவர்களும் உண்டு. ஆனால், நிலவுக்குச் சென்ற இவர்களின் உழைப்பு மிக நுணுக்கமானது. ஜீஸ் பயோகான் **60 kpkP ƒ / 5.6 (Zeiss Biogon 60mm ƒ/5.6)** லென்ஸ் பொருத்தப்பட்ட கமரா நீல் ஆர்ம்ஸ்ட்ராங்கின் விண் வெளி உடையோடு இணைக்கப்பட்டது. முதல்முதலில் நிலவில் காலடி பதித்த புகைப்படம், அமெரிக்கத் தேசியக் கோடியை நிலவில் வைத்த புகைப்படம், வெற்றிவாகை சூடிய ஆர்ம்ஸ்ட்ரோங்கின் புகைப்படம் என ஏராளமான ஐகானிக் புகைப்படங்களை எடுத்தார் ஆல்ட்ரின்.

கமராவிலிருந்து படச்சுருள்களை வெளியே எடுத்த ஆல்ட்ரின் மற்றும் ஆர்ம்ஸ்ட்ரோங், அதிகப்படியான எடை யைக் குறைப்பதற்காகவும் பாதுகாப்பான தரை இறங்குதலுக்காகவும் கமரா மற்றும் லென்ஸை நிலவிலேயே விட்டுவந்தனர்.

ஆல்ட்ரின் மற்றும் ஆர்ம்ஸ்ட்ரோங் **Eagle module**-லில் வேலைசெய்தபோது, கொலம்பியா **module**-லிலிருந்து தகவல் பரிமாற்றுப் பணியை மேற்கொண்டார் மைகேல் காலின்ஸ். அவர் கறுப்பு நிற **Hasselblad Electric Camera**-வைப் பயன்படுத்தி புகைப்படங்களை எடுத்தார். இவர் பயன்படுத்திய கமரா பத்திரமாகப் பூமிக்குக் கொண்டுவரப்பட்டது. இவர்க ளைத் தொடர்ந்து இறுதியாக அப்போலோ 17, விண்வெளியை விட்டு வெளியேறிய போது, நிலவின் மேற்பரப்பில் மொத்தம் பன்னிரண்டு கமரா உடல்கள் இருப்பதாகப் பதிவிட்டனர். அவை இப்பொழுதும் நில வில்தான் உள்ளன.

நீல் ஆர்ம்ஸ்ட்ராங் நிலவில் அன்று எடுத்த புகைப்படங்களில் ஆல்ட்ரின் கெத்தாக நின்றுகொண்டிருப்பார். ஆனால், ஆல்ட்ரின் எடுத்த புகைப்படத்தில் நீல் ஆர்ம்ஸ்ட்ராங் ஒரு ஓரமாக நின்று கொண்டு விண்கலனில் பணிசெய்து கொண்டி ருப்பார். அந்த மொத்த நிலவுப் பயணத்தி லும் எடுக்கப்பட்ட ஒரே ஒரு ஆர்ம்ஸ்ட்ராங் புகைப்படம் அதுதான். காரணம், நிலவில் இறங்கியதுமே அங்கு செய்யவேண்டிய சோதனைகள் குறித்து இருவரும் தீவிர மாக பணிசெய்துகொண்டிருந்தனர். அந்த நேரத்தில் கமராவை சரியாக கையில் வைத்திருந்தது ஆர்ம்ஸ்ட்ராங் மட்டும் தான். எனவேதான் அவர் எடுத்த எல்லாப் புகைப்படங்களிலும் ஆல்ட்ரின் தெளிவா கத் தெரிவார். ஆல்ட்ரினை எடுத்த புகைப் படத்தை உற்றுப்பார்த்தால், அவரின் முக கவசத்தில் ஆர்ம்ஸ்ட்ராங்கின் பிம்பமும் விண்கலனும் நன்கு தெரிவதைப் பார்க்க லாம்.

கடந்த ஜூலை 20 ஆம் திகதி தன் 50ஆம் ஆண்டு நிறைவு விழாவைக் கோலாகலமாகக் கொண்டாடியிருக்கிறது அப்போலோ 11. இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்கப் பதிவைப் போற்றும் வகையில், அப்போலோ 11 விண்கலம் காட்சிப்ப டுத்தப்பட்டிருக்கும் சியாட்டில் நகரில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முன்னிலையில் ஆல்ட்ரின் மற்றும் காலின்ஸ் பங்குபெற்ற சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

2012இல் உயிரிழந்த ஆம்ஸ்ட்ரோங் இந்த ஆண்டுவிழா கொண்டாட்டத்தில் விண்வெளி அளவிலான வெற்றிடத்தை ஏற்படுத்தினாலும் இன்றும் கொண்டாட்டத் தின் "உயிர்நாடி" அவர்தான் என்றே சொல்லலாம். மேலும், விண்வெளிக்குச் சென்ற முதல் கமரா என்கிற பெருமை யோடு **Hasselblad** நிறுவனம் சிறப்பு கமரா ஒன்றையும் வெளியிட்டுள்ளது. இந்த ஸ்பெஷல் கமராவில் **'On the Moon Since 1969'** எனும் வாக்கியம் பொறிக் கப்பட்டிருக்கிறது.

### Hasselblad சிறப்பு கமரா

ஒருவேளை இந்த கமராக்கள் மட்டும் அன்று நிலவின் நிலப்பரப்பைத் தொடா மலேயே போயிருந்தால், "அமெரிக்கா நிலவுக்குச் சென்றது சுத்தப்பொய்" என்ற ரஷ்யாவின் கூற்று இன்றளவும் உலவிக் கொண்டிருக்கக் கூடும். அந்த வகையில் மனித விஞ்ஞான வளர்ச்சியின் மைல் கல்லாகவும், மனிதனின் அசாதாரண முயற்சிக்கு சாட்சியாகவும் நிற்கிறது இந்த **Hasselblad 500 EL.**

# அன்று என் அம்மா டயானாவை இழந்தேன்; இன்று என் மனைவியை குறிவைக்கிறார்கள்

## இளவரசர் ஹாரி



இங்கிலாந்து அரச குடும்பத்தைச் சேர்ந்த இளவரசர் ஹாரி, பிரபல பிரிட்டிஷ் நாளிதழ் மீது வழக்கு தொடர்ந்திருக்கிறார். "மெயில் ஆன் சன்டே" என்ற நாளிதழ் இளவரசர் ஹாரியின் மனைவி மேகன் மோர்கல், தன் தந்தைக்கு எழுதிய கடிதம் ஒன்றை இளவரசியின் எந்த அனுமதியும் இன்றி வெளியிட்டுப் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதையடுத்து, இளவரசர் ஹாரி அந்த நாளிதழுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளார். இதுகுறித்துப் பேசிய இளவரசர் ஹாரி, "அரச குடும்பத்தைச் சார்ந்தவர்கள் என்ற முறையில் நானும் எங்களின் மொத்த தலைமுறையும் ஊடகத்துக்குப் பதில் சொல்லவும், அரச குடும்ப செய்திகளை அறிக்கைகளாக வெளியிடவும் கடமைப்பட்டு இருக்கிறோம் என்பதை ஒப்புக் கொள்கிறேன். அதே நேரம், சில ஊடகங்களின் செயல்பாடுகள் எங்களை மனதளவில் கொடுமைப்படுத்துவதாக உள்ளது.

என் மனைவி கருத்தரித்திருந்தபோது, அந்தச் செய்தியை எங்களின் அரச குடும்பத்தின் சார்பாக நாங்களே பொதுமக்களுக்குத் தெரிவித்தோம். ஆனாலும், எங்களைச் சுற்றி வதந்திகள் இருந்துகொண்டேதான் இருந்தன. எங்களின் குழந்தை பிறந்த நேரத்தில் குழந்தையின் பெயர் இது, அது எனப் பல வதந்திகளை ஊடகங்கள் வெளியிட்டன. என் மனைவியின் தந்தை உட்பட நாங்கள் எங்கு சென்றாலும் ஊடகங்கள் அதைச் செய்திகளாக மாற்றிவிடுகின்றன. ஊடகங்கள் தங்களை வளர்த்துக்கொள்வதற்காக நாங்கள் எங்கள் நிம்மதியை இழந்துகொண்டிருக்கிறோம்.

அரச குடும்பத்தில் பிறந்தற்காக நான் நேசிக்கும் எத்தனை பேரைத்தான் இழக்க வேண்டுமோ!

இளவரசர் ஹாரி

வதந்திகள் உண்மையில்லை என்பது எங்களுக்குத் தெரியும். அதற்காக ஒவ்வொரு முறையும் ஊடகங்கள் வெளியிடும் செய்திகளுக்கு விளக்கம் கொடுத்துக்கொண்டே இருக்க முடியுமா? என்னதான் மறுப்பு கொடுத்தாலும், நாங்கள் அடைந்த மன பாதிப்பு இல்லையென்று ஆகிவிடுமா?

உண்மையைச் சொல்ல வேண்டுமெனில் ஊடகங்கள் பல வதந்திகளைக் கிளம்பியதால்தான், நான் என் அம்மா டயானாவை இழந்தேன். இப்போது அதே நிலை என் மனைவிக்கும் வருவதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அரச குடும்பத்தில் பிறந்தற்காக நான் நேசிக்கும் எத்தனை பேரைத்தான் இழக்க வேண்டுமோ?

கடிதம் எழுதுவது என்பது மேகனின் தனிப்பட்ட உரிமை. ஒரு மகளாக அவர், தன் தந்தைக்குக் கடிதம் எழுதியுள்ளார். அவர்களுக்குள் கருத்து வேறுபாடு இருந்தாலும் அது அவர்களின் தனிப்பட்ட உரிமை. மார்கல் எழுதிய கடிதத்தை மேகனின் அனுமதியில்லாமல் வெளியிட்டதே தவறு. அதிலும், சில திருத்தங்களைச் செய்து வெளியிட்டு, மேகனின்மீது அவதூறு பரப்புகிறார்கள். அரச குடும்ப வாரிசாக இல்லாமல், தனிப்பட்ட ஒரு மனிதனாக இருந்து எங்களுக்கான நியாயத்தை நீதிமன்றத்தின் மூலம் நாங்கள் தேட வேண்டிய நேரம் வந்துவிட்டது" என்று வெளியிட்டுள்ளார். திருமணத்துக்குப் பின்னர் இளவரசர் ஹாரிக்கும் மேகனின் தந்தைக்கும் இடையே கருத்துவேறுபாடு இருந்துவருவது குறிப்பிடத்தக்கது.



# போராட்ட குணம் அற்றுப் போன இனம்

போர், போராட்டம் என்ற சொற்கள் தமிழர்கள் மத்தியில் வெறுப்பான அல்லது விரும்பத் தகாத ஒன்றாக மாறிவிட்டது அல்ல மாற்றப்பட்டுவிட்டது. இதற்கான காரணத்தை நாம் தேடிக் கண்டுபிடிக்க வேண்டிய அவசியமில்லை. ஈழத்தில் நடந்த விடுதலைப்போராட்டம்தான் எம்மை இந்த வெறுப்புக்கு ஆளாக்கியது என்று எல்லோரும் சுலபமாக சொல்லிடுவர்.

ஆனால் போரும் போராட்டமும் மனித வாழ்கையில் மட்டுமல்ல புவியில் வாழும் ஒவ்வொரு உயிருக்கும் பொதுவானது. நாம் விரும்பியோ விரும்பாமலோ வாழ்க்கையுடன் போராடினால்தான் எம்மை நிலைப்படுத்தமுடியும் என்பது மறுக்கமுடியாத உண்மை. உணவு, பாதுகாப்பு, வாழிடம், சந்ததி நிலைப்படுத்தல் என எல்லாவற்றுக்கும் போராடியே ஆகவேண்டும். இருப்பினும் இவை எல்லாம் நாளாந்த வாழ்க்கையில் நடந்து முடிவதால் அவை போராட்டம் என்று எமக்கு புரிவதில்லை அல்லது எமது சுயநலத்துக்காக செய்வதால் சுமையாக எமக்குத் தெரிவதில்லை. அடுத்து புலம் பெயர்ந்தோர் என்ற வகுதிக்குள் வருவதை சிந்திப்போம்.

ஒரு சமூகத்திற்கான போராட்டம் என்பது அந்தச் சமூகத்தின் உரிமைகள், நலன்களுக்காக தூரநோக்கில் திட்டமிடப்பட்டு மக்களது உடனடி நன்மைக்காக மட்டுமன்றி நீண்டகால பயன்பாட்டுக்காகவும் நடக்கின்ற ஒன்று என்பதை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். இங்கு வெற்றி பெறுவதற்கு பல இழப்புகள் வந்தே தீரும். இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படும். இவையாவும் தவிர்க்க முடியாதவை. இவை யாவும் சமுதாய சிறப்புக்காக அல்லது உலக மேன்மைக்காக நடக்கும் போராட்டங்களுக்கே பொருந்தும்.

இது கடந்த காலங்களில் உலகில் நடந்த போராட்டங்கள் இவற்றை எமக்கு பறைசாற்றுகின்றன. இந்த நிலைகள் யாவற்றையும் எதிர்கொண்டு உறுதியுடனும், நேர்மையுடனும், பொதுநோக்குடன் கடந்த போராட்டங்களே வெற்றிபெற்றுள்ளன. ஆனால் உறுதியான, ஆக்கபூர்வமான, மக்களுக்கு நன்மைதரும் போராட்டங்களை எந்த ஆட்சியாளர்களும் விரும்பமாட்டார்கள். எந்த மக்களுக்காக போராட்டம் நடக்குமோ அந்த போராட்டத்திற்கு எதிராகவே மக்களையே திசை திருப்புவர்.

உலக வரலாற்றில் எந்த ஒரு போராட்டமும் அடக்கப்பட வேண்டும் என்பதே கொள்கையாக நிலைத்துள்ளதே தவிர, போராட்டக்காரர்களின் கோரிக்கை என்ன, ஏன் அவர்கள் போராடுகிறார்கள், அவர்களின் குறைகள் என்ன என்று அறிந்து அதனை தீர்க்க, நசுக்கப்படும் மக்களுக்காக ஆபிரகாம் லிங்கன்கள் இந்த உலகில் தொடர்ந்து தோன்றவில்லை. மாறாக சமூக விரும்பிகளை வன்முறை கொண்டு அடக்கிடும் அரசுகள் அல்லது அவற்றின் ஏவலாளர்களே தொடர்ந்து உலகினை ஆள்கின்றார்கள். இந்த தவறான முன்னுதாரணங்களே இன்றும் உலகில் கடைப்பிடிக்கப்படுகின்றன.

ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்தவர்களில் வரும் வழியில் இறந்தவர்கள், வந்தும் வெளிநாடுகளில் இறந்தவர்கள், சமூகமும் கைவிட்டு சொந்தபந்தங்களும் இல்லாமல் மனம் உழன்று தற்கொலை செய்தவர்கள் என்றும் தொடர்ந்து சொல்லமுடியும். மேலும் இலங்கையில் கூட ஈழத்தமிழர் போராட்டம் ஆரம்பிக்க முன்பு மேதினம் என்பது பேருந்துக் கட்டணம் குறைந்த நாளாகவும், சினிமா கொட்டகைகளில் குறைந்த கட்டணத்தில் சினிமா பார்க்கும் தினமாகவுமே பார்க்கப்பட்டதே தவிர அதன் பெறுமானம் என்ன என்பது யாருக்கும் தெரியவில்லை என்றுதான் சொல்லமுடியும்.

இன்றைய உலகம் மொத்த வியாபாரிகள் கைகளில் சுத்தமாக போய் சேர்ந்துவிட்டது. சுதந்திர மனிதன் இயந்திர மனிதனாக மாறிவிட்டான். பொதுவுடைமைவாதிகளின் கருத்துக்கள் தோற்றுவிட்டன. வாழ்க்கை பற்றி தெரியாமலே மனிதன் அதன் பின் ஓடுகின்றான். என்னவென்று தெரியாமல் வாழ்க்கையை சுமையாக்கிக்கொண்டு ஓடுவதால் சிந்திக்க நேரமில்லை. சுயசிந்தனை தொலைந்து விட்டது. சுற்றிவிட்ட பம்பரம்போல் சுழன்றுகொண்டு வாழ்கிறான்.

இதனால் வியாபார உலகம் நன்மை கண்டது. வெற்றிபெற்றது என்பது கண்கூடு. அதனால்தான் பொதுவுடைமைவாதி சொன்னான் சுதந்திரம், உரிமை என்பவற்றை பெற்றுக் கொடுத்தால் மட்டும் போதாது அவற்றை அனுபவிக்க கற்றும் கொடுக்கவேண்டும். காரணம் மக்கள் அவற்றை அனுபவிக்க விரும்புவதில்லை. ஏனென்றால் உரிமைகளை கேட்டு நாம் இருப்பவற்றையும் இழந்து விடுவோம் எனப்பயப்படுவர். அப்படியான ஒரு உளவியலுக்குள் சிக்கவைத்து மக்களை வாழப்பழக்கிவிட்டனர்.

போராட்டம் என்பது மக்களிடம் திணிக்கப்பட்டதாகவோ அல்லது அவசியமானதாகவோ இருக்கலாம். பொதுவாக போராட்டத்தை மக்கள் மத்தியில் ஆட்சியாளர்களே முன்னிலைப்படுத்துவர் அல்லது திணிப்பர். ஒரு இனத்தை வீழ்த்தவேண்டுமாயின் அவர்களின் முன்னேற்றமான இயல்புகள் மழுங்கடிக்கப்பட்டு பலவீனமான பக்கங்கள் ஊக்கப்படுத்தப்படும்.

ஈழத்தமிழன் அறிவினால் உயர்ந்தான் என்றால் அது வீழ்த்தப்பட்டு பணத்தாசை புகுத்தப்பட்டது. மேல்நாட்டு மோகம், ஆடம்பர வாழ்வு அறிமுகப்படுத்தப்பட்டது. இன்று போதையும் வன்முறையும் பழக்கப்படுத்தப்பட்டுவிட்டது. அவர்களை அவர்களே அறியாமல் அடிமையாகி அழிகின்றனர். புலம்பெயர்ந்த நாடுகளில் எங்களை நாங்கள் இனம் காட்ட முடியாமல் அல்லது இனம்காட்ட விரும்பாமல் நாங்களும் கரைந்து உருமாறிச்செல்கின்றோம். நாங்கள் யாரென்று எங்களுக்கும் தெரியவில்லை எங்கள் பிள்ளைகட்கும் சொல்லவில்லை. இது புலம்பெயர்ந்ததால் வந்ததல்ல. வெள்ளையர்கள் ஈழத்தில் காலூன்றிய காலத்தில் புகுத்திவிட்ட மனநிலை.

ஆதலால் தான், எங்கள் மூத்தோர் ஆங்கிலத்தில் பேசுவது பெருமை என்றும் அக்கலாசார உடைகளுக்கு மதிப்பளித்தல் சிறப்பென்றும் நமக்கு வழிகாட்டுகின்றனர். ஒரு காலத்தில் தமிழ் பேசும் பண்டிதர்கள் தரம் தாழ்ந்து பார்க்கப்பட்டதாலும், அவர்கள் அணிந்த வேட்டி சட்டை இழிவாக கணிக்கப்பட்டதாலுமே பள்ளிகளில் மட்டுமல்ல எங்கள் மக்களிடமிருந்தே அவை விடைபெற ஆரம்பித்தன என்பது ஒப்புக்கொள்ள வேண்டிய உண்மை.

தமிழர்கள் தனித்துவம் பேணிவாழ பெருமளவு நாட்டம் கொள்ளவில்லை. சிங்களவர் தங்களை விட்டுக்கொடுத்து வாழவும் விரும்பவில்லை, தமிழன் ஆள்வதையும் விரும்பவில்லை. தங்களுடன் சமமாய் வாழ்வதையும் ஏற்கவில்லை. இதனால் ஈராயிரம் ஆண்டுகள் பழமை கொண்ட இலங்கையில் இரண்டு இனங்கள் இணங்கி வாழமுடியவில்லை.

புத்தம் போதிக்கும் நாட்டில் யுத்தம் நடக்கின்றதே தவிர அன்புநெறி நிலைக்கவில்லை அல்லது அரவணைத்துச் செல்லவில்லை. தமிழ் மக்களை கொல்லத்தயங்கவில்லை. மக்களாட்சி நடக்கின்றது தமிழ்ச்சனம் மன அமைதியுடன் வாழவழியில்லை. இது பாராளுமன்ற அரசியலின் தோல்வி என யாரும் ஏற்கவும் இல்லை. உயிர் போகிறது என்று உரத்து கத்தியும் உதவிக்கு ஆளில்லை. ஜனநாயகம் கூட சத்தம் போடாது தூங்கிவிட்டது. சமாதானம் சொல்லும் நல்லோர்கூட உயிர்காக்க வரவில்லை.

ஈராயிரம் ஆண்டுகள் பழைமை கொண்ட நாடு இலங்கை. இருப்பினும் இரண்டு இனங்கள் இணங்கி வாழமுடியாது சண்டையிடும் பூமி. புத்தம் போதிக்கும் ஆட்சி ஆனால் நித்தம் தமிழர்களுக்கு சோதனை. அன்புநெறி கூறினாலும் அடக்குமுறைக்கு குறைவில்லை.மக்கள் ஆட்சி எனினும் தமிழ்மக்கள் வாழவழி கிடைக்கவில்லை. இது பாராளுமன்ற அரசியலின் தோல்வி என யாரும் ஏற்கவும் இல்லை. உயிர் போகிறது என்று உரத்து கத்தியும் உதவிக்கு ஆளில்லை. உலக ஜனநாயகம் கூட சத்தமின்றி அமைதியாகிவிட்டது.

**பரமபுத்திரன்**

# தத்துவ ஞானப்பயிற்சியும் மகிழ்ச்சியான வாழ்க்கையும்

## ஒரு நோக்கு

இவ்வுலகில் பிறந்த அனைத்து மனிதர்களும் அறிந்தும் அறியாமலும் ஞானத்தையும் நிறைவான மகிழ்ச்சியையும் நோக்கியே பயணம் செய்கின்றார்கள். உலக வரலாற்றில் சில மனிதர்கள் ஞானத்தைப் பற்றியும் அதனை அடைவதற்கான மார்க்கங்கள் பற்றியும் போதித்தும் வாழ்ந்தும் காட்டியிருக்கிறார்கள். அவையே பின்னாளில் தத்துவங்கள், சமயங்கள் என மக்களால் பின்பற்றப்படுகின்றன.

பண்டைய கிரேக்க காலத்திலிருந்தே பொருள்முதல் வாதம், கருத்து முதல் வாதம் என இரு சிந்தனை முறைகள் நிலவுகின்றன. பொருள் முதல் வாதம் எனும் போது இப்பிரபஞ்சம் பருப் பொருட்களால், அணுக்களால் ஆக்கப்பட்டவை எனவும் பருப்பொருளே மூலம் எனவும் அதிலிருந்தே மனிதன் பல ஆண்டு காலம் சிந்தித்து கருத்தைப் படைக்கிறான் எனவும் போதிக்கின்றது.

கருத்துமுதல் வாதம் இப்பிரபஞ்சம் கருத்துக்களால் ஆக்கப்பட்டது எனவும் கருத்தே மூலம் எனவும் அதிலிருந்தே பொருட்கள் தொடக்கம் ஏனைய அனைத்தும் தோற்றம் பெறுகின்றது எனவும் போதிக்கின்றது.

இவ்விரு தத்துவப் போக்குகளுக்கு இடையே மேலும் பல தத்துவ ஞான முறைகள் உள்ளன. பொருள்முதல் வாதம் நிறுவனமயப்பட்ட தத்துவமல்ல. சமயங்கள் யாவும் கருத்து முதல்வாதத்தை அடிப்படையாகக் கொண்டன. கடவுள் என்னும் உயர்ந்த கருத்திலிருந்தே சடப்பொருட்கள், உயிர்கள் யாவும் தோற்றம் பெற்று பரிணாம வளர்ச்சி பெற்றன என சமயங்கள் விளக்குகின்றன.

ஒவ்வொரு சமயமும் தமக்கேயுரிய மூல நூல்களைக் கொண்டிருக்கின்றன. இந்து சமயம் பகவத்கீதையையும், பௌத்த சமயம் தர்மபதத்தையும் கிறிஸ்தவம் வேதாகமத்தையும் இஸ்லாம் திருக்குர் ஆனையும் தமது மூல தத்துவ நூலாகக் கொண்டுள்ளன. இவ்வாறு ஏனைய மதங்களும் மதப்பிரிவுகளும் மூல நூல்களைக் கொண்டுள்ளன.

இருந்தும் காலத்திற்குக் காலம் ஒவ்வொரு மதங்களிலும் தோன்றும் தத்துவவாதிகள், சிந்தனையாளர்கள், கடவுள், வாழ்க்கை முறை, மனித ஒழுக்கம், அனுட்டானங்கள் தொடர்பாக புதிய கருத்துக்களை, வியாக்கியானங்களை மக்களுக்குக் கூறிச் சென்றுள்ளார்கள்.

இந்துசமயத்தில் நாம் எல்லோரும் அறிந்த இராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர் போன்றோர் தத்துவ ஞானக் கிளறலை ஏற்படுத்தி மக்களைச் சிந்திக்க வைத்தார்கள். சுவாமி விவேகானந்தர் தனது போதனைகளில் செயற்பாடுகள் மூலம் ஏழை மக்களின் வறுமையைத் துடைத்து அவர்களின் மகிழ்ச்சியில் இறைவனைக் கண்டார்.



கிறிஸ்தவ சமயத்தை மக்கள் மத்தியில் பரப்புவதற்காக அதன் துறவியர்கள் மேற்கத்தேய தத்துவத்தையும் சேர்த்து கவர்ச்சியாகப் பயன்படுத்தினார்கள். பௌத்த சமயத்தைப் பொறுத்தவரை அது ஒரு தத்துவமாகவே தோற்றம் பெற்றது. அத்தத்துவம் துக்கம் பற்றியும் அதிலிருந்து விடுதலையடைவதற்கான எட்டுச் செயல்கள் பற்றியும் இறுதியாக பரிநிர்வாணம் எனும் முழுமையான மகிழ்ச்சி தொடர்பாகவும் கூறுகின்றது.

பௌத்தர்கள் புத்தர், சங்கம், தர்மபதம் எனும் மூன்று விடயங்களையும் நம்புகின்றார்கள். இலங்கையில் பௌத்தம் அரசமதமாக, அரசியல் மயமாக்கப்பட்ட மதமாகவே உள்ளது. தேசிய கொள்கை உருவாக்கத்தில் பௌத்த பீடங்கள், சங்கங்கள், பிரதான இடத்தை வகிக்கின்றன.

இவை ஏனைய இனம், மதம் சார்ந்த மக்களைப் பாதிப்பதாகவேயுள்ளது. பௌத்த தத்துவம் கூறும் சமாதானம் மகிழ்ச்சிக்குப் பதிலாக நாட்டில் வாழும் ஒவ்வொரு சமூகமும் தனிமனிதனும் துக்கத்திற்கும் அவல வாழ்வுக்குமே உட்படுகின்றன.

18, 19 ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட கைத்தொழில்புரட்சி இயங்கியல் பொருள் முதல்வாத எழுச்சிக்கு வித்திட்டது. அதனை அடியொற்றி 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் 1917 இல் ஏற்பட்ட ரஷ்ய ஒக்டோபர் புரட்சி, சமூக விடுதலை, பொருளாதார சமத்துவம், நவீன அறிவியல் வளர்ச்சி என்பவற்றுக்கு அடித்தளமிட்டது.

இவ் எழுச்சி ஏனைய ஆசிய, ஆபிரிக்க, லத்தீன், அமெரிக்க நாடுகளுக்கும் பரவியதோடு சமூக விடுதலையும் தத்துவார்த்த மாற்றங்களும் ஏற்பட்டன. இவை மனித சிந்தனையில் செயற்பாட்டில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தின.

கார்ல் மார்க்ஸ் தத்துவஞானம் பற்றி குறிப்பிடுகையில், "தத்துவஞானம் தொழிலாளர்களின் பொருள்முதல் வாதத்தை உள்வாங்க வேண்டும். தொழிலாளர்கள் அல்லது பாட்டாளிகள் தத்துவ ஞானத்தை கற்கவேண்டும்" என்றார்.

இதனால் 20 ஆம் நூற்றாண்டில் கம்யூனிச நாடுகளில் சிறப்பாகவும் ஏனைய நாடுகளில் பொதுவாகவும் சாதாரண மக்களும் பொதுவுடைமைத் தத்துவத்தையும் ஏனைய தத்துவங்களையும் கற்று தத்துவஞானப் பயிற்சியைப் பெற்றார்கள்.

1990களில் சோவியத் யூனியனின் உடைவின் பின்னர் உலகில் அரசியல் சமநிலை குழம்பியதோடு சித்தாந்த சமநிலையும் குழம்பியது எனலாம். இதன் பின்னால் கிறிஸ்தவ, யூத, இஸ்லாமிய, இந்து, பௌத்த அடிப்படை வாதங்களும் தீவிரமடைந்தன.

ஒவ்வொரு மதமும் வரலாற்று ரீதியாக தோற்றம் பெற்ற பின்னர் காலத்திற்குக் காலம் சீர்திருத்தங்கள், தத்துவார்த்த மாற்றங்கள் ஏற்பட்டே வந்தன. ஆனால் கால, சமூக மாற்றத்தில் குறிக்கப்பட்ட மதத்தைப் பின்பற்றும் சமூகம் ஒடுக்குமுறைக்கு உள்ளாகும்போது ஒரு குழுவினர் ஆரம்பநிலைக்கு சென்று மூலப் பிரதியை தமக்கு ஏற்றவாறு உரைபெயர்ப்புச் செய்து அதன் மேல் நூறு வீதம் நம்பிக்கை வைக்கும் போது அவர்கள் தீவிரவாதிகளாக, பயங்கரவாதிகளாக செயற்படுகின்றார்கள். இச்சிறிய குழுவினரின் பயங்கர நடவடிக்கைகளால் முழு மக்களுமே பாதிக்கப்பட்டு துக்க சாகரத்தில் மூழ்குகின்றார்கள்.

மதவெறியும் அபினைப் போன்றே மனித மூளையை மரத்துப் போக வைத்து ஒற்றைச் சிந்தனைக்குள் உள் நுழைக்கிறது. தங்கள் மதத்தின் நலன்கள் தொடர்பாக பிழையானவரால் ஊட்டப்படும் கருத்துக்களை நம்பி, அவற்றில் சிலவற்றை உள்வாங்கிக் கொண்டு அவற்றுக்குள்ளே நின்று வேறு எதையும் பற்றிச் சிந்திக்காது கூத்தாட வைக்கிறது மதவெறி. இதுவே முரண்பாடுகளுக்கும் மோதல்களுக்கும் நிரந்தரமாக மக்களிடையே நிலை பெறக்கூடிய கசப்புணர்வுகளுக்கும் மானிடச் சிதைவுகளுக்கும் காரணமாகின்றது. இவற்றிலிருந்து மக்கள் விடுதலையடைய தத்துவ ஞான அணுகுமுறையே சிறந்த மார்க்கமாகும்.

பி.முத்துலிங்கம்
ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி

---

# அம்புலன்ஸ் சாரதிகள் லீவு கர்ப்பிணிப் பெண்ணை காப்பாற்றிய பெண் மருத்துவர்


வடகிழக்கு மாநிலங்களில் ஒன்றான மேகாலயா மலைகள் சூழ் மாநிலம். போக்குவரத்து, வீதி என அடிப்படை வசதிகள் பலவும் பின்தங்கியுள்ள அந்த மாநிலத்தில், மேற்குகரோ ஹில்ஸ் மாவட்டத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவராக பல்நாம்சி சங்மா (Balnamchi Sangma) பணியாற்றி வருகிறார். இந்த வைத்தியசாலையில் கோரமாரா கிராமத்தைச் சேர்ந்த கர்ப்பிணிப் பெண் ஒருவர் அண்மையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். ஆனால், அவரது உடல் நிலை மோசமடைந்திருக்கிறது. அந்தச் சூழலில் அவருக்கான மருத்துவ சிகிச்சைகளை அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் அளிக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

தாயையும் சேயையும் காப்பாற்ற வேண்டுமென்றால், அங்கிருந்து 36 கி.மீ தொலைவில் உள்ள டுரா எனும் பகுதியில் இயங்கிவரும் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல வைத்தியசாலையில் சேர்த்தால் மட்டுமே முடியும் என்ற நிலை. அந்தச் சூழலில் வைத்தியசாலையில் மருத்துவர் பல்நாம்சி மட்டுமே இருந்திருக்கிறார். அந்த வைத்தியசாலையில் நோயாளிகளின் அவசரத் தேவைக்காக அம்புலன்ஸ் இருந்தும், சாரதிகளாகப் பணிபுரிந்து வந்த இருவருமே விடுப்பில் இருந்திருக்கிறார்கள். அவர்களைத் திரும்ப பணிக்கு அழைத்து ஆம்புலன்ஸ் வாகனம் மூலம் அந்தக் கர்ப்பிணியை டுரா மருத்துவமனைக்குக் கொண்டுசெல்ல தாமதம் ஆகலாம் என்ற சூழலில் துணிச்சலான முடிவை மருத்துவர் பல்நாம்சி சங்மா எடுத்திருக்கிறார்.

அம்புலன்ஸ் வாகனத்தில் கர்ப்பிணியை ஏற்றி, 36 கி.மீ தூரத்தில் உள்ள டுரா வைத்தியசாலைக்கு அவரே ஓட்டிச் சென்றிருக்கிறார். கர்ப்பிணிப் பெண்ணுக்கு பிரசவ வலி எடுத்த நிலையில், அவரைப் பத்திரமாக மகப்பேறு வைத்தியசாலை கொண்டு சென்று அனுமதித்து தாயையும் சேயையும் காப்பாற்றியிருக்கிறார் மருத்துவர் பல்நாம்சி சங்மா.

அந்த கர்ப்பிணிப் பெண்ணின் குடும்பமும் பொருளாதாரத்தில் பின்தங்கிய சூழலில் இருந்தனர். அதனால், தனியார் அம்புலன்ஸை ஏற்பாடு செய்யும்படி அவர்களிடம் கேட்க எனக்கு மனமில்லை. அந்தச் சூழலில் வேறுவழியில்லாததால், அம்புலன்ஸை ஓட்டிச்சென்று அவரை வைத்தியசாலையில் சேர்க்கலாம் என்று முடிவெடுத்தேன். உரிய சாரதி உரிமமும் என்னிடம் இருந்ததால், அந்த நேரத்தில் அதுவே சரியான முடிவாக எனக்குத் தோன்றியது. மனதில்பட்டதைச் செய்தேன்" என்று நெகிழ்ந்திருக்கிறார்.

# நெருக்கடிக்குள் அமெரிக்க ஜனாதிபதி



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பதவிக்கு வந்த நாள் முதல் தொடர்ச்சியாக பல்வேறு சர்ச்சைகளுக்கு உள்ளாகி வந்திருக்கிறார். தற்போது இன்னொரு சர்ச்சைக்குள் அவர் சிக்கியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

சட்டவிரோத நடவடிக்கைகள் குறித்து முறைப்பாடுகளைத் தெரிவிக்கும் ஒருவர் ட்ரம்புக்கும் உக்ரேயின் ஜனாதிபதி வோலோடிமிர் செலென்ஸ்கிக்கும் இடையே ஜூலை 25 இடம்பெற்ற தொலைபேசிக் கலந்துரையாடலின் அச்சுப்பிரதி தொடர்பில் செய்த ஒரு முறைப்பாடே சர்ச்சைக்கு காரணமாக அமைந்திருக்கிறது. தனது சொந்த அரசியல் நலன்களுக்காக ட்ரம்ப் வேண்டுமென்றே அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்திருப்பது அம்பலமாகியிருக்கிறது.

அந்தக் கலந்துரையாடலில் அமெரிக்க ஜனாதிபதி தனது அரசியல் போட்டியாளரான முன்னாள் உப ஜனாதிபதி ஜோ பிடெனையும் உக்ரேயினில் வர்த்தக நலன்களைக் கொண்ட அவரின் மகன் ஹன்டர் பிடெனையும் விசாரணைக்குட்படுத்துமாறு செலென்ஸ்கியிடம் திரும்பத் திரும்ப கேட்டிருப்பது தெரிய வந்திருக்கிறது.

2020 ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயக கட்சியின் வேட்பாளராக பிடென் களமிறங்குவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. மீண்டும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவதற்கான தனது வாய்ப்புக்களை மேம்படுத்துவதற்காக ட்ரம்ப், பிடென் மீது சேறுபூச திட்டமிடுகின்றார் என்பதை தொலைபேசி கலந்துரையாடல் மறைமுகமாகத் தெரிவிக்கிறது.

அமெரிக்கா உக்ரேயினுக்கு எவ்வளவை செய்கிறது. மேலும் எவ்வளவைச் செய்யமுடியும் என்பதை செலென்ஸ்கிக்கு ஜனாதிபதி ட்ரம்ப் திரும்பத் திரும்ப நினைவுபடுத்துவதை கலந்துரையாடலில் கேட்கக் கூடியதாக இருக்கிறது.

உக்ரேயினுக்கு அமெரிக்கா வழங்கும் உதவிகளையே அவர் இவ்வாறு குறிப்பிட்டார் என்பது தெளிவானது. அந்த நாட்டுக்கான சுமார் 25 கோடி டொலர்கள் இராணுவ உதவிகளை ட்ரம்ப் நிர்வாகம் நிறுத்திவைத்திருப்பதாக கூறப்படுகிறது.

தான் கேட்பதை செய்வதற்கு உக்ரேயின் ஜனாதிபதி செய்யத்தவறினால், அந்த உதவி விடுவிக்கப்படமாட்டாது என்று அவருக்கு ட்ரம்ப் எச்சரிக்கை செய்கிறார் என்பது தெளிவாகத் தெரிகிறது. தேர்தலில் வெற்றிபெறுவதற்காக ட்ரம்ப் எவற்றையெல்லாம் செய்யத்தயாராக இருக்கிறார் என்பதை இது வெளிக்காட்டுகிறது.

இது உண்மையில் இரு புதிய விடயமும் அல்ல. 2016 ஆம் ஆண்டில் ட்ரம்பின் பிரசாரங்களுக்கு பொறுப்பாக இருந்த அதிகாரிகள் ஜனாதிபதித் தேர்தலில் ரஷ்ய அரசாங்க அதிகாரிகள் தலையிடுவதற்கு வசதியாக அவர்களுடன் சேர்ந்து சதி வேலைகளில் ஈடுபட்டதாக நம்பப்படுகிறது.

ஜனநாயகக் கட்சியின் வேட்பாளரான ஹிலாரி கிளின்டனின் மின்னஞ்சல்களை ரஷ்ய அதிகாரிகள் வேவுபார்த்து ட்ரம்புக்கு உதவுவதற்கு தகவல்களை வெளியிட்டதாக பெரும் சர்ச்சை மூண்டது.

இத்தடவை ட்ரம்ப் தான் மீண்டும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவதற்கான வாய்ப்புக்களை மேம்படுத்துவதற்காக வெளிநாட்டு அரசாங்கம் ஒன்றின் உதவியை நாடியது மாத்திரமல்ல, தனது நலன்களுக்காக ஜனாதிபதிக்குரிய அதிகாரங்களை தவறான முறையில் பயன்படுத்துவதற்கு முனைந்து நிற்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

ரஷ்யர்கள் தலையீடு செய்ததாக கூறப்படுகின்ற 2016 தேர்தலின்போது ட்ரம்ப் வேட்பாளராக மாத்திரமே இருந்தார்.

ஆனால், இப்போது நாட்டின் ஜனாதிபதியாக இருந்துகொண்டு தேர்தல் வெற்றிக்காக வெளிநாட்டு உதவியை அந்தரங்கமாக அவர் நாடுவது தேசிய நலன் களுக்கும் பாதகமானது என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

தவிரவும், அந்தரங்க நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுகின்ற தரவுகள் சேகரித்து வைக்கப்பட்டிருக்கும் -மிகவும் இரகசியமாக பேணப்படுகின்ற- தரவுத்தளத்தை ஜனாதிபதியின் ஊழல்களையும் அதிகார துஷ்பிரயோகத்தையும் மறைப்பதற்கு வெள்ளைமாளிகை அதிகாரிகள் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

ட்ரம்பின் பதவிக்காலம் வெட்கக்கேடான ஊழல்களும் சர்ச்சைகளும் நிறைந்ததாக காணப்படுகிறது. முன்னைய சந்தர்ப்பங்களில் அவர் தண்டனைகளில் இருந்து தப்பித்துச் செல்லக்கூடியதாக இருந்தது. ஏனென்றால் விசாரணைகளுக்கு இடையூறுகளை விளைவித்ததில் அவரது பாத்திரம் தொடர்பில் சான்றுப்படுத்த எந்தவொரு அச்சுப்பிரதியும் இருக்கவில்லை.

மிகவும் குறுகிய நாட்கள் தனது தேசிய பாதுகாப்பு ஆலோசகராக பதவி வகித்த ஓய்வுபெற்ற அமெரிக்க இராணுவ அதிகாரி மைக்கேல் ஃபிளினின் குற்றச் செயல்கள் தொடர்பான விசாரணையை கைவிடுமாறு கேட்பதற்கு சமஷ்டி புலனாய்வு பணியகத்தின் (எவ்.பி.ஐ.) பணிப்பாளர் ஜேம்ஸ் கொமியுடன் ஜனாதிபதி ட்ரம்ப் நடத்தியதாகக் கூறப்படுகின்ற கலந்துரையாடல் தொடர்பான அச்சுப்பிரதி எதுவும் இருக்கவில்லை.

பல வருடங்களுக்கு முன்னர் தான் இரகசியமான பாலியல் தொடர்பு வைத்திருந்த நடிகையான ஸ்ரோமி டானியலுக்கு பெருந்தொகைப் பணத்தைக் கொடுத்து அந்த தொடர்பு பற்றிய விபரங்களை அவள் வெளியிடாமல் தடுப்பதற்கு தனது சட்டத்தரணியுடன் ட்ரம்ப் நடத்திய கலந்துரையாடல் பற்றிய அச்சுப்பிரதியும் கூட இல்லை.

இத்தடவை நிலைமை வித்தியாசமானது. உக்ரேயின் ஜனாதிபதியுடன் ட்ரம்ப் நடத்திய கலந்துரையாடல் பற்றிய அச்சுப்பிரதி கிடைத்திருக்கிறது. அவருக்கு எதிரான உறுதியான சான்றுகள் கைவசம் இருக்கின்றன.

அதனால் காங்கிரஸின் ஜனப்பிரதிநிதிகள் சபையில் ஜனாதிபதிக்கு எதிரான அரசியல் குற்றச்சாட்டு விசாரணைகளை **(Impeachment Inquiry)** முறைப்படி முன்னெடுப்பதில் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் உற்சாகமாக இறங்கியிருக்கிறார்கள்.

இந்த விசாரணைகள் இறுதியில் அவரின் பதவி நீக்கத்தில் முடியாமல் போகலாம், அல்லது மீண்டும் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்படக்கூடிய வாய்ப்புக்களைப் பாதிக்காமலும் போகலாம். ஆனால் ஒன்று மாத்திரம் நிச்சயம். ட்ரம்ப் பாரதூரமான நெருக்கடிக்குள் சிக்கிக்கொண்டுள்ளார்.

ஜனாதிபதிக்கு எதிரான அரசியல் குற்றச்சாட்டு விசாரணையை ஜனநாயகக் கட்சியின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற ஜனப்பிரதிநிதிகள் சபை தொடர்ந்து முன்னெடுக்கின்ற நிலையில் வெள்ளைமாளிகைக்கும் காங்கிரஸின் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்களுக்கும் இடையிலான பதற்றநிலை தீவிரமடைந்திருக்கிறது.


வோஷிங்டனுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு வந்திருந்த பின்லாந்து ஜனாதிபதி சோலி நின்ஸ்டோவுடன் கூட்டாக வெள்ளை மாளிகையில் நடத்திய செய்தியாளர் மகாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி ட்ரம்ப், "அரசியல் குற்றச்சாட்டு விசாரணை ஒரு ஏமாற்றுச்செயல்" என்றும் "அமெரிக்க மக்கள் மீதான ஒரு மோசடித்தனமான குற்றச்செயல்" என்றும் வர்ணித்தார்.

அதேவேளை, ஜனப்பிரதிநிதிகள் சபையின் சபாநாயகர் நான்சி பெலோசி அந்த சபையின் புலனாய்வு கமிட்டியின் தலைவர் அடம் ஷிவ் சகிதம் நடத்திய செய்தியாளர் மகாநாட்டில் "தனது சபைக்கு ஜனாதிபதி மீதான அரசியல் குற்றச்சாட்டை விசாரணை செய்வதைத் தவிர வேறுவழியில்லை" என்று குறிப்பிட்டிருந்ததாக செய்திகள் தெரிவித்தன.

# ஆயுத பூஜை

அன்பு நிறைந்த சங்குநாத வாசகர்களுக்கு அழகான ஜிம்மிக்குட்டியின் இதமான ஞாயிறு காலை வணக்கங்கள் உரித்தாகட்டும். மழை போக வெயில் வந்து திரும்பவும் கொளுத்தத் தொடங்கி விட்டுது. ஆனாலும் விடியக் காலையிலை இலேசான பனித்துளியும் விழுகிறது. சுருண்டு படுத்து இலேசாக கண்ணை மூடினாலும் பெரியவரின்ரை திருவாசகம் என்னையும் உருக்கி எழும்ப வைச்சிடும். சக்தியின் பெருமை பேசுற நவராத்திரி காலம். வீடுகள், கோயில்கள், கல்விக்கூடங்கள் எங்கும் சின்னஞ்சிறுசுகள் முதல் பல்லுப்போன பாட்டி, தாத்தா வரைக்கும் சுண்டல், அவல், வடை, வாழைப் பழம் எண்டு ஒரே கொண்டாட்டம். பட்டிதொட்டியெல்லாம் படிச்சவர், பாமரர் வேறுபாடில்லாமல் நடக்கிற மாலை நேரம் பூஜை வேளைகள் எனக்கும் வலு புளுகம் தாஞ். கமகம எண்டு மூக்கைத் துளைக்கிற தாளிச்சுக் கொட்டிற வாசம். ம்...அப்பப்பா அது தனி ருசி தான். என்ன விடியக் காலமை வயிற்றை என்னமோ செய்யுதோ...பரவாயில்லை... நீங்களும் வீடு வாசல் பெருக்கி விளக்கேற்றிக்கடலை அவியுங்கோவன்...


சரி...சரி சும்மா எல்லோருக்கும் பசியைக் கிளப்பெரிசாச் செய்யப் போறாராமோ...ஏதோ தோரணம், மாலை, கோலம், பாட்டு, கவிதை, நாடகம், பேச்சு அது இது எண்டு எக்கச்சக்கமான போட்டியள் எண்டு கதைச்சார். இந்த...தோரணம் கட்டுற கலை அழிஞ்சு கொண்டு போகுது. முந்தி



எண்டால் கிளித் தோரணம், பாம்புத் தோரணம் எண்டெல்லாம் வகை வகையாச் செய்யிற ஆக்கள் இருந்து கலை வளர்த்தவை. மாலை கட்டுறதும் அப்படித்தான். பூந்தோட்டம் வைச்சு வளர்த்து அதை மாலை கட்டுற தொழிலா நடத்திற குடும்பங்கள் இருந்தவை...ம்... இப்ப எல்லாம் றெடிமேட்... முழம் முழமா அளந்து வாங்கிக் கொண்டாட்டத்தை முடிச்சுப் போடுகினம். சரி...சரி கலை வாழ்க... பெரியவர் சாய்ஞ்சு படுக்கிறார். சின்னாம்பி அண்ணை தொடங்கிறார்.

"என்னண்ணை ஆயுத பூஜை, நாள் படிப்பு, ஏடு கொண்டு வந்து குடுக்கிறா. எல்லாரும் குடிக்கினம்... பெரியவர் சால்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு நிமிர்ந்து இருக்கிறார். ஏதோ ஆழமாச் சொல்லப்போறார் போல கிடக்கு...

"எல்லாம் சரி சின்னாம்பி...நேரம் முக்கியம் பேச்சுக்கள் அதிகம் வேண்டாம். ஆயுத பூஜையைப் பற்றி புதிசா ஒண்டும் சொல்லுறதுக்கு இல்லை. ஆனாலும் உலகத்திலையே மிக முக்கியமான, அழகான, ஆழமான, ஆபத்தான, வீரியம் கூடிய ஆயுதம் எழுது கருவி தானப்பா. அன்றைக்கு எழுத்தாணி, இன்றைக்குப் பேனா. ஆயுதம் வைச்சிருக்கிறவனை விட பேனா பிடிக்கிறவன் தான் உண்மையான ஆத்மீகப் போராளி. ஒரு கவிஞன் சொல்லியிருக்கிறான்..."பேனா முனைகள் கூர் பெறுமேயானால் ஆயுதக்கிடங்குகள் எல்லாம் இழுத்து மூட வேண்டி வரும்"-எப்பிடியப்பா விடயம். எழுத்து ஒருவனின் தலையெழுத்தையே மாற்றிப் போடும். இலட்சியப் போக்கு நிறைந்த இளைஞர்கள் கையிலை எழுது கருவிகள் தவழத் தொடங்கினால் கத்தியின்றி, இரத்தமின்றி அற்புதமான ஒரு உலகத்தைப் படைக்கலாம். இனிவரும் சந்ததிகள் பயமின்றி தைரியமான, சுதந்திரமான இனிய வாழ்வை



ஆயுதம் வைச்சிருக்கிறவனை விட பேனா பிடிக்கிறவன் தான் உண்மையான ஆத்மீகப் போராளி. ஒரு கவிஞன் சொல்லியிருக்கிறான்..."பேனா முனைகள் கூர் பெறுமேயானால் ஆயுதக்கிடங்குகள் எல்லாம் இழுத்து மூட வேண்டி வரும்".

பாமல் விசயத்துக்கு வருவம். சரியே கதை. கேற் திறக்குது சின்னாம்பி அண்ணை, பாலா எல்லோரும் வருகினம். தென்னங்குருத்தும் கொண்டு வருகினம். பெரியவர் எட்டிப்பாக்கிறார். எல்லாரும் வந்து திண்ணையிலை இருக்கினம். நானும் ஒருக்கா எழும்பி மரியாதைக்கு வாலை ஆட்டிப் போட்டு முன்னங்கால்களைத் தூக்கி வணக்கம் சொல்லிப்போட்டு வாசல் சாக்கிலை குந்தி இருப்பம்...பெரியவர் தொடங்கிறார்...

"என்ன தம்பி பாலா... சின்னாம்பி அண்ணை என்னவாம்... கொண்டாட்டம் தொடக்கிற விடயங்கள் எல்லாம் இருக்கெல்லே... முன்பள்ளி கலாசார மண்டபத்திலை கொலு வைக்கிறம். படிக்கிற பிள்ளைகளிட்டை இசைக்கருவிகள் ...எண்டு சொல்லியிருக்கிறம். பக்கத்து வீடுதானே பரஞ்சோதி-அவரிட்டை கலப்பை, மண்வெட்டி, அரிவாள் எண்டு ஆயுதங்கள் எல்லாம் வகைக்கு ஒண்டாக்கொண்டு வரச் சொல்லியிருக்கிறன். அண்டைக்கு சாதம், சாம்பாறு விசேடமா வைக்கிறம். எல்லர்த்துக்கும் நீங்கள் இருந்து ஏடு துவக்கி சிறப்பிக்க வேணும் அண்ணை..."

லதாக்குட்டி பாற்கஞ்சி

அனுபவிக்கலாம்.

ஆயுதங்களை அந்தக்காலத்தில துஷ்ட மிருகங்களிடமிருந்து காப்பாற்றும் கருவியாகத்தான் பாவிச்சவை. ஆனால் இந்தக்காலத்தில துஷ்ட மனிதர்கள் அதைக் கையாளுறதாலை அப்பாவிகள் பாதிக்கப்படுகினம். ம்...ம்...இனி ஒரு புதுயுகம் படைக்க இளையோர் முன் வர வேண்டும்... பாத்தியளே கேட்டியளே... பானை பிடிச்சவன் பாக்கியசாலி-பேனா பிடிச்சவன் தைரியசாலி. ம்...போட்டு வாறன்.

திருமதி.பாரதி கணேஷ்
சுன்னாகம்.

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : இதயவீணை
இயற்றியவர் : வாலி
இசை : சங்கர் கணேஷ்
பாடியவர்: ரி.எம்.சௌந்தரராஜன், எல்.ஆர்.ஈஸ்வரி



சிந்து நதியின் மிசை நிலவினிலே
சேரநன்னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்து
தோணிகளோட்டி விளையாடி வருவோம்
சிந்து நதியின் மிசை நிலவினிலே
சேரநன்னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்து
தோணிகளோட்டி விளையாடி வருவோம்

கங்கை நதி புறத்து கோதுமை பண்டம்
கங்கை நதி புறத்து கோதுமை பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்வோம்
சிங்க மராட்டியர் தம் கவிதை கொண்டு
சேரத்து தந்தங்கள் பரிசளிப்போம்
சிங்க மராட்டியர் தம் கவிதை கொண்டு
சேரத்து தந்தங்கள் பரிசளிப்போம்

சிந்து நதியின் மிசை நிலவினிலே
சேரநன்னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்து
தோணிகளோட்டி விளையாடி வருவோம்

சிங்களத் தீவினுக்கோர் பாலமமைப்போம்
சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்
சிங்களத் தீவினுக்கோர் பாலமமைப்போம்
சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்
வங்கத்தில் ஓடி வரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்

சிந்து நதியின் மிசை நிலவினிலே
சேரநன்னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்து
தோணிகளோட்டி விளையாடி வருவோம்.




ஆடுகளம், வடசென்னை வரிசையில் தற்போது தனுஷ் வெற்றிமாறன் கூட்டணியில் வந்துள்ள அடுத்த படம் அசுரன். தனுஷ், மஞ்சு வாரியர், அம்மு அபிராமி உள்ளிட்டவர்கள் நடித்துள்ள படம் எப்படி இருக்கு? வாருங்கள் பார்ப்போம்.

சிவசாமி (தனுஷ்) தன்னுடைய இளைய மகன் சிதம்பரம் (கென் கருணாஸ்) உடன் காட்டிற்கு பதுங்கி பதுங்கி செல்லும் காட்சியுடன் தொடங்குகிறது படம்.

பின்னர் என்ன நடந்தது என பிளாஷ்பேக் காட்சிகள் விரிகிறது. அழகான மனைவி மஞ்சு வாரியர், இரண்டு மகன்கள் ஒரு மகள் என சந்தோசமாக வாழ்ந்து வரு கிறது தனுஷின் குடும்பம். அவர்களுக்கு உறுதுணையாக இருக்கிறார் மஞ்சு வாரி யாரின் அண்ணன் பசுபதி.

வடக்கூர், தெற்கூர் என இரண்டாக பிரிந்திருக்கிறது ஊர். தெற்கூரில் இருக்கும் அனைத்து விவசாய நிலங்கள்ளையும் மிரட்டி வாங்கி வைத்துக்கொண்டிருக்கிறார் வில்லன் ஆடுகளம் நரேன். அங்கு ஒரு சிமெண்ட் பக்ட்ரி கட்ட வேண்டும் என்பது அவர்களது திட்டம். ஆனால் தனுஷ் மட்டும் தன்னுடைய 3 ஏக்கர் நிலத்தை தரமாட்டேன் என நிற்கிறார்.

சுற்றிலும் பல்வேறு விதங்களில் குடைச்சல் கொடுக்கிறார் வில்லன். தனுஷின் மூத்த மகன் முருகன் (டீஜே அருணாச்சலம்) அதை தைரியமாக கோபத்துடன் தட்டி கேட்கிறார். அவரை பொலிஸ் பிடித்துச்செல்ல ஊரில் இருக்கும் அனைவரது காலிலும் விழுந்து மன்னிப்பு கேட்கிறார் தனுஷ்.

அதன் பிறகு முருகன் வீட்டிற்கு திரும்பினாலும், பின்னர் கொடூரமாக கொலை செய்கிறது வில்லன் கும்பல்.

அதற்கு பழிதீர்க்க விருப்பம் இல்லாமல் மனதிற்குள்ளேயே புழுங்கிக்கொண்டிருக்கிறார் தனுஷ். அப்பா கோழையாக இருப்பதை பார்த்து இளைய மகன் சிதம்பரம் கடும் கோபமாகிறார்.



அதே கோபத்தில் அவர் செய்யும் விடயத்தால் தான் தற்போது தனுஷ் அவரது குடும்பத்துடன் தலைமறைவாக இருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. தனுஷ் ஏன் இப்படி இருக்கிறார். இளம் வயதில் எப்படி இருந் தார் என மேலும் ஒரு பிளாஷ் பேக் வருகிறது.

இத்தனை பிரச்னைகளையும் தாண்டி வில்லன் குரூப்பை எப்படி ஜெயித்தார் ஹீரோ தனுஷ் என்பது தான் மீதி கதை.

தனுஷின் நடிப்பு. வயதான கதாபாத்திரம் போல தத்ரூபமாக நடித்துள்ளார் அவர். அவருக்கு தேசிய விருது காத்திருக்கிறது இந்த வருடம்.

வெற்றிமாறன் திரைக்கதை. வெக்கை என்ற நாவல் கதையை படமாக்கி இருந்தாலும், திரைக்கதை மற்றும் ரியலாக இருந்த காட்சியமைப்புகள் எந்த இடத்திலும் சலிப்படைய வைக்க வில்லை.

ஜீ.வி.பிரகாஷின் பின்னணி இசை, ராமரின் எடிட்டிங். முதல் பாதி படத்தில் நம்மை சீட்டின் நுனியிலேயே வைத்திருந்ததில் பெரிய பங்கு இசை மற்றும் எடிட்டிங்கிற்கு உண்டு.

மஞ்சு வாரியர், கென் கருணாஸ், டீஜே, அம்மு அபிராமி, பசுபதி, பிரகாஷ்ராஜ் என படத்தில் நடித்த அனைவரும் கச்சிதமாக நடித்திருந்தனர்.

கிளைமாக்ஸ் காட்சியில் தனுஷ் சொல்லும் கருத்துக்கு கிளாப்ஸ் அள்ளுகிறது. நம்மிடம் பொருள் இருந்தால் பிடுங்கிகொள்வார்கள். ஆனால் படிப்பு இருந்தால். என மக னுக்கு அவர் செய்யும் அட் வைஸ் தற்போதைய இளைய சமுதாயத்திற்கு நிச்சயம் சொல்லப்பட வேண்டிய ஒன்று. மொத்தத்தில் அசுரன் ஒரு வார்த்தையில் சொன்னால் வெறித்தனம்.




சினிமாவில் இந்த வாரம் சரியான போட்டி எனலாம். சயீரா நரசிம்ம ரெட்டி, அசுரன், ஜோக்கர் ஆகிய படங்களுடன் 100 சதவீதம் காதல் படமும் வெளியாகியுள்ளது. தெலுங்கிலிருந்து ரீமேக் ஆகியுள்ள இப்படம் எப்படியிருக்கிறது என பார்க்கலாம்.

கதையின் ஹீரோ ஜி.வி. பிரகாஷ் எதிலும் நான் தான் முதலிடத்தில் இருக்க வேண்டும் என நினைப்பவர். கல்லூரியில் எப்போதும் முதலிடம் பிடிக்கும் அவருக்கு சவாலாக அஜய் என்பவர் இருக்கிறார்.

இதற்கிடையில் கிராமத்தில் இருந்து படிக்க வந்துள்ள அவரின் முறைப்பெண் ஹீரோயின் ஷாலினி பாண்டே மாமா மாமா என ஜீ.வி.பிரகாஷையே சுற்றி வருகிறார்.

ஒரு கட்டத்தில் ஹீரோயின் மீது ஹீரோவுக்கு ஈர்ப்பு ஏற்பட பின்னர் அது வெளியே தெரியாத காதலாக இருந்து வருகிறது. கல்லூரியில் முதலிடம் பிடிப்பது கௌரவப் போட்டி போல பார்க்கப்படுகிறது. எதிர்பாராமல் ஹீரோயின் முதலிடத்தை பிடிக்கிறார். பின்னர் ஜி.வி.பிரகாஷின் நடவடிக்கைகள் எல்லாம் மாறுகிறது.

இதற்கிடையில் இருவருக்கும் அடிக்கடி ஈகோ சண்டைகள் வருகிறது. இறுதியில் கல்லூரியில் ஹீரோ ஜெயித்தாரா, இருவரும் காதலில் ஒன்று சேர்ந்தார்களா என்பதே இந்த 100% காதல்.

ஜி.வி.பிரகாஷ் தொடர்ந்து படங்களில் நடித்து வருகிறார். அண்மையில் அவருக்கு சிவப்பு மஞ்சள் பச்சை நல்ல பெயர் வாங்கிக் கொடுத்தது. ஆனால் அதை இந்த 100% காதல் தக்க வைக்கும் என்றால் கேள்விக்குறியாக தான் இருக்கிறது.

நல்ல திறமை இருக்கிற ஜி.வி ஏன் இந்த கதையை தேர்வு செய்தார் என அவரின் ரசிகர்களுக்கு மட்டுமல்ல பலருக்கு தோன்றலாம். படத்தில் அவர் ஹீரோவாக தன் திறமைகளை வெளிப்படுத்தியுள்ளார்.

சிறுபிள்ளை தனமாக சண்டை போடும் அவரின் கரக்டரும் காதலர்களுக்கு ரியாலிட்டியான ஒரு ஃபீல் கொடுக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ரியல் லைஃப் லவ் அட்ராசிட்டிஸ் என கூட சொல்லலாம்.

ஹீரோயின் ஷாலினி பாண்டே அர்ஜுன் ரெட்டி படம் மூலம் பிரபலமானவர். தற்போது 100% காதல் படம் மூலம் தமிழில் ஹீரோயினாக அறிமுகமாகியுள்ளார். அவரும் நடிப்பில் திறமையை வெளிப்படுத்துகிறார். ஹீரோவுக்கு இணையாக அவரும் இடம் பிடிக்கிறார். மேலும் கிளாமர் ஹீரோயினாக தன்னை காட்டியுள்ளார்.

ஹீரோயின் ஜி.வி. பிரகாஷ்க்கு ஆபத்தான நேரத்தில் ஒரு நண்பராக உதவ நினைப்பதும், காதலியாக எதிர்பார்ப்புடன் பிடிவாத சண்டைபோடுவதையும் காண்கையில் காதல் ஜோடிகளுக்கு தங்கள் வாழ்வின் கடந்த கால நினைவுகளை வரச்செய்திருக்கும்.

தெலுங்கில் நாக சைதன்யா, தமன்னா ஜோடி நடிப்பில் கடந்த 2011 ல் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்ற 100 % லவ் படத்தின் இந்த தமிழ் ரீமேக்கிற்கு இயக்குநர் சந்திரமௌலி இன்னும் கதையில் அழுத்தம் கொடுத்திருக்கலாம். எல்லாம் இருந்து ஏதோ மிஸ் ஆனது போல ஒரு ஃபீல்.

ஹீரோவுக்கு அப்பாவாக தலைவாசல் விஜய், அம்மாவாக ரேகா, பாட்டியாக ஜெயப்பிரதா, தாத்தாவாக நாசர், வேலையாளாக அப்புக்குட்டி, ஹீரோயின் அப்பாவாக இயக்குநர் ஆர். வி. உதயகுமார், தம்பி ராமையாக ஆகியோரின் நடிப்பும் யதார்த்தமானது.

படத்தின் ஒளிப்பதிவு காட்சிகள் படத்திற்கு ஏற்ற நல்ல முயற்சி. எடிட்டிங் வேலைகள் நைஸ் ஃபீலிங்.

படத்தில் பாடல், பின்னணி இசையென ஹீரோ ஜி.வி.பிரகாசே செய்திருக்கிறார்.

லவ் ஃபீல் உணர்வுகளுக்கு அவரை பற்றி உங்களுக்கே தெரியும். பமிலி செண்டிமெண்டாக எல்லோரின் நடிப்பும் ஓகே. ஹீரோ, ஹீரோயினுடனே சுற்றும் குழந்தைகளால் பன் பீல்.

தம்பி ராமையாவின் காமெடி கொஞ்சம் சிரிப்பூட்டும் ரகம். எதிர்பார்க்கும் பல விடயங்கள் இடம் பெறவில்லையோ என்ற பீல்.

மொத்தத்தில் 100% காதல் கல்லூரி காதல் ஜோடிகளுக்கு ஓகே. டைம் பாஸிங். ஆனால் மற்றவர்களுக்கு??

# என் ரோல் மொடல் கில்கிறிஸ்ட்

# ஆனால் சச்சினுக்கு தீவிர ரசிகன் நான்

## டோனி சுவாரசியம்

"ஒரு இரகசியமும் இல்லை. சும்மா ஃபேஷனாக இருக்கட்டுமே என்று நினைத்துத்தான் இந்த ஹேர் ஸ்டைலை வளர்த்தேன்"


சென்னை அடையாறு பார்க் ஷெராட்டன் ஹோட்டல். லப்டாப்பில் அடுத்த இன்டர் நஷன்ல் மட்ச் பட்டியலைப் பார்த்துக்கொண்டு இருக்கிறார் டோனி. பக்கவாட்டில் காத்திருக்கிறது லெமன் டீயும், பீட்ஸாவும்! கார்கோ பேன்ட், டி-ஷர்ட் என மப்டியில், அசத்தல் மாடலைப் போல இருக்கிறார் டோனி.

**• "அதிரடியாக, நிதானமாக என ஒவ்வொரு மட்சிலும் ஒவ்வொரு விதமாக விளையாடுகிறீர்களே... ஏன்?"**

"எதுவுமே நான் முடிவு பண்ணுவது கிடையாது. அது பாகிஸ்தானோ, அவுஸ்திரேலியாவோ... அந்த டீமைப் பற்றி எந்தக் கற்பனையோ பயமோ எனக்குள் வராது. அது ஒரு டீம், அவர்கள் நல்ல பிளேயர்கள்... அவ்வளவுதான் மனதுக்குள் நினைத்துக்கொள்வேன். நான் எத்தனையாவது பட்ஸ்மேனாக இறங்குகிறேன், அப்போது எவ்வளவு ஓட்டங்கள் எடுத்திருக்கிறோம், விக்கெட் என்ன, டார்கெட் என்ன... என அத்தனை விடயங்களையும் வைத்து மனதுக்குள் ஒரு கால்குலேஷன் போட்டிருப்பார் கப்டன். அவர் சொல்கிறபடி விளையாட வேண்டும். இதில் நானாக எதுவும் முடிவெடுக்க முடியாது. நாம்தான் முதல் பட்டிங் என்றால், கொஞ்சம் ஜாலியாக இருக்கும். அதிரடியாக விளையாடலாம்!" பைக்கில் அதிவேகமாகச் சுற்றுவது ரொம்பப் பிடித்த விடயம். கிரிக்கெட்டுக்கு வந்தபிறகு 3 சுப்பர் ஃபாஸ்ட் பைக்குகள் வாங்கிவிட்டேன்

**• "டோனிக்கு இந்தியா முழுக்க ரசிகர்கள். டோனி யாருடைய ரசிகர்?"**

"அவுஸ்திரேலியாவின் கில்கிறிஸ்ட் ஒரு நல்ல விக்கெட் கீப்பர். நல்ல பட்ஸ்மேன். அவர்தான் எனக்கு ரோல் மொடலும்கூட! இந்தியாவைப் பொறுத்தவரை நான் சச்சினின் தீவிர ரசிகன். நான் ரப்பர் பந்தில் விளையாட ஆரம்பித்ததே சச்சினின் விளையாட்டுகளைப் பார்த்துத்தான். 2004 ஆம் வருடம் பங்களாதேஷில் ஒரு டின்னரில் வைத்து சச்சினைப் பார்த்தேன். அப்போது அவரைப் பார்த்து என்னால் ஒரு வரிகூடப் பேச முடியவில்லை. இப்போது அப்படியில்லை. சச்சினும் நானும் டீம் பிளேயர்கள். சீனியாரிட்டி பார்க்காமல் ஜாலியாக இருக்கிறோம். அதைத்தான் சச்சினும் விரும்புகிறார்"



**• "அடிக்கடி ஃபுட்பால் விளையாடக் கிளம்புகிறீர்களே?"**

"என்னுடைய முதல் விளையாட்டே ஃபுட்பால்தான். அதோடு சேர்த்து கிரிக்கெட்டும் விளையாட ஆரம்பித்தேன். ராஞ்சியில் இருக்கிற என்.ஐ.எஸ். ஃபுட்பால் கோச்சிங் ஸ்கூலில் கோல்கீப்பராகச் சேர்ந்தேன். என்னுடைய தடுப்பாட்டம் அத்தனை பேருக்கும் பிடித்துவிட்டது. இந்திய ஃபுட்பால் டீமுக்கு செலெக்ட் ஆகி விடுவேன் என்ற நம்பிக்கையில் இதற்காகவே எனக்குச் சிறப்புப் பயிற்சிகள் கொடுத்தார்கள். ஆனால், இந்தியாவில் கிரிக்கெட்டுக்கு இருக்கும் வரவேற்பு என்னை அந்தப் பக்கம் திருப்பியது. இப்போது கிரிக்கெட்டிலும் அதே வேலையைத்தான் செய்கிறேன். அங்கே கோல் கீப்பர், இங்கே விக்கெட் கீப்பர். என்ன... பந்துதான் சிறியது"

**• "டோனி ஹேர் ஸ்டைல் இரகசியம் என்ன?"**

"ஒரு இரகசியமும் இல்லை. சும்மா ஃபேஷனாக இருக்கட்டுமே என்று நினைத்துத்தான் இந்த ஹேர் ஸ்டைலை வளர்த்தேன். இதற்குப் பிறகுதான் எனக்கு அத்தனை நல்ல விடயங்களும் நடந்தன. டீமில் ஒரு நல்ல இடம், நம்பர் ஒன் பட்ஸ்மேன் என நான் அடைந்த உயரங்களுக்கு இந்த ஹேர் ஸ்டைலும் ஒரு காரணம் என்று நினைக்கிறேன். இந்த முடியை நான் வெட்டும்போதெல்லாம் அடுத்து விளையாடும் மட்ச்சில் தோல்வி அடைந்திருக்கிறேன். அதனால், 2007 உலகக் கோப்பை வரை, இந்த முடியை நான் வெட்டப் போவது இல்லை."

**• "டோனியின் பொழுதுபோக்கு என்ன?"**

"எனக்குப் பிடித்தது எல்லாமே வேகம்தான்! பைக்கில் அதிவேகமாகச் சுற்றுவது ரொம்பப் பிடித்த விடயம். கிரிக்கெட்டுக்கு வந்த பிறகு 3 சுப்பர் ஃபாஸ்ட் பைக்குகள் வாங்கிவிட்டேன். கடைசியாக பத்து இலட்சம் ரூபாய் மதிப்புள்ள யமஹா வாங்கியிருக்கிறேன். இப்போது வி.ஐ.பி. ஆகிவிட்டதால் சாதாரண ரோட்டில் சுப்பர் ஃபாஸ்ட்டில் போக முடியவில்லை. அதனால், ராஞ்சி ரோட்டில் மட்டும் ஆசை தீர ஓட்டிப் பார்த்துக்கொள்கிறேன். என்னை மாதிரியான பைக் காதலர், நடிகர் ஜான் ஆபிரஹாம். இந்த விடயத்தில் அவர்தான் என்னுடைய ரோல் மொடல்!

## முதல் வெற்றியைப் பெற்றதும் அழுதுவிட்டேன்!

### ரிங்கு சிங் WWE இல் கால்பதித்த கதை

எத்தனை வருடங்கள் ஆனாலும் மாஸ் குறையாத அமெரிக்கன் டி.வி ஷோ WWE. ஆரம்பத்தில் WWF-ஆக இருந்த இந்தத் தொடர், தற்போது WWE என்ற பெயரில் நடந்து வருகிறது. உலகமெங்கும் இந்தத் தொடருக்கு ரசிகர்கள் ஏராளம். அதிகமான அமெரிக்கர்கள் பங்குபற்றி வந்த இந்தப் போட்டியில், அதிரடியாக நுழைந்து அட்டகாசப்படுத்தினார், இந்தியரான கிரேட் காளி. இந்நிலையில், மற்றொரு இந்தியரான ரிங்கு சிங் இந்தக் கோதாவில் குதித்துள்ளார்.

ரிங்குவின் தந்தை இரவு-பகலாக உழைத்து குடும்பத்தைப் பாதுகாத்து வந்துள்ளார். ஒரு சிறிய அறைகொண்ட வீட்டில்தான் ரிங்குவின் குடும்பம் வாழ்ந்து வந்தது. ரிங்குவுக்கு சிறுவயது முதலே விளையாட்டின் மீது அதீத ஆர்வம். ஒலிம்பிக்கில் பங்குபற்றி இந்தியாவுக்காகத் தங்கம் வெல்ல வேண்டும் என்பதுதான் சிறுவயது கனவு. அதற்கு அவர் தேர்ந்தெடுத்த விளையாட்டு, ஈட்டி எறிதல். அதில் சிறப்பாகச் செயற்பட்டவர், ஒலிம்பிக் செல்வதற்காகக் கேம்ப்புக்குத் தேர்வானார்.

ஆனால், விதி வேறுமாதிரி விளையாடியது. வாழ்க்கை அவரை வேறொரு தளத்துக்குக் கொண்டு சென்றது. பேஸ்போல் விளையாடுவதற்கு அமெரிக்கா சென்றார். அமெரிக்காவில் நடக்கும் பிரபலமான பேஸ்போல் தொடருக்குத் தேர்வான முதல் இந்தியர் என்ற பெருமையைப் பெற்றார். இந்நிலையில், அவரது கவனம் மல்யுத்தம் பக்கம் திரும்பியது. ஜனவரி 2018 ஆம் ஆண்டு, WWE கான்ட்ராக்ட்டில் கையொப்பமிட்டார்.

தன் வாழ்க்கைப் பயணம் குறித்து ஆங்கில ஊடகத்திடம் பேசியுள்ள ரிங்கு சிங், "எல்லோரும் ஒரு குறிப்பிட்ட இடத்தை அடையக் கடுமையாக உழைக்க வேண்டும். என் தந்தை கடுமையாக உழைத்து, என் குடும்பத்தின் தேவையைப் பூர்த்தி செய்தார். ஒரு முறை அவருக்கு விபத்து ஏற்பட்டுவிட்டது. ஐந்து நாட்கள் பட்டினியாக இருந்தோம். அந்தச் சூழலில், எனது அம்மா தனது நகைகளைக் கொடுத்து எங்களது வறுமையைப் போக்கினார். அந்தச் சம்பவம் என் மனதைக் கடுமையாகப் பாதித்தது. 18 வயதில் அமெரிக்காவுக்குச் சென்றேன். அந்தச் சூழலே கடினமானதாக இருந்தது. நான் கடுமையாகப் போராடினேன். அதை எல்லாம் எனது டயரியில் குறித்து வைத்துக்கொண்டேன்.

எந்த விளையாட்டாக இருந்தாலும் அதில் உள்ள நுட்பமான சில விடயங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும். அதைச் சரியாகச் செய்ய வேண்டும். விளையாட்டின் மீது கொண்ட ஈடுபாடும் என்னுடைய பொறுமையும் பல்வேறு விளையாட்டுகளில் தொடர அனுமதித்தது. முதல் போட்டி யில் வெற்றிபெற்ற தருணத்தை என்னால் மறக்க முடியாது. வெற்றிபெற்றதும் நான் அழத்தொடங்கிவிட்டேன். என் அம்மாவைத் தேட ஆரம்பித்தேன். உண்மையில். அது மறக்க முடியாத நாள்" என்று தெரிவித்துள்ளார்.



# குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை

ஒரு முறை சோக்ரட்டீஸ் ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கும் போது ஒருவர் வந்து அவருடைய நண்பரைப் பற்றி ஏதோ கூற முயன்றார்.

உடனே சோக்ரட்டீஸ் அவரிடம் . "என் நண்பரைப் பற்றி என்னிடம் கூற விரும்பினால் அதற்கு முன் 3 கேள்விகளை கேட்பேன்.

மூன்று கேள்விக்கும் ஆம் என பதில் இருந்தால் மட்டுமே நீங்கள் அவரைப் பற்றி கூறலாம்"என்றார்.

சோக்ரட்டீஸ் முதல் கேள்வியை கேட்டார்

"அவர் செய்த செயலை நேரடியாகப் பார்த்துவிட்டு தான் அவரைப் பற்றி கூறுகிறாயா ?" என்று கேட்டார்.

இல்லை என பதில் சொன்னார்.

"அவரைப் பற்றிய நல்ல விடயத்தை கூறப்போகிறாயா? " என்று இரண்டாவது கேள்வியைக் கேட்டார்.

இல்லை என பதில் சொன்னார்.

"அந்த நண்பரைப் பற்றி என்னிடம் கூறினால் யாராவது பயனடைவார்களா......???" என்ற மூன்றாவது கேள்வியைக் கேட்டார். இதற்கும் இல்லை என்றே பதில் வந்தது.

"யாருக்கும்பயனில்லாத. நல்லவிஷயமுமில்லாத.

நேரடியாக நீங்கள் பார்க்காத. என் நண்பரைப் பற்றிய சம்பவத்தைதயவு செய்து என்னிடம் கூறாதீர்கள்" என்றார்.

நல்ல நட்பு ஆரோக்கியமான விவாதங்களையே மேற்கொள்ளும். நண்பர்கள் ஐதரசன் வாயுவினால் நிரப்பப் பட்ட பலூன் போன்றவர்கள்.

நீங்கள் விட்டு விட்டால் எங்கோ பறந்து சென்று விடுவார்கள். பத்திரமாக பிடித்துக் கொள்ளுங்கள்.....!!!

உலகில் சிறுதவறு கூட செய்யாதவர்களே இல்லை. மேலும் மன்னிக்க முடியாத குற்றம் என்றும் ஏதுமில்லை! எனவே.வார்த்தைகளால் யாரையும் பிழிக்காதீர்கள். வசவுகளால்இதயங்களை கிழிக்காதீர்கள். நல்லுறவை வன்முறையால் இழக்காதீர்கள். நட்புறவை இழிமொழியால் துளைக்காதீர்கள். மனிதர்கள் இரத்தமும்சதையும். உணர்ச்சிகளாலும் உருவாக்கப்பட்டவர்கள். நீங்கள் யாரையும் இழந்து விடாதீர்கள்.

# பகத்சிங்

"தூக்கிலிடும் முன் கடைசி ஆசை என்ன?"" என பகத்சிங்கிடம் கேட்டார்கள்."பேபி கையால் ரொட்டி வேண்டும்" என்றார்.

சிறை அதிகாரி அதிர்ந்து போனார். காரணம் "பேபி என்ற பெண்" சிறையில் மலம் அள்ளுபவர். ஆனால் பகத்சிங், "அவர் தான் ரொட்டி செய்து தர வேண்டும்" என உறுதியாய் கூற. பேபியும் அழைத்து வரப்பட்டார். "நான் மலம் அள்ளுபவர். ரொட்டி செய்து தர மாட்டேன்" எனக் கூறி மறுக்க... "என் தாயும் மலம் அள்ளுகிறார். அதற்காக என் தாயின் கைகளில் சாப்பிடாமல் இருக்கிறேனா?

ஒரு பிள்ளையின் மலம் அள்ளுபவரே தாய் என்றால், ஊரார் பிள்ளைகளின் மலத்தை அள்ளும் நீங்கள், தாயினும் மேலானவர்" என்று சொன்னார் பகத்சிங்..



# நரியும் அதன் நிழலும்

ஒரு நரி அதிகாலை எழுந்து மேற்கு நோக்கி வேட்டைக் குப் புறப்பட்டது. கிழக்கே இருந்து எழுந்த சூரிய ஒளியில் அதன் நிழல் வெகு நீளமாய் வெகு பிரமாண்டமாய்த் தெரிந்தது. நரிக்கு ஏக குஷி."நான் ரொம்பப் பெரியஆளாக்கும். இவ்வளவு பெரிய எனக்குப் பசி தீர வேண்டும் என்றால் குறைந்தபட்சம் ஒரு யானை அல்லது ஒட்டகமாவது கிடைத்தால் தான் கட்டுப்படியாகும்!' என்று ஊளையிட்டது.

கொஞ்சம் சின்ன விலங்குகளை ஏளனத்துடன் அலட்சியப்படுத்தியபடி தன் பசிக்குக் குறைந்தபட்சம் ஒரு யானை, யானை என்றபடி காடு முழுவதும் ஓடிக் கொண்டே இருந்தது. தேடிக் கொண்டே இருந்தது. பாவம், ஒன்றும் கிடைக்கவில்லை. மதியம் தலைக்கு மேலே உச்சியில் சூரியன் வந்தபோது நரியின் நிழல் சிறுத்து அதன் காலடியில் விழுந்திருந்தது."ஆஹா பசியால் நாம் எவ்வளவு இளைத்துப் போய்விட்டோம்" சிறுத்து விட்டோம்என்று வருந்தியது நரி.

இளைத்துப் போன இந்த அளவுக்கு ஒரு ஆட்டுக் குட்டியோ,கோழியோ கிடைத்தால் கூட போதுமானது என்று தேடியது. ம்ஹூம்,பயனில்லை. மாலையில் மேற்கே வந்த சூரியனால் நரியின் நிழல் நரிக்குப் பின்பாக விழுந்தது.. அதனால், நரிக்குத் தன் நிழலே தெரிய வில்லை"ஆஹா.. நாம் வெகுவாக இளைத்து விட்டோம். நாம் இல்லவே இல்லை போலிருக்கிறது. ஒரு வேளை இறந்துபோய் விட்டோமோ?' என்று பயந்தது.

பிறகு, "சீச்சி.. நாம் உயிரோடு தான் இருக்கிறோம். இந்தப் பசிக்குஒரு கோழிக்குஞ்சு, ஏன், ஓர் எறும்பு கிடைத்தால் கூட போதும்..என்று நாக்கைத் தொங்க விட்டபடி தள்ளாடி, தள்ளாடி நடந்தது. இந்த நரியின் சூகற்பனை மாதிரி தான் சிலர் தங்களை வெகு பிரமாதமாக எண்ணிக் கொண்டு தங்கள் திருப்திக்கு எதை, எதையோ தேடுகின்றனர். கிடைத்த பல சூபரிசுகளை ஒதுக்கி விட்டுஅலைகின்றனர். முடிவில் ஏதாவது கிடைக்காதா என்று ஏங்கி வாடுகின்றனர்.

காலை நரிபோல் கர்வத்தோடு தேடவும் வேண்டாம் மாலை நரிபோல் சூகவலையோடு வாடவும் வேண்டாம். இயல்பாக இருப்போம், ஒரு குழந்தையின் மனதுடன் வாழ்வோம், வாழ்வைக் கொண்டாடுவோம்.

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1850

## பிரபு

வாழ்க்கையின் கஷ்டங்களை பிள்ளைகளுக்குத் தெரியாமல் பிள்ளைகளின் மகிழ்ச்சியில் தன் கஷ்டங்களை கரைப்பவர் தான் அப்பா



## சுனில்

அம்மாவின் வலியை ஐந்து வயதில் கூட உணரலாம்... ஆனால் ஒரு தந்தையின் வலியை தந்தையானால் மட்டுமே உணர முடியும்.



## பத்ரி

சில மாதங்கள் ஓர் உயிரை சுமக்கும் பெண்மையை போற்றும் இந்தச் சமூகம் ஆயுள் முழுவதும் ஒரு குடும்பத்தையே சுமக்கும் ஆண்களை மறந்து விடுகிறது




## இளங்கோ

எத்தனையோ பேர் நான் இருக்கிறேன் எனச் சொன்னாலும் அப்பாவைப் போல் யார் இருக்க முடியும்?



## சிவா

இன்றைய தின் கடினமாக இருக்கலாம்... நாளை மிக மோசமான தினமாக இருக்கலாம்... ஆனால் நாளை மறுதினம் நிச்சயம் பிரகாசமாக இருக்கும்



## கபில்

நீ சாதிக்கனும்னு நினைக்கிற உயரத்தை அடையிற வரைக்கும் தோத்துருவோம் என்ற நினைப்பு உனக்கு வரவே கூடாது




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 201

## வாழைப்பழங்கள் மனிதனுக்கு ஆற்றலையும் சக்தியையும் கொடுக்கும்



வாழை ஒரு மரவகையைச் சேர்ந்ததல்ல. அது தாவர வகையைச் சேர்ந்தது. பூண்டுத் தாவரங்கள் சேர்ந்த பேரினம். உலகிலேயே பெரிய தாவரம் வெப்பம் மிகுந்த ஈரலிப்பான காலநிலையிலேயே இது வளருகின்றது.


உலகில் எல்லாப் பாகங்களிலும் எல்லா நேரங்களிலும் விலைகுறைவான அதே வேளை எல்லாச் சத்துக்களும் நிறைந்த பழம் வாழைப்பழமாகத்தான் இருக்கும். எமது சமூகத்தில் குழந்தைகளுக்கு முதல் ஊட்டும் பழம் அதிகமாக வாழைப்பழமாகத்தான் இருக்கின்றது. எனவே சிறியோர் முதல் பெரியோர் வரை பயன்படுத்தக்கூடிய இலகுவில் ஜீரணிக்கக்கூடிய கட்டமைப்பைக் கொண்டுள்ள பழம் வாழைப்பழம் ஆகும். இதில் காணப்படும் பிரக்ரோசும், குளுக்கோசும் உடலுக்கு உடனடியாகவே ஆற்றலையும், சக்தியையும் கொடுக்க வல்லவை.

### வாழைப்பழத்தைப் பற்றிய சில தகவல்கள்

1. வாழைப்பழம் ஒரு மனிதனுக்கு கிடைக்கும் ஊட்டச்சத்து மட்டுமல்ல. நோய்கள் வராமல் தடுக்கக்கூடிய நோய்த்தடுப்பு நாசினியும் கூட. இன்றைய விஞ்ஞானிகளும் சத்துணவு நிபுணர்களும் உலகில் தரமான உணவு வாழைப்பழம் என பரிந்துரை செய்கிறார்கள்.

2. நமது மூளை அமைதியடைய செராடோனின் என்னும் கூட்டுப் பொருள் தேவை. இந்த செராடோனின் உற்பத்தியாவதற்கு காரணமாகப் ட்ரைப்டோபன் (Triptoptan) என்கின்ற அமினோ அமிலம் உள்ளது. இந்த Triptoptan வாழைப்பழத்தில் ஏராளம் உள்ளது.

3. வாழைப்பழம் உலர்ந்து சருமத்துக்கு மிகுந்த ஈரப்பதனை அளிக்கக் கூடியது. இதில் காணப்படும் பொட்டாசியம் மூளையின் செயற்பாட்டுத் திறனை அதிகரிக்கச் செய்கிறது.



4. எல்லாக் காலநிலைகளிலும் கிடைக்கும் பழம் வாழைப்பழம். இதர ஏனைய பழங்களைப் போல் இது வாழைமரத்திலேயே சரிவரக் கனிவதில்லை. அவை காயாக இருக்கும்போது குலை வெட்டப்படுகிறது. பழுக்கவைக்கப்படுகின்றன. இதன் காரணமாக வாழைப்பழத்தை வெகுதூரமான இடங்களுக்கு அனுப்புவது சாத்தியமாகிறது.

5. வாழைப்பழத்தில் பல ஊட்டச்சத்துக்கள் பரவலாக அடங்கி இருந்தாலும் பொட்டாசியத்தைத் தவிர்ந்த வேறு எந்த தனிப்பட்ட மிகுந்த அளவில் இல்லை. இந்தத் தாது உப்பு, மற்றத்தாது உப்புக்களைப் போல் உடல் நலத்துக்கு மிகவும் இன்றியமையாதது. வாழைப்பழத்தில் சோடியம் சத்து மிகவும் குறைவு. சோடியம் அற்ற உணவாகவும், உப்பு கொழுப்பு அற்ற உணவாகவும் வாழைப்பழம் காணப்படுகின்றது. இதனுடைய மென்மையான கட்டமைப்புக் காரணமாக இருதயநோயாளிகள், உயர் குருதியமுக்கம், வயிற்றுப் புண் மற்றும் மலச்சிக்கல் போன்ற நோயாளிகளுக்கு இது சிறப்பான உணவாகும்.

6. வாழைப்பழத்தில் மிதமான கலோரியே அடங்கியிருப்பதால் இதனை உண்பவருக்குச் சிறந்த திருப்தியை அளிக்கின்றது.

7. பழுக்காக வாழைக்காயில் கார்போவைதரேட், மாப்பொருள் வடிவில் உள்ளது. நன்கு பழுக்கவைக்கும் போது இந்த மாப்பொருள், சுக்குரோஸ், குளுக்கோஸ், பரக்ரோஸ் போன்ற வெல்லங்களாக மாற்றமடைகின்றது. நன்கு பழுத்த வாழைப்பழத்தைச் சாப்பிடும்போது இந்த வெல்லங்களின் ஒரு பகுதி உடனடியாக எமது உடலால் உட்கவரப்படுகிறது. அடுத்த 15 நிமிடங்களிலேயே குருதியில் வெல்லமட்டம் அதிகரிப்பதை அவதானிக்கலாம். மீதி உணவுப்பகுதி சற்று மெதுவாக உடலால் உட்கவரப்படுகிறது. இது சற்று நீண்ட நேரத்திற்கு உடலுக்கு வேண்டிய ஆற்றலைக் கொடுக்கிறது. எனவே களைப்பான நேரங்களில் வாழைப்பழங்களை உண்டால் உடலும், மனமும் சுறுசுறுப்பாக இயங்குகின்றன.

வாழைமரங்கள் எமது மண்ணில் இலகுவாக செளித்து வளரக்கூடியவை. எனவே வீடுகள் தோறும் வாழை மரங்கள் நாட்டி பயன்பெறுவோம்.

S.சுதாகரன்
தாதிய உத்தியோகத்தர்
போதனா வைத்தியசாலை
யாழ்ப்பாணம்

## பருப்புவகைகள் உண்பதால் கிடைக்கும் பயன்கள்



பருப்புவகைகள் புரதத்தினைக் கொண்ட நல்ல உணவாக மட்டுமல்லாது அவை கரையக்கூடிய அதிக நார்ப்பொருட்களையும், காபோவைதரேற்றின் கலவைகளையும் விற்றமின் மற்றும் கனியுப்புக்களையும் கொண்டுள்ளன. இவை கொழுப்பு குறைந்தவையாகும். பருப்புகளை வழமையாக சாப்பிடுவதன் மூலம் நீரிழிவு நோயின் ஆபத்தைக் குறைக்க முடியும்.

**புரதம்** - சைவ உணவுகளில் தானியங்களுடன் பருப்புகளை (போஞ்சி, பயற்றம்பயறு, கௌபி அல்லது பருப்பு [lentils]) சேர்க்கும் போது எல்லா அத்தியாவசியமான அமினோ அமிலங்களையும் உள்ளடக்கிய ஒரு தரமான புரதத்தை பெற்றுக் கொள்ள முடியும்.

உதாரணம் பருப்பு, கொள்ளு, கௌபி, பயறு,சோறு

**விற்றமின்கள்** - பருப்புகளில் விற்றமின் B அதிகமாக உள்ளது. முளைத்தலின் போது விற்றமின் B மற்றும் உள்ளடக்கமானது அதிகரிக்கின்றது.

**இரும்பு** – பருப்புகளில் இரும்பு உள்ளது. ஆனாலும் அவை உடலினால் உடனடியாக அகத்துறிஞ்சக் கூடிய நிலையில் இருப்பதில்லை.

முளைக்கின்ற போதும் புளித்துப் பொங்குகின்ற போதும் (Fermentation) பெற்றுக் கொள்ளக் கூடிய இரும்பின் அளவு (bioavailability) அதிகரிக்கின்றது.

**நல்ல பருப்புக்களின் தெரிவுக்கு** : பருப்பு, பட்டாணிக்கடலை, கௌபி, பயறு, சோயா, அவரை விதைகள் போன்றன.

சோயாவிலும் கூடிய புரதம், விற்றமின்கள், கனியுப்புக்கள், கொழுப்பு மற்றும் நார்ப்பொருட்கள் காணப்படுகிறது. வடிவமைக்கப்பட்ட காய்கறிப் புரதம் (TVP-Textured vegetable protein) ஆனது.

இலங்கையில் பொதுவாக பயன்னடுத்துகின்ற சோயா அவரையிலிருந்து தயாரிக்கப்பட்ட ஒரு உணவு உற்பத்தியாகும். சோயா அவரை மற்றும் சோயா உற்பத்திகள் சைவ உணவுகளை உட்கொள்பவர்களுக்கு ஒரு சிறந்த உணவாகும்.

மருத்துவக் குழு

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்